
பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை
20/=

புதுமை : 01 | 26 நவம்பர் 2016 | விதி : 24



## மாவீரர் நாள்



## முதல் மாவீரர்



## வெள்ளை நிற வேரறுப்பு

## புத்தனின் கொலை வாள்



புத்தனின் மகாவம்ச
இஸத்தின் கடைசி வரி
"காவி நிற ஆடை
அணிந்திருக்கும் சீடர்கள்
யாரையும்
கொலை செய்ய முடியும்,
யாரையும்
புணர்ந்து கொள்ள முடியும்,
யாரையும்
இழிவு படுத்த முடியும்,
யாரையும்
துன்பப்படுத்த முடியும்"
பௌத்த சாசனத்தின்
ஒடுக்குமுறை சட்டம்
சிங்கள மொழியின் தனி உரிமம்
ஆக்கிரமிக்கப்பட்ட
நிலமெங்கும்
இரத்தம் கொப்பளிக்க
ஓங்கி ஒலிக்கிறது.
தம்பதத்தின்
"புத்தன் சரணம் கச்சாமி..."
மதவாதம் போதிக்கும்
போதிமரத்தின் நிழலில்
கூர்மையாக்கப்பட்ட
கொலைவாள்கள்
மதத்தால்,
இனத்தால்,
மொழியால்,
சீலர்களின் கரங்களுள்
புத்தரின் உருவத்தினூடே
அரங்கேற்றப்படுகிறது.
கலியுகத்தின் அகோர
முகங்களுடன்.
தேசத்தின்
புத்த யாப்பு அதிகாரம்
புத்தனின் சமாதி
முத்தி நிலை அருபம்
மூத்திர முடுக்குகள்,
குப்பைத் திடல்கள்,
பாழ் வளவுகள்,
மலை முகடுகள்
வெள்ளையடிக்கப்பட்ட
கற்களில் நிறுவப்படுகிறது.
புத்தரின் வழித்தோன்றலில்
பன்றி மலத்தைத்
தின்று பழக்கப்பட்ட
ஆண்மையிழந்த
'ஆமுத்துறு' ஓநாய்களின்
வாய்களிலிருந்து ஒழுகுகின்றன
ஆதிக்குடிகளின்
மூல இருப்பு அழிப்புக்கான
துவேசத்தின் தூஷசண
வார்த்தைகள். ?
கடவுள் யாருடைய கொலை
வாள்?

**கோ.நாதன்**

## தொடர்கதை



# 24 ஆறாவடு

சயந்தன்

ஒரு சோடி செருப்பிற்காக தேவபாலுவை நானே மரண வாசலுக்கு அழைத்துச் சென்றேன் என்று நினைத்த போது இவனில் கண்ணீர் உகுந்தபடியிருந்தது. ஒரு வயதும் நிரம்பாத அவனின் குழந்தையின் சாபத்தில், செத்த பிறகும் நான் நிம்மதியடையப் போவதில்லை என்று நினைத்தான்.

சுடலையில் மத்தியான நேரத்துச் சவம் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. பிரேதத்தை எரிக்கிற போது உடனடியாகக் கிளம்பும் மணங்கள் தணிந்திருந்தன. பஸ்ஸிலிருந்து ஆமிக்காரர்களும் மற்றையவர்களும் தொப்.. தொப் என்று குதித்தார்கள். இவர்கள் அவ்வளவு பேரையும் இழுத்துக் கீழே போட்டார்கள். இருளில் கரிய உருவங்களாக அவர்கள் அசைந்தார்கள்.

"எல்லாரும் அப்பிடி, அப்பிடியே குப்பிறப்படுங்கோ"

துப்பாக்கி 'லோட்' செய்கிற சத்தம் எதையோ முறிக்கிற மாதிரிக் கேட்டது

"ஒருவரும் குளறவோ, கத்தி ஆர்ப்பாட்டம் செய்யவோ கூடாது. அப்பிடி ஏதாவது நடந்தால் மண்டை சிதறும். இல்லாவிட்டாலும் சிதறும்.. ஹா..ஹா.." என்று சிரித்த குரல் தேய்ந்த கொஞ்ச நேரத்தில் சத்தம் கேட்டது.

"டட்... டட்... டட்..."

இவனது இரத்தம் சில்லிட்டு உறைந்ததைப் போல உணர்ந்தான். அடிவயிற்றுக்குள் குளிர்ந்தது. வாயிலிருந்து எச்சில் தன் பாட்டில் வழிந்து கொண்டிருந்தது. பிறகு இன்னுமொரு வெடி ஒலி கேட்டது. ஒவ்வொரு சத்தத்தின் போதும் இவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். சத்தங்கள் ஒன்று.. இரண்டு... மூன்று எனத் தொடர்ந்து கொண்டிருந்தன. அடுத்த குண்டு தனக்கானது என்ற நினைப்பு, ஒவ்வொரு முறையும் உள்ளே ஓடிற்று. ஏழு அல்லது எட்டுக் குண்டுகள் பாய்ந்த பிறகும் இவன் உயிரோடிருந்து அழுதுகொண்டிருந்தான்.

தேவபாலுவின் அனுங்கல் குரல் கேட்டது. திடீரென்று சிரிப்புச் சத்தங்களும் கேட்டன. அது கொலைச் சிரிப்பாக இருக்கக் கூடும் என்று நினைத்தான்.

"என்ன எல்லாரும் பயந்திட்டியளே..? ஹா... ஹா... சரி, சரி எழும்பலாம்" செருப்பணிந்த கால்கள் அவனின் முதுகில் தள்ளி உடலை திருப்ப முயற்சித்தன. தலையை மெதுவாகத் திருப்பினான். பக்கத்தில் காந்தன் அசைவது தெரிந்தது. உடம்பு மூட்டுகளிலும் கொழுவி இழுப்பது போல் வலித்தது. படுத்திருந்தபடியே, உடலைத் திருப்பினான்.

> "வடிவா யோசிச்சுப் பாருங்கே. எல்லாத்திற்கும் யார் காரணம் என்று யோசிச்சுப் பாருங்கோ"

துவக்குகளை மேலே உயர்த்திப் பிடித்தபடி தமிழ் இளைஞர்கள் நின்றிருந்தார்கள். "உங்களுக்கு நல்ல சாவே வராதடா... நாயளே" என்ற வார்த்தைகள் இவனது உதடுவரை வந்து நின்றன.

"நீங்கள் ஏன்? சாகவேணும்" என்று துப்பாக்கி மனிதர்களில் ஒருவன் கேட்டான். "வடிவா யோசிச்சுப் பாருங்கே, எல்லாத்திற்கும் யார் காரணம் என்று யோசிச்சுப் பாருங்கோ புலிகள் தங்கடை தாச்சி விளையாட்டை நிப்பாட்டும் வரைக்கும், இது மாதிரியான சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும். அல்லது புலிகளை இல்லாமல் செய்யும் வரைக்கும்" அவன் நிறுத்திச் சற்று நேரம் அமைதியாயிருந்தான். பிறகு "நீங்கள் ஏன் எங்களோடை சேரக்கூடாது?" என்று கேட்டான்.

"எங்களுக்குப் பின்னாலை இந்தியா நிக்குது. எங்களோடை நிறையப் பேர் சேர்ந்து கொண்டிருக்கினம். நீங்களும் சேருங்கோ. விட்டுவிடுறோம்" யாரும் எதுவும் பேசவில்லை.

அவன் சின்ன இடைவெளிவிட்டுத் தொடர்ந்தான்.

"இல்லாட்டி வேறை வழி இல்லை. எல்லாரும் இப்பவே போய்ச் சேர வேண்டியதுதான். ம்... யாரெல்லாம் வாறியள்? யாரெல்லாம் போறியள்?"

சந்திரன் தான் முதலில் கையை உயர்த்தினான். பிறகு தேவபாலு சரண்டர் ஆவதைப் போல உயர்த்தினான். மூன்றாவது இவனது கை உயர்ந்தது.

இரண்டாவது நாள் துவக்குச் சுடவும், கிரனேட்டை கழட்டி எறியவும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்படியே இரண்டு, மூன்று நாள் பயிற்சிகள் கடந்த பிறகு ஒரு நாள் இவன் பொறுப்பாளரிடம் தயங்கித் தயங்கி கேட்டான் "அண்ணன், எங்கடை தலைவர் யாரெண்டு இண்டைக்கு வரைக்கும் சொல்லேல்லையே"

"இதென்ன வெக்கக்கேடு! எங்கடை தலைவர் வரதராஜப்பெருமாள் தானே!"

இந்தச் சனியன்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றினால், 'பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயிலுக்கு' வருடா வருடம் காவடி எடுப்பதாக, அந்தக் கணத்தில் இவன் நேர்த்தியொன்றை வைத்தான்.

**(வலிகள் இன்னும்...)**



## விதி

ஆலமரத்தடிப் பிள்ளையார், ஆலயத்துக் கருவறைப் பிள்ளையாரைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார்.

"ஏனப்பா என்னைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறாய்"

"நீயோ சுகவாசி... நானோ தெருவாசி எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பனவு இருக்க வேண்டும். நான் மழையில் நனைந்து, வெயிலில் காய்கிறேன்... எல்லாம் என் தலை விதி... ம்"

மீண்டும் பெருமூச்சு.

சற்று நேர அமைதியின் பின் ஆலயத்துக் கருவறைப் பிள்ளையார் சுடு மூச்சுடன் பதில் கூறினார்...

"நீயோ சுதந்திரவாசி. நானோ சிறைவாசி. என் தலைவிதி உனக்குத் தெரியுமா?"



## நியதி

வாழைத்தோப்பு.

ஊரில் ஒரு வீட்டில் திருமணம். இன்னொரு வீட்டில் மரண நிகழ்வு.

இரு இடங்களிலிருந்தும் ஆட்கள் வந்து தோப்புக்காரனிடம் வாழை மரங்கள் வாங்கிச் சென்றார்கள்.

திருமணவீட்டு வாசலிலும் வாழைகள் கட்டப்பட்டன.

மரண வீட்டு வாசலிலும் அப்படியே.

ஒரே தோப்பில் அருகருகே நின்ற வாழைகளின் விதி இப்படியாக...!

இரண்டொரு நாட்களில் நான்கு வாழைமரங்களும் குலைகள் வெட்டப்பட்ட பின்னர் குப்பை மேட்டில் வீசப்பட்டுக் கிடந்தன.

வீதியால் போனவன் தனக்குள் நினைத்துக் கொண்டான். "சாவீடோ, திருமண வீடோ எதுவானால் என்ன? குப்பை மேடுதான் விதியோ?"

**ராதேயன்**

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

# புதுக்குடியிருப்பு: புலிகளின் இதயநகரம்



எங்கள் ஊர் தோபியாஸ் கடையில் வேலை செய்த சண்முகராசாதான் புதுக்குடியிருப்புக்கு எங்களை அழைத்துச் சென்றான். அவனுடைய ஊர் தேவிபுரம். புதுக்குடியிருப்புக்குக் கிட்டவாக இருக்கும் சிறிய கிராமம். தன்னுடைய ஊரைப்பற்றி எப்போதும் கதை, கதையாகச் சொல்லிக் கொண்டேயிருப்பான். அதில் எங்களை வியப்பில் ஆழ்த்தியவை, யானைகளைப் பற்றிய கதைகள். தங்கள் வீட்டுக் கூரையை இரண்டு தடவை யானைகள் பிடுங்க முயற்சித்ததாம். அவர்கள் வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் போதே யானைகள் இப்படிச் செய்திருக்கின்றன. கூரையைப் பெயர்க்கும் ஓசை கேட்டுத் தாங்கள் விழித்துக் கொண்டு, சத்தமிட்டு, தீப்பந்தம் கொளுத்தி அவற்றை விரட்டியதாகக் கூறினான். வளவிலுள்ள தென்னைகளையும், வயலில் உள்ள சூட்டுக் குவியலையும் யானைகள் வந்து சாப்பிட்டு விட்டுப்போகுமாம். எல்லாவற்றுக்கும் காவல் இருந்து யானைகளைக் கலைத்தால்தான் உண்டு. இல்லையென்றால் எல்லாமே நாசம். யானையைக் கலைப்பதென்றால் அது லேசுப்பட்ட காரியமா? எங்களுக்கு எல்லாமே திகிலாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. எங்கள் ஊரிலும் காடிருந்தது. அந்தக் காட்டில் மான், மரை, முயல், நரி, பன்றி, உடும்பு, ஓநாய் எல்லாமிருந்தன. யானைகள் மட்டுமில்லை. ஆனால் தேவிபுரத்தில் வீட்டுக்கே யானை வருகிறது என்றால் ஆச்சரியத்தை உண்டு பண்ணாதா என்ன?

எப்படியாவது தேவிபுரத்துக்குப்போக வேணும். அங்கே யானைகளைப் பார்க்க வேணும் என்ற ஆசை வளர்ந்து கொண்டேயிருந்தது. தோபியாஸ், தனத்துக்கு லீவு கொடுத்தார். ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி நாங்கள் தனத்தோடு கிளம்பினோம். யானைகளைப் பார்க்கும் ஆவல் இருந்தாலும் உள்ளூர ஒரு அச்சம். யானைகள் விரட்டினால்..?

## அச்சமூட்டும் யானைக்கதைகள்

தனம் எங்களை நேரே புதுக்குடியிருப்புக்கே கூட்டிச் சென்றான். நாங்கள் போயிருந்த போது, அங்கும் இரண்டு தேநீர்க் கடைகளே இருந்தன. அதைவிட ஐந்தாறு பலசரக்குக் கடைகள், ஒரு சிறிய சந்தை, சுற்றிவர பனங்கூடல்களும் குடிசை வீடுகளும், அங்கங்கே ஒன்றிரண்டு ஓட்டுக்கூரைகள் தெரிந்தன. மின்சாரம் கிடையாது. தூங்கி வழிந்து கொண்டிருக்கும் அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் இருளில் மெல்லியதாக மினுங்கிக் கொண்டிருந்தது சந்தி. சனங்களை விடத் தெருவிலும் சந்தியிலும் மாடுகளின் கூட்டமே அதிகம். அச்சு அசலாக எங்கள் ஊரைப்போலவே இருந்தது புதுக்குடியிருப்பு. ஒரு யானை கூட இல்லை.

"ஏன்டா சண்முகராசா, இங்கயெல்லாம் யானைதான் நிற்குமெண்டாய், ஒரு யானையைக் கூடப்பார்க்க முடியேல்லயே" என்றான் யோகன். யானையைப் பார்க்கும் ஆவல் பொங்கிக் கொண்டேயிருந்தது. இந்தப் பயணமே யானையைப் பார்ப்பதற்காகத்தானே. "யானை என்ன சந்திக்கு ரீ குடிக்கவா வரும்? இருடா, காட்டுறன் விளையாட்டை" என்றான் சண்முகராசா.

நாங்கள் புதுக்குடியிருப்பில் சில பொருட்களை வாங்கிக் கொண்டு தேவிபுரத்துக்கு நடந்தோம். சிறிய ஒடுங்கிய தெரு. சுற்றி அடர்ந்த காடு. எங்கள் ஊர்க்காடு இப்படியல்ல. இங்கே ஓங்கி உயர்ந்த மரங்கள். அடர்ந்த காடு. "இது தான்டா கானகம்" என்றான் சண்முகராசா. வழிநெடுக யானைகளைப் பற்றிய ஏராளம் கதைகளைச் சொல்லிக் கொண்டே வந்தான். அது யானைகள் நடமாடும் வழி. யானைகளின் இலத்தியைக் காட்டினான். காய்ந்திருந்தன. அந்தப் பயணத்தில் நாங்கள் யானைகளைக்காணவேயில்லை. ஆனால், சண்முகராசா சொன்ன கதைகளைவிட படுபயங்கரமான கதைகளை அவனுடைய தாத்தாவும் அப்பாவும் அம்மாவும் சொன்னார்கள். சண்முகராசாவின் தம்பிக்குக்கூட நிறைய யானைக்கதைகள் தெரிந்திருந்தன. அவர்கள் யானைகளோடு கூடி வாழ்கின்றார்களல்லவா..!

## காட்டுக்குள் படுகொலை

இது நடந்து சரியாக பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, புதுக்குடியிருப்புக்குப் போயிருந்தேன். சண்முகராசா காட்டிய புதுக்குடியிருப்பு சற்று மாறியிருந்தது. இன்னும் இரண்டு தேநீர்க்கடைகள் புதிதாக வந்திருந்தன. சந்தியும் கொஞ்சம் வெளிப்பாக இருந்தது. கடைகளும் கூடியிருந்தன. சனப்புழக்கமும் கொஞ்சம் கூடுதல். அதை விடத் தேநீர்க்கடைகளுக்கு முன்பாக, மோட்டார் சைக்கிள்கள் நான்கைந்து நின்றன. எங்களுடைய கைகளிலும் துவக்குகள் இருந்தன. இப்போது எங்களுக்கு யானைப் பயமெல்லாம் கிடையாது. ஐயாமணி, பரா, பவானந்தன் என்று ஐந்தாறு பேர் கொண்ட அணி வேறு. சந்திக் கடையில் தேநீர் குடித்தோம். எங்களைப் போல வேறு பெடியங்களும் துவக்குகளோடு நின்றார்கள். அவர்களும் தேநீரும், வாய்ப்பனும் எடுத்தார்கள். புதுக்குடியிருப்பு இயக்கங்கள் அதிகமாக நடமாடும் ஒரு மையமாக மாறியிருந்தது. புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புலிகள் என்று மட்டுமில்லாமல் ரெலா, பேரவை போன்ற இயக்கங்களிலும் புதுக்குடியிருப்புப் போராளிகள் இருந்தார்கள். ஒரு நாள் புதுக்குடியிருப்பைச் சுற்றி வளைத்த படையினர் அங்கே பலரைக் கைது செய்து காட்டுப்பகுதிக்குக் கொண்டு போனார்கள். கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானவர்கள் சாதாரண சனங்கள். ஆனால், படையினரின் பார்வையில் அத்தனைபேரும் பயங்கரவாதிகள். பயங்கரவாதிகள் என்று தெரிந்தால், அதற்கான பரிசு, கொலையன்றி வேறென்ன. அத்தனைபேரும் சுடப்பட்டனர். 32 பேர் கொல்லப்பட்டனர். 21 பேர் படுகாயமடைந்த நிலையில் குற்றுயிரும் குறையுயிருமாக மீட்கப்பட்டனர்.

## புதிய குடியிருப்புகள்

கிழக்கு மாகாணத்திற்குப் போய் வரும் போராளிகள், அந்த நாட்களில் புதுக்குடியிருப்புச் சந்தியைக் கடந்துதான் போவதுண்டு. சுண்டிக்குளம், சாலை வழியாக வரும் போராளிகளுக்கு புதுக்குடியிருப்புச் சந்தி ஒரு மையம். அதைத் தவிர. முத்தையன்கட்டு, மன்னாகண்டல், தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, வள்ளிபுனம் போன்ற குடியேற்றத்திட்டங்களில் உள்ள சனங்கள், தங்களுடைய தேவைகளுக்காக புதுக்குடியிருப்புச் சந்திக்கே வந்து போனார்கள். 1985 க்குப் பிறகு இன்னும் நிலைமை மாறியது. கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னமரவாடி, திரியாய், தம்பலகாமம் பக்கத்தில் படையினரின் நெருக்கடிகள் கூடக் கூட, அங்கே இருக்க முடியாது என்று எண்ணியவர்கள், முல்லைத்தீவை நோக்கி வந்தார்கள். அவர்களில் அரைவாசிப்பேர் புதுக்குடியிருப்புக்கு வந்து சேர்ந்தனர். அப்போது, ஒட்டுசுட்டான் சந்தியும் படைக்கட்டுப்பாட்டில் சிக்கியது. இதனால் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, மன்னாகண்டல், கற்சிலைமடுச் சனங்களும் புதுக்குடியிருப்புக்கே வந்து போனார்கள். 1990 இல் இந்த நிலைமை இன்னும் மாறியது. முல்லைத்தீவு நகரம் படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் விழுந்த போது, புதுக்குடியிருப்பே முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரமாகியது. முள்ளியவளை, தண்ணீரூற்று, கேப்பாபிலவு, வற்றாப்பளை, செம்மலை, அலம்பில், குமுழமுனை, உடுப்புளம், நாயாறு, சிலாவத்தைச் சனங்கள் புதுக்குடியிருப்பின் வழியாகவே போய் வந்தார்கள். வேறு வழியில்லை. சனங்கள் கூடக்கூட புதுக்குடியிருப்பில் புதிய குடியிருப்புகள் உருவாகின. புதுக்குடியிருப்பின் பழைய குடியிருப்பும் சனங்களால் நிறையத் தொடங்கியது.

இப்பொழுது நீங்கள் காணும் புதுக்குடியிருப்புச் சந்தி, பின்னாளில் உருவாகியது ஒன்றே. பின்னாளில் என்றால், பரந்தன் முல்லைத்தீவு வீதி அமைக்கப்பட்ட பிறகு. ஏறக்குறைய 100 வருசத்துக்குள். முன்னர் இருந்த குடியிருப்பு, இப்போதிருக்கும் சந்திக்கு மேற்கிலே இருந்தது. இன்று அதை வேணாவில் என்று சொல்கிறார்கள். பரந்தன் முல்லைத்தீவு வீதி புழக்கத்தில் வரவர பழைய குடியிருப்பிலிருந்த சனங்கள் முன்னகர்ந்து வீதியோரமாக வந்தார்கள். இன்னொரு பாதை கற்சிலைமடு, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் என்று போனது. மற்றத்தெரு மாத்தளன், பொக்கணை, வலைஞர் மடத்துக்குச் சென்றது. இப்படியெல்லாம் தெருக்கள் முளைக்கப் புதிய சந்தி பொலியத் தொடங்கியது.

## புலிகளின் மையம்

1996 இல் கிளிநொச்சியும் படையினரிடம் வீழ்ந்தபோது, புதுக்குடியிருப்பின் முக்கியத்துவம் இன்னும் கூடியது. கிளிநொச்சிச் சனங்கள் அக்கராயன், ஸ்கந்தபுரம், மல்லாவி, வட்டக்கச்சி என்று போனாலும் விடுதலைப்புலிகள் இயக்கம் நகர்ந்து, புதுக்குடியிருப்பிலேயே மையம் கொண்டது. இதற்கு இன்னொரு காரணம், 1996 இல் முல்லைத்தீவை புலிகள் படையினரிடமிருந்து மீட்டிருந்தனர். கூடவே புலிகள், கடற்புலிகள் அணியை அந்த நாட்களில் பலமாகக் கட்டியெழுப்பத் தொடங்கியிருந்தனர். முல்லைத்தீவை மீட்ட தாக்குதலில் கடற்புலிகளின் பங்களிப்புக் கூடுதலாக இருந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க...)






அரவான்

**01.** பிறப்பு 1954 நவம்பர் 26 (யாழ்ப்பாணம் இணுவில் வைத்தியசாலை)

**02.** பிறந்த இடம் வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

**03.** தந்தை வீராசாமி திருவேங்கடம் வேலுப்பிள்ளை.

**04.** தாய் வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை.

**05.** மனைவி - பிரபாகரன் மதிவதனி.

**06.** பிள்ளைகள் - சார்ள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன்.

**07.** ஆரம்பக்கல்வி - மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயம். பின்னர் வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியில் 10 ஆம் ஆண்டு வரை கல்வி கற்றார்.

**08.** கரிகாலன், மணி, மணிவண்ணன், மணியம் என வேறுபெயர்களால் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டார். குடும்பத்தினரும் வயதில் மூத்தவர்களும் தம்பி என்று அழைத்தனர். புலிகளின் போராளிகள் 'அண்ணை' (அண்ணா), 'தலைவர்' என்றும்அழைத்தனர். தேசியத் தலைவர் என்ற பெயரை மக்கள் சூட்டினர்.

**09.** 1968 இல் உருவாக்கிய அமைப்புக்கு 1972 இல் புதிய தமிழ் புலிகள் எனப் பெயரிட்டார்.

**10.** புதிய தமிழ் புலிகள் 1976 மே 5 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

**11.** படகுகளைச் செலுத்துவதிலும் பிரபாகரன் வல்லவராக இருந்தார். புலிகளால் தயாரிக்கப்பட்ட அதிவேக "குருவி" படகுகளை பிரபாகரன் ஓய்வு நேரங்களில் செலுத்துவார்.

**12.** பிரபாகரனைக் கொல்ல யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படிப்பகுதியிலும், பின்னர் மணலாற்றிலும் இந்திய இராணுவம் முயன்றது. அவற்றை முறியடித்து பிரபாகரன் தப்பினார்.









**13.** புலிகள் அமைப்பில் கடுமையான ஒழுக்கத்தைப் பின்பற்றுபவராகவும், பின்பற்றச் செய்பவராகவும் இருந்தார்.

**14.** குளோக் 17 ரக பிஸ்டல், எம் 16 ஏ 2 குளொட் ரைபின் என்பவற்றை பயன்படுத்துவதில் விருப்பமுடையவர், வல்லவர்.

**15.** மதிவதனியை 1984 ஒக்ரோபர் 1 ஆம் திகதி சென்னை திருப்போரூர் முருகன் ஆலயத்தில் திருமணம் செய்து கொண்டார்.

**16.** பிரபாகரன் - மதிவதனி திருமணம் கே.பி. தலைமையில் நடந்தது. இந்நிகழ்வில் பங்கேற்றவர்களில் கே.பி. மட்டுமே இப்போது உயிருடன் உள்ளார்.

**17.** யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவை, பொன்னாலையில் வைத்துச் சுட்டுக் கொன்றார். விடுதலைப் போராட்டத்தில் தலைவர் ஏற்படுத்திய முதல் மரணம் இதுவே.

**18.** சமைப்பதில் மிகவும் விருப்பமுடையவர்.

**19.** தன்னை சந்திக்கும் போராளிகளுக்கு தனது கரங்களினாலேயே உணவைப் பரிமாறும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

**20.** பிரபல நடிகர் ஹரிசன் போர்ட்டின் ரசிகர்.

**21.** தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் மீது பெரும் மதிப்பும், விருப்பும் உடையவர். இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மீதும் பெரும் மரியாதை கொண்டவர்.

**22.** சாண்டில்யனின் கடல்புறா, வேங்கையின் மைந்தன், கல்கியின் பொன்னியின் செல்வன் நாவல்கள் இவருக்கு மிகவும் பிடித்தவை.

**23.** கடல்புறா நாவல் மீது கொண்ட விருப்பமே, கடற்புலிகள் பிரிவுக்கு ஆரம்பத்தில் கடல்புறா எனப் பெயரிட்டார்.

**24.** "மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா" என்ற வீதோபோதேசப் பாடலை மிகவும் விரும்பிக்கேட்பார்.

**25.** தனது மானசீக வழிகாட்டியாக இந்தியாவின் சுதந்திர வீரர் சுபாஸ் சந்திரபோஸைக் கொண்டிருந்தார்.

**26.** ஆர்.எஸ்.நல்லபெருமாள் எழுதிய "கல்லுக்குள் ஈரம்" நாவலை மீண்டும் மீண்டும் தாம் வாசித்தார் எனக் கூறியுள்ளார்.

**27.** ரைம், நியூஸ்வீக் இதழ்களை மொழிபெயர்த்துச் சமகால, சர்வதேச அரசியலை அறிந்துகொள்வதில் விருப்பமுடையவர்.

**28.** போர், இராணுவம், ஆயுதங்கள் தொடர்பான நூல்கள் பலவற்றை மொழி பெயர்த்துப் படிப்பதிலும், அவற்றை போராளிகளுக்கு கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டுபவர்.

**29.** தன்னை சந்திக்கும் போராளிகளை ஆங்கிலம், தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்ளுமாறு அடிக்கடி வலியுறுத்துவார். அவற்றுக்கான வழி வகைகளையும் ஒழுங்குபடுத்துவார்.

**30.** சிறுவயதில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், சைக்கிளோட்டம் என்பவற்றில் ஆர்வம் காட்டினார்.

**31.** புட்டு, சம்பல், இறால் கறியை விரும்பி உண்பார். கூழையும் விரும்பிக் குடிப்பார்.

**32.** மகாபாரதக் கதையில் வரும் கர்ணனை மிகவும் நேசித்தார்.

**33.** எந்த சோதனைகளும் இன்றி ஆயுதத்துடன் பிரபாகரனை சந்திக்கும் வாய்ப்பு புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானுக்கு மட்டுமே இருந்தது.

**34.** இந்தியாவில் இருந்தபோது மதிவதனி ஹோலி கொண்டாடினார். இதற்காக அவரை கடுமையாக பிரபாகரன் ஏசினார். இதனால் அவர் அழுதாராம்.

**35.** சிறுத்தைப் புலிகளை தனது செல்லப் பிராணியாக வளர்த்திருந்தார்.

**36.** 0001 என்பது இவரின் இலக்கத்தகடு ஆகும்.

**37.** பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களின் இலக்கம் '0' என ஆரம்பிக்கும்.

**38.** புலிகளின் முதல் தளபதியான சீலனின் இயற்பெயரான சார்ள்ஸ் அன்ரனியின் பெயரையே தனது மூத்த மகனுக்கு வைத்தார். தனது மெய்ப் பாதுகாவலரான மயூரனின் நினைவாக, அவரின் இயற்பெயரான துவாரகன் என்ற பெயரை துவாரகா என தனது மகளுக்கு சூட்டினார்.

**39.** தாக்குதலுக்கு செல்லும் கரும்புலிகளுடன் உணவருந்தி, புகைப்படம் எடுத்துக் கொள்வது வழமை. எந்த சந்தர்ப்பத்திலும் இதனை அவர் தவிர்க்கவில்லை.

**40.** இந்தியப் படையினர் இவரைத் தேடிய காலத்தில் தான் மரணித்தால் அவர்களிடம் தனது உடல் கிடைக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் அவர் எங்கு சென்றாலும் தன்னருகே கான் ஒன்றில் பெற்றோல் வைத்திருப்பார்.

**41.** தமிழீழ கொள்கையில் இருந்து தான் விலகினால் தனது பாதுகாவலரே தன்னை சுட்டுக் கொல்லலாம் என உத்தரவிட்டிருந்தார்.

**42.** திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் இராணுவ ட்ரக் மீதான தாக்குதலே விடுதலை புலிகளின் முதல் தாக்குதல். இத்தாக்குதலில் நேரடியாகப் பங்கேற்றிருந்தார்.

**43.** செல்லக்கிளி அம்மான் வளர்த்த பசு மாட்டை விற்றே பிஸ்டல் துப்பாக்கியை பிரபாகரன் முதன்முதலாக அமைப்புக்கு வாங்கினார்.

**44.** புலிகளின் வலிந்த தாக்குதல்களுக்கும் படையணிகளுக்கும் பிரபாகரனே பெயர் சூட்டுவார்.

**45.** புலிகள் அமைப்பில் ஏற்பட்ட முரண்பாட்டால் சில மாதங்கள் விலகிச் சென்றிருந்தார்.

**46.** பேனாவை 5 விரல்களாலும் பிடித்து எழுதும் பழக்கம் கொண்டவர்.

**47.** இடது கை பழக்கம் உடையவராக இருந்தார்.

**48.** அலெக்ஸ் ஹேலியின், ஏழு தலைமுறைகள் நாவலில் வரும் "இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது. போராட்டம் நடத்தாமல் யாரும் எதையும் தரமாட்டார்கள்" என்ற வரிகளை அடிக்கோடு போட்டு வைத்திருந்தார்.

**49.** "இயற்கை எனது நண்பன், வாழ்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழி காட்டி" என்ற வாசகத்தைத் தனது தினக்குறிப்பில் எழுதிவைத்துள்ளார்.

**50.** மாத்தையாவுக்கும் பின்னர் அமைப்பில் பிரதித் தலைவர் பதவியை எவருக்கும் வழங்கவில்லை.

**51.** விடுதலைப் புலிகள் அமைப்பில் முதன்முதலில் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் பிரபாகரனே. 1986 இல் தொடர்பு சாதனங்களை இந்தியப் பொலிஸார் பறிமுதல் செய்தபோது உண்ணாவிரதப் போராட்டத்தில் பிரபாகரன் ஈடுபட்டார்.





(16 ஆம் பக்கம் பார்க்க...)

# வாரப்பலன்

**மேடம்**
தனதானிய விருத்தி. கல்வி மேன்மை. பலவித முயற்சி.

**துலாம்**
சிந்தனை. சிறப்பற்ற நிலை. பதிய வரவு. கல்வி மேம்பாடு. காரியத் தடை.

**ரிஷபம்**
வேலைக்காரர் தொல்லை. ஜல தோஷம். பணிவு. கனவு பலிதம்.

**விருச்சிகம்**
துன்பம். கல்வி விருத்தி. பணியாளர் மேன்மை. கலகம். தெய்வ சிந்தனை.

**மிதுனம்**
காரிய விக்கினம். வீண் அலைச்சல். கடன் தொல்லை. பக்திமேன்மை

**தனுசு**
மனச் சாந்தி. உறக்கக் குறைவு. மனைமாட்சி. புத்திரர் மேன்மை. புகழ்.

**கடகம்**
உள நலிவு. பசியின்மை. ஆலய தரிசனம். ஞாபக மறதி. சிந்தனை.

**மகரம்**
வைத்தியச் செலவு. வாணிப மேன்மை. பயிர் விருத்தி. பழம் பொருள் சேர்க்கை

**சிம்மம்**
மாதாரால் உதவி. கோபம் அதிகம். மன மாற்றம். சிந்தனை வயப்படல்.

**கும்பம்**
தர்ம சிந்தனை. வீரியம். ஆலய தரிசனம். தூரதேசத்து உறவு. மனைவியால் சுகம்.

**கன்னி**
தன்னிலை மேம்பாடு. தனதானியச் சிறப்பு. புத்திரரால் பெருமை. தவம்.

**மீனம்**
தவறுக்காய் வருந்துதல். தொழில் முயற்சி. போகமிகுதி. கருணை. காதல்.



கடந்த சனிக்கிழமை (19.11.16) ஆதிக்குடி மக்களின் விழா குஞ்சன் குளத்தில் (வாகரை) நடைபெற்றது. அடையாங்களைத் தேடுகின்ற பயணத்தில் வேடர்கள் தொலைந்து போன தமது வாழ்வியலை பகிர்ந்தனர். தமது இளம் சந்ததியினர் மாறிவருகின்ற சூழலில் தங்களுடைய பாரம்பரியத்தைத் தொலைத்து நிற்பதை ஆதங்கத்தோடு கருத்தாடலையும், ஆற்றுகைகளையும் நிகழ்த்தினர்.



நன்றி: த.மலர்ச்செல்வன்




"தள வாசல்" இலக்கிய இதழின் இரண்டாவது இதழ் வெளியீடு நவம்பர் 19 ஆம் திகதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

ஒளிப்படம் - யாத்திரிகன்




தேவகாந்தனின் 'கதாகாலம்' நாவல் பற்றிய விமர்சன அரங்கு 19.11.2016 சனிக்கிழமை மாலை கல்வியங்காடு, 'கருவி' மாற்றுத் திறனாளிகள் சமூக வளநிலையத்தில் கவிஞர் சோ.ப தலைமையில் இடம் பெற்றது. தூண்டி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற மேற்படி நிகழ்ச்சியில் சி. விமலன், யோ. கௌதமி, தி. செல்வமனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பதிலுரையை எழுத்தாளர் தேவகாந்தன் நிகழ்த்தினார்.




கவிஞர் யாத்ரிகனின் 'காலப்பழி' கவிதைநூல் வெளியீடு 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் கவிஞர் கருணாகரன், தி.செல்வமனோகரன், இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறீ அவர்கள் நூலை வெளியிட்டு வைக்க யாத்ரிகனின் பெற்றோர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டனர். யாத்ரிகன் ஏற்புரை நிகழ்த்தினார்.

20.11.2016 அன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி, மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலை சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது.



# எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!

**(மாவீரர் நாளின் போதும், வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல் விதைக்கப்படும் போது இந்த மாவீரர் துயிலுமில்லங்களில் இந்தப்பாடல் இசைக்கப்படும்.)**

*மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!*
*வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!*
*விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!*
*இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!*

*தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*

*இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!*

*தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*

*உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!*
*அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!*

*எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!*

*தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே*

*வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!*
*உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!*
*வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!*

*சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!*
*எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!*

*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!*
*தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*
*உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!*
*அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!*

*உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!*
*தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!*
*எந்த நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!*

*எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!*
*ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!*

*தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!*
*இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!*

பாடல்: புதுவை இரத்தினதுரை
பாடியோர்: வர்ண ராமேஸ்வரன் குழுவினர்



# மாவீரர்

## துயிலும் இல்லங்கள்

(அமைந்திருந்த இடங்கள்)





### யாழ்ப்பாணம்

- கோப்பாய்
- கொடிகாமம்
- சாட்டி (வேலணை)
- எல்லங்குளம்
- உடுத்துறை

### முல்லைத்தீவு

- முள்ளியவளை
- அலம்பில்
- ஆலங்குளம்
- வன்னி
- விஸ்வமடு

### கிளிநொச்சி

- கிளிநொச்சி
- முழங்காவில்



### வவுனியா

- ஈச்சங்குளம்

### மட்டக்களப்பு

- தரவை
- தாண்டியடி
- கல்லடி
- மாவடி



### அம்பாறை

- கஞ்சிகுடிச்சாறு

### மன்னார்

- ஆட்காட்டி வெளி
- பண்டிவிரிச்சான்



### திருகோணமலை

- பெரியகுளம்
- ஆலங்குளம்
- உப்பாறு
- தியாகவனம்



புதுவிதி
PUTHU VITHI
107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

# கார்த்திகைக் கனவுகள்

## நவம்பர் 27.

தமிழர்களின் வாழ்வில் அதி உன்னதமான ஓர் நாள். மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தம் உயிர்களை ஆயுதமாக்கிப் போராடி வித்தாகிப் போன வீரர்களை நினைவேந்தும் நாள். மாவீரர் நாளுக்கென்றே அஞ்சலிப்பதுபோல இந்த மாதத்தில்தான் கார்த்திகைப் பூக்களும் மலர்ந்துள்ளன. புலிகளையும் தமிழீழத்தையும் அடையாளப்படுத்தும் சிவப்பு மஞ்சள் வர்ணங்களோடும், மாவீரர் நாளில் ஏற்றப்படும் சுடரைப்போன்ற உருவத்தோடும், போராளிகள் கழுத்தில் கட்டியிருந்த சயனட்டை ஒத்த நச்சுத்தன்மையோடும் பூத்திருக்கும் கார்த்திகை மலர்கள் எவருக்கும் சொல்லாமலேயே மாவீரர்களை நினைவூட்டும்.

எந்த அடக்குமுறை வந்தபோதும் - மாவீரர் நாளில் ஆலயங்கள் மணி ஒலிப்பதோ, தீபம் ஏற்றுவதோ தடைசெய்யப்பட்ட போதும் - காத்திகை மலர்கள் இதழ்களை விரித்து மாவீரர்களை அஞ்சலிக்கத் தவறவில்லை. தமிழர்களின் அஞ்சலிப்பை என்னதான் துப்பாக்கி முனையில் அதிகாரம் தடுத்து நிறுத்தினாலும் கார்த்திகைப் பூ வடிவில் இயற்கையின் மாவீரர் நாள் நினைவேந்தலை எவராலும் அடக்க முடியவில்லை.


காத்திகைப் பூ மட்டும் தான் அஞ்சலிப்பதில்லை. தீபமேற்றவோ, மணியொலிக்கவோ தடைகள் போடப்பட்ட போதும் மானசீகமாக தமிழர்கள் தங்கள் மனங்களுக்குள் மாவீரர்களை பூசிக்கவே செய்தார்கள். இத்தகைய ஆத்மார்த்த அஞ்சலிப்பையும் அதிகாரக் கரங்களால் பிடுங்கியெறிய இயலாததாகவே இருக்கிறது.

எனவே தான் இந்த இருவகை அஞ்சலிப்புகளையும் தவிர்ப்பதற்காக சில தந்திரங்களை ஆளும் தரப்பு செய்து வருகின்றது. போர் முடிந்து அடுத்து வந்த வருடங்களில் வடக்குக்கு வந்த சில சிங்கள வியாபாரிகள் கார்த்திகை விதைகளைக் கொண்டுவந்தால் பெருந்தொகைப் பணம் தருவதாக விளம்பரப்படுத்தினார்கள். மக்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் கார்த்திகை விதைகளை தோண்டியெடுத்து கொண்டுவருவார்கள் எனவும், அப்படி நிகழ்ந்தால் காலப்போக்கில் கார்த்திகை செடியையே தமிழர் பகுதிகளில் இல்லாதாக்கலாம் எனவும் திட்டம் போடப்பட்டிருந்தது. ஆனால் பேரின வியாபாரிகள் போட்ட கணக்கு பலிக்கவில்லை. இன்னமும் கார்த்திகைப் பூக்கள் மலர்ந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செய்கின்றன.

இதைப் போலவே மாவீரர்களை அஞ்சலிப்பதில் முன்னிற்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களையும், ஏனைய இளையோரையும் திசைதிருப்பி மாவீரக் கனவுகளை மறைக்க ஆட்சியாளர்கள் எத்தனையோ வழிகளில் முயன்றார்கள்; முயல்கிறார்கள். போதைப்பாவனை, ஆடம்பர மோகம், சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் என்று இளைஞர்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான சகல வழிகளையும் அரசு திறந்துவைத்துள்ளது. ஒரு சிலர் பேரினத்தின் இந்தத் தந்திரங்களுக்கு பலியானாலும் பெரும்பாலானோர் இன்னமும் தங்களுக்காக போராடி மடிந்த மறவர்களை நினைவுகூர மறப்பதில்லை. இந்த வருடமும் தேசமெங்கும் மனத்தீபங்களின் ஒளிர்வில் மாவீரர்களின் தியாகங்கள் நினைவுகூரப்படத்தான் போகின்றன. தமக்காய் எரிந்த சூரியர்களை எவர்தான் மறப்பர்?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

புதுவிதி
விளம்பரத் தொடர்புகளுக்கு...
+ 94 777 243 129
+ 94 214 937 777
puthuvithimkt@gmail.com






# நல்லாட்சிக் கூத்துக்கள்

வர்சி

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில், கடந்த மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கான பொறுப்புக்கூறலை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாதென கூறியிருக்கிறார் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க. நல்லது, தமிழ் மக்களுக்கு நல்லாட்சியின் சுயரூபம் என்ன என்பதை இப்படிப்பட்ட ஒரு சிலராவது அவ்வப்போது வெளிக்காட்டுகிறார்களே என்று திருப்திப்படலாம்.

கடந்த காலங்களில் நாய்களைச் சுடுவது போல தமிழர்களை வீதிக்கு வீதி சுட்டு போட்டார்கள். எந்த வீதியில் எவர் பிணமாக விழுவார் என்று தெரியாமல் மக்கள் அஞ்சி அஞ்சி வாழ்ந்தார்கள் . வன்னியில் நடந்த இறுதிப்போரில் கொத்து கொத்தாக தமிழர்களை கொன்று குவித்தார்கள்.இறுதிப்போரில் சரணடைந்தவர்கள் தொடர்பில் இன்றுவரை எதுவும் தெரியாத நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். பெண்பிள்ளைகள் என்று கூட பார்க்காமல் இசைப்பிரியா போன்றவர்களை சாகடித்தார்கள். வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப் பட்டவர்களுக்கு இன்று வரை என்ன நடந்தது என்று கூட தெரியாமல் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றனர்.

இதற்கெல்லாம் மகிந்த அரசு வைத்த பெயர் பயங்கர வாதிகளுக்கெதிரான போர். இவ்வாறு போரை நடத்தி தமிழரின் பிணங்களுக்கு மேல் நின்றுகொண்டு, "தமிழரை வெற்றி கொண்டுவிட்டோம்" என்று வெற்றி விழா கொண்டாடிய மகிந்த அரசுக்கெதிரான தவறுகளுக்கு நல்லாட்சி அரசு பொறுப்புக் கூறமாட்டாதென்கிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க. வாய்க்குவாய் "தமிழர்களும் இந்த நாட்டு பிரஜைகளே" என கூறும் அரசு, இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு இனத்திற்கெதிராக இவ்வளவு அட்டூழியங்கள் நடந்தும் அதற்கெதிராகப் பொறுப்புக் கூறமாட்டோம் எனக்கூறுவது, தமது இனத்தின் தலைவர் ஒருவரை பாதுகாப்பதற்குத்தானே யொழிய வேறெதெற்கென அர்த்தம் கொள்ள முடியும்?

மகிந்த காலத்து தவறுகளுக்கு தாம் பொறுப்புக் கூறமாட்டோமென நல்லாட்சிக் காரர்கள் சொல்லத் தொடங்கியுள்ள நிலையில், அதே காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் ஊழல்கள் தொடர்பாக துரசு தட்டி நாளொரு விசாரணையும், பொழுதொரு அரசியல்வாதியுமாக அழைத்து தோண்டித் துருவுவதன் மர்மம்தான் என்ன? அவையும் மகிந்த காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகள் தானே? அவற்றையும் அப்படியே விடலாம் தானே?

சரி, மகிந்த காலத்து தவறுகளுக்கு நல்லாட்சி பொறுப்பில்லையென்றால் நல்லாட்சி விடும் தவறுகளுக்கு யார் பொறுப்புக் கூறுவது? சிங்கள பௌத்த மக்கள் வசிக்காத இடங்களி லெல்லாம் மும்முரமாக அமைக்கப்படுகின்றன புத்தர்சிலைகள். வலி.வடக்கில், கொக்கிளாயில், தற்போது அம்பாறை மாணிக்க மலையில் என்றெல்லாம் நல்லாட்சிப் புத்தரும் பூதாகரமாக உருவெடுக்கிறாரே. அத்தோடு நயினா தீவிலும் நல்லாட்சிப் புத்தரின் பிரமாண்ட சிலை அமைக்கப்படுவதற்கான வேலைகளும் அமளியாக நடைபெற்று வருகின்றன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த நல்லாட்சி தவறுவதேன்? கேட்டால் இதற்கு பின்னால் மகிந்தவின் மறைகரம் என்கிறார்கள். ஆவா குழுவின் அட்டகாசத்தை நிறுத்தச் சொன்னாலும் கோத்தபாய உருவாக்கிய குழு என்று சொல்லிவிட்டு நல்லாட்சி அரசு தப்பிக்க எண்ணுகிறது.

மன்னாரில், கொக்கிளாயில் சிங்கள மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி, யாழில் பெருமளவில் கஞ்சா கைப்பற்றல் என பலவும் நடந்தேறுகின்றன. ஆனால் சூத்திரதாரிகள் அரிதாகவே கைது செய்யப்படுவர் .இப்போது இருப்பதை விடவும் மகிந்தவின் ஆட்சி எவ்வளவோ பரவாயில்லை என்று சொல்ல வைப்பது போலவே காரியங்கள் நடக்கின்றன.

அவர்கள் சொல்வது போல புத்தர் சிலை, கஞ்சா கடத்தல், ஆவா குழு எல்லாமே மகிந்த காலத்து லீலைகளாகவே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் இப்போது ஆட்சியாரிடம் உள்ளது, நல்லாட்சி அரசிடம் தானே. எனவே சட்டத்தின் மூலமும், அதிகாரத்தின் மூலமும் இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்த அரசால் முடியாமல் போவது எதனால்?

சர்வதேச விசாரணைகளில் இருந்து மகிந்த கும்பலையும், குற்றம் செய்த படையினரையும் காப்பாற்றுவதன் மூலம் தென்னிலங்கையில் தமக்கான வாக்குகளை தக்கவைப்பதே அரசின் தந்திரமாக இருக்கிறது. சர்வதேசத்துக்காக விசாரணையை நடத்தும் அதேவேளை, பேரினக் கொலைகாரர்களையும் காப்பாற்ற நினைக்கிறது அரசு.

60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களையே கொன்று குவித்தவர்கள், தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு விசாரணை நடத்தித்தான் நீதி வழங்கப்போகிறார்களா ?




# புதிய மொந்தையில் பழைய கள்

என்ன? இது வெறிக்கும் பானத்தோடு இந்த வாரப் புதினத்தை ஆரம்பிக்கிறேனே யென்று முணுமுணுக்கின்றீர்களா? கொஞ்சம் பொறுமை காத்தருள்க..

Your Platter Matters என்ற சுலோகத்தோடு, அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் பிராந்தியத்திலுள்ள மெகன் பெர்னான்டஸ் என்ற பெண்மணி ஒரு புதுத் தொழிலை ஆரம்பித்து, அந்தத் தொழிலும் பிரபல்யமடைய ஆரம்பித்துள்ளது. அதாவது இவர் காட்டில் நல்ல மழை பெய்கின்றது.

"உங்கள் தட்டுத்தான் எங்களுக்கு முக்கியம்" என்று அந்தச் சுலோகத்தைத் தமிழில் சொல்லிவிடலாம்.

பெரிய வைபவங்களில் விருந்தாளிகளுக்கு உணவளிக்கும் முறையில் இவர் ஒரு புரட்சியை உருவாக்கியுள்ளார். விருந்தினர்கள் திருமண மண்டபத்திலோ அல்லது அதற்கென ஒதுக்கப்பட்ட நீண்ட அறையிலோ உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இனி இல்லை. வாயில் நீரூற வைக்கும் பலாக உணவுளை தட்டில் பரவி விநியோகிப்பதே இவர் தொழில்.



உங்கள் தோட்டங்களிலோ அல்லது பால்கனியிலோ ஒரு மேசையை வைத்து விட்டு அதில் இந்தத் தட்டுக்களை பரப்பி வைக்க வேண்டியது மாத்திரமே உங்கள் வேலை. அவரவர் இஸ்டத்திற்கு, அவரவர் சுவைக்கேற்ப தின்பண்டங்களை எடுத்து ஒரு கைபார்க்க முடியும். தரப்படும் தட்டுகளின் அளவை வைத்தே கட்டணம் அறவிடப்படும். ஒரு சதுர மீற்றர் அளவு கொண்ட தட்டு வேண்டுமாயின் 399 அவுஸ்திரேலியன் டொலர் கட்டணமாகச் செலுத்த வேண்டும். அதுவே இரண்டு மீற்றராக இருந்தால் 750 டொலர்தான் கட்டணம்.

ஒரே தட்டில் எல்லா வகையான உணவுகளும் இருப்பதால், இந்த முறையில் தமது விருந்தினர்களை உபசரிக்க இது சிறந்த வழி என்று பலரும் கருதுகின்றார்களாம்.

இந்தத் தட்டில் இருக்கும் உணவு சீஸனுக்கு ஏற்ப மாறும் என்பதோடு, வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்றவாறுதான் அமையுமாம்.

கள் பழைய கள்தான். புதிய மொந்தையில் தருகிறார்கள். அவ்வளவுதான்.

# கோப்பிக்கு இத்தனை விலையா?

ஆசியர்கள் தேநீர்ப் பிரியர்கள். அதிலும் நாம் குறிப்பாக பிளேன்டீ காதலர்கள். ஆனால் ஐரோப்பியர்கள் கோப்பிப் பிரியர்கள். அளவு குறைத்துக் குடித்தாலும், அடிக்கடி குடிப்பவர்கள். இந்த ஐரோப்பியர்களில், ஆங்கிலேயருக்கு தேநீரிலும் மோகமுண்டு. பொதுவாக ஐரோப்பியர்களின் ஒரு சிகரெட் வலக்கையில் புகையும்போது, இடக்கையில் எக்ஸ்பிரஸ்ஸோ இருக்கும். ஒவ்வொரு வீடுகளிலும் எக்ஸ்பிரஸ்ஸோ மெஷின் இருக்கும். சரி! இங்க ஒரு கப் கோப்பியின் விலை எவ்வளவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

பிரிட்டனில் உள்ளவர்கள், இலத்தின் அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களை விட 90 வீதம் அதிகமான பணத்தைக் கோப்பி அருந்துவதற்காகச் செலவிடுகின்றார்கள், என்கின்றன புள்ளிவிபரங்கள்.

11 மணி நேரம் பறந்து, 6000 மைல் தூரத்தைக் கடந்தால் மலிவாக விற்பனை செய்யப்படும் கோப்பிப்பானத்தை அருந்த முடியுமாம். பிரேசிலின் தலைநகரான றியோ டி ஜெனிரோவில் ஒரு கப் கோப்பியின் விற்பனை விலை 84பென்ஸ் (சுமாராக 155 ரூபா). இலண்டனிலோ ஒரு கப் கோப்பியின் விலை ஏறத்தாழ 400 ரூபாம்.

இது சாதாரண தரம் பானத்தின் விலை. 'ஸ்டார்பக்' என்ற உலகப் பிரசித்தி பெற்ற கோப்பிக்கடைகளின் 'கோப்பி' பருகினால், ஒரு குமரைக் கரைசேர்க்க தேவைப்படும் தொகை கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு இலண்டன் 'ஸ்டார்பக்' கோப்பியின் விலை ஏறத்தாழ 500 ரூபா. 'சூரிச்' நகரில் இதே 'ஸ்டார்பக்' கோப்பியைப் பருக 900ரூபா வரையில் கொடுக்கிறார்களாம். மிக அதிக விலை என்று அறிந்து வருவது டென்மார்க் நகரின் தலைநகரம்.

இந்த விலை கொடுத்து இப்படி கோப்பி பருக வேண்டுமோ என்று நீங்கள் நினைக்கிறீர்கள். என்ன செய்வது? விருப்பு வெறுப்பு என்பது ஆளுக்கு ஆள் வேறுபட்டதுதானே.




# கல்யாணத் தரகராக எம்எஸ்என் மெசெஞ்சர்



சாதனைகளைப் பிரசுரித்துக் கொண்டு இருக்கும் 'கின்னஸ்' புத்தகத்திற்கு, தகவல்களுக்கு என்றுமே பஞ்சம் இருந்ததில்லை. உலகின் மிகப் பெரியது, மிக நீண்டது, அதி பாரமானது, அதி வேகமானது, மிக உயரமானது என்று நிறைய விடயங்கள் இவர்களுக்குக் கிடைக்கின்றன.

உலகிலேயே மிகச் சிறியவர்கள் திருமணஞ் செய்து கொண்டது, இப்பொழுது அவர்களது புதிய சாதனைச் செய்தியாக இருக்கின்றது.

போலோ கபிரியேல் சில்வா பரோஸ் என்பவரும், கற்றியூசியா ஹொஸினோ என்பவரும் இலண்டன் மாநகரில் உலகின் மிகக் குள்ளமான தம்பதிகள் என்று இந்த சாதனையாளர் புத்தககத்தினால் இனங்காணப்பட்டுள்ளனர்.

போலோவின் வயது 30. இவர் உயரமோ 34.8 அங்குலம். (3 அடிக்கு குறைவான உயரம்) 26 வயதான கற்றியூசியாவின் உயரம் 35.2 அங்குலம். பிரேசில் நகரமொன்றில் தான் இவர்கள் திருமணம் நடைபெற்றுள்ளது.

இவர்கள் இருவரையும் உத்தியோக பூர்வமாக இலண்டனில் அளவெடுத்து, சாதனையாளர்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். மெசெஞ்சர் மூலம் 10 வருடங்களுக்கு முன்பு அரும்பிய காதல் இடையில் முறிந்து மீண்டும் பூத்து .இப்பொழுது திருமணத்தில் முடிந்துள்ளது.

1955 ஆம் ஆண்டு முதற்தடவையாக கின்னஸ் சாதனைப் பதிவேடுகளின் புத்தகம் பிரசுரமாகியது. முதல் அச்சிலேயே 50,000 பிரதிகள் அச்சிடப்பட்டன. கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தை நெருங்கிய போது பிரிட்டனின் அதிக விற்பனையாகிய சாதனையை கின்னஸ் சாதனைப் புத்தகம் நிறுவியிருந்தது. 1962 இல் முதற் தடவையாக பிரெஞ்சிலும், அடுத்த ஆண்டு ஜேர்மன் மொழியிலும் இந்தப் புத்தகம் பிரசுரமாயிற்று.

# பணத்தில் குளிக்கும் சீனா


இந்தக் கிராமத்தின் கதை விசித்திரமானது. பணக்காரத்தனம் மிகுந்த கிராமம் இது என்கிறார்கள். சீனாவிலேயே மிகவும் செல்வந்த கிராமம் இதுதானாம் என்றாலும் இந்தக் கிராமத்தை விட்டு வெளியே வந்தால் வெறுங்கையோடுதான் வர வேண்டுமாம். அது எப்படி?

'ஏதத்துடி' என்பதுதான் இதன் பெயர். கிழக்குச் சீனாவின், ஜியாங்சு பிரதேசத்தில்தான் இந்தப் பணக்காரக் கிராமம் அமைந்துள்ளது. வானை உரசும் 72 மாடிக் கட்டடம், வானூர்தி டாக்ஸிகள், தீம் பார்க், வரிசையாக நீளும் ஆடம்பரப் பங்களாக்கள் என்று தடல்புடலாகப் பணக்காரத்தனம் இங்கே நிறைய உண்டு.

இங்கு வதிபவர்கள் 2000 பேர் வரையில் இருக்கிறார்களாம். இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு மில்லியன் யுவானுக்கு (143,000 டொலர்) மேற்பட்ட பணம் வங்கியில் உள்ளதாம். இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும், ஓர் ஆடம்பர பங்களாவையும், ஒரு காரையும் அதிகாரிகள் கொடுத்துள்ளார்கள். ஆனால் இந்தக் கிராமத்தை விட்டு வெளியேறினால், பிச்சைக்காரன் திரைப்படக் கதை போல, எல்லாவற்றையும் விட்டுவிட்டு போய்விட வேண்டும். ஷங்காய் நகரிலிருந்து இரண்டரை மணி நேரக் கார்ப் பயணத்தில் இந்தக் கிராமத்தைச் சென்றடைந்து விட முடியும். பல வருடங்களாக கம்யூனிஸ ஆட்சி எப்படி கிராமங்களை செல்வந்தர்களாக்குகின்றன என்பதை பறைசாற்ற இந்தக் கிராமத்தை அதிகாரிகள் உபயோகித்து வருகின்றார்கள். இந்தக் கிராமத்தின் நுழைவாயிலில், வானத்தின் கீழுள்ள முதற்தர கிராமம் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

328 மீற்றர் உயரமான இங்குள்ள 72 மாடிக் கட்டடம் 'ஏதத்துடி' இன் 'தொங்கு கிராமம்' என்று அழைக்கப்படுகின்றது. பாரிஸ் நகரின், ஈபெல் கோபுரத்திலும் பார்க்க, இது 4 மீற்றர் அதிக உயரம் கொண்டது. இந்த மாடிக் கட்டடத்தில் மிகமிக ஆடம்பரமான அறைகள் உட்பட மொத்தம் 826 அறைகளைக் கொண்ட ஒரு நவீன ஹோட்டல் எழுப்பப்பட்டுள்ளது. இங்குள்ள ஆடம்பர அறையொன்றில் தங்க ஓர் இரவிற்கு 11,600 பவுண்ட்ஸ் (ஒரு பவுண்ட்ஸ் 183 ரூபா) செலுத்த வேண்டும். சீனா நிஜத்தில் பணத்தில் குளிக்கின்றது





# வெள்ளைநிற வேரறுப்பு

யபர்ணா

"வெள்ளையாய் இருக்கிறவன் பொய் சொல்லமாட்டான்" என்பது அண்மைக்காலமாக இளைஞர்களிடேயே பிரபலமான சினிமொழிகளில் ஒன்று. வெள்ளைக்காரர்கள் நல்லவர்கள், எதையும் வெளிப்படையாக பேசுபவர்கள், நேரம் தவறாதவர்கள் போன்ற பல முன் மனப் பதிவுகள் எம் தமிழர்கள் மத்தியில் உள்ளன. யாழ்ப்பாணத்தில் ஒரு அலுவலகத்திற்கோ, அல்லது ஒரு வியாபார நிலையத்திற்கோ ஒரு வெள்ளைக்காரனோ அல்லது வெள்ளைக் காரியோ வரும் பொழுது அவர்கள் மிக மரியாதையோடு பவ்வியமாக நடத்தப்படுவதை நம்மில் பலர் அவதானித்துள்ளோம். ஒருவருடைய தோற்றம், நிறம், இனம் என்பன மட்டுமே அவருடைய குண நலன்களுக்கு ஒரு போதும் உத்தரவாதமளிக்காது. வெள்ளைக்காரன் என்பதால் அவர் நல்லவ தென்றோ அல்லது நேர்மையானவர் என்றோ எண்ணுவது மடமை.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் வெள்ளைக்கார ஆண்கள் தமிழ்ப் பெண்க ளைத் திருமணம் செய்வது பெருகி அதிகரித்து வருகின்றது. அதனைத் தேசம் கடந்த காதல் என்றும் வெள்ளைக்காரரே எமது கலாசாரத்தை விரும்பிவிட்டா ரென்றும் ஊடகங்கள் ஊதிப் பெருக்கி, ஊக்கமளித்து வருகின்றன. ஏதோ தமிழனுக்கு உலகம் முழுவதும் இன அங்கீகாரம் கிடைத்துவிட்டது போலவும் அது தான் தமிழ்மக்களுக்கான உலக வளர்ச்சி போலவும் அது எம்மினத் திற்கான மெச்சத்தகு காரியம் போலவும் காணப்படுகின்ற ஒரு தேவையில்லாத போலிப்பாங்கொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

வெள்ளைக்காரனை வேட்டி கட்டி, சால்வை போட்டு மாலை அணிவித்து தமிழனாக மாற்றுவது எங்களின் இனத்திற்கு தேவையானது தானா? உலகில் பல இனமக்கள் தத்தம் இன அடையாளங்களோடு வாழ்வதே சரியானது. அரிசியில் கலப்படம் என்றாலோ ,எண்ணெயில் கலப்படம் என்றாலோ ஆர்ப்பரித்து எழுந்து போராடும் குணம் உள்ளவர்கள் நாங்கள். அப்படிப்பட் டவர்கள் எம்மிடையே இனக்கலப்பு ஏற்படும் போது மட்டும் அதனை ஆதரித்து ஊக்கப்படுத்துவது ஏன்?

ஒரு வெள்ளைக்காரன் அவனது உடல் நிறத்தில் வேறுபடுகிறான். பேசும் மொழியால் வேறுபடுகின்றான். உண்ணும் உணவுப் பழக்கத்தால் வேறுபடுகின்றான். குடும்ப வாழ்க்கை முறை தொடர்பில் வேறுபாடடைகின்றான். பண்பாட்டால், கலாசாரத்தால் தமிழின்த்துடன் மாறுபாடுள்ளவனே. இப்படிப்பட்ட ஒருவனை எங்கள் தமிழ்ப்பெண்கள் திருமணம் செய்யும் போது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறோம். ஆனால் பழக்கத்தால் வாழ்க்கை முறையால், ஒருமித்து இருக்க போதும் சாதியால் குறைந்தவன் என்று சக தமிழனை ஏற்றுக் கொள்ள மறுப்பதும், அதற்கு எதிராக பெரிய கலவரங்களை உருவாக்கும் நிலைமை யும் மிகப் பெரிய முரண்நகை. வெள்ளைக்காரனை தலையில தூக்கிக் கொண்டாடும எம்மினம் தன் சகோதரனை இழிவாக நடத்துவது இனத் துரோகம் அல்லவா? வெள்ளைக்காரன் வெள்ளைக்காரனாகவும் தமிழன் தமிழனாக இருப்பதுமே அவரவர் இனத்தின் தனித்து வத்தை வெளிப்படுத்துவதாக அமையும்.



அவரவர் இன அடையாளங்களோடும் பண்பாட்டோடும் கலாசாரத்தோடும் வாழ்வதே உலக ஒழுங்கு. நாம் எம்மினம் காக்க, எம் மொழி காக்க, எம் தேசம் காக்க, எமது கலை கலாசாரங்களைக் காக்க போராடி வருகின்ற உலகின் மூத்த இனமொன்றைச் சேர்ந்தவர்கள். எம் கண்முன்னே எம்மினத்தில் இனக்கலப்பு நடந்து அடுத்த தலைமுறை எம்மின அடையாளங்களை தேடியலைய வேண்டுமா? நீண்ட நெடிய விடுதலைப் போரையும் அளப்பெரிய தியாகங்களையும் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையும் சந்தித்த இனத்தவர் நாம். கண்டங்கள் பல கடந்து வெள்ளைக்காரனை தமிழ்ப் பெண்கள் திருமணம் செய்வது சரி என்றால், இலங்கையைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களை தமிழ்ப்பெண்கள் திருமணம் செய்வது தவறில்லை என்றாகிவிடாதா? இரண்டும் இனக் கலப்புத்தான். இவை ஒரு வகையில் இன அழிப்பாகவும் மாறிவிடும்.

புலம் பெயர்ந்து வாழும் எமது தமிழர் கள் தமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு வெள்ளைக்காரரால் இலகுவாக உச்சரிக்கக் கூடிய ஆங்கிலப் பெயர்களையே பெரும் பாலும் வைக்கின்றனர் இது அடிமை மன நிலையைக் காட்டுகின்றது. ஆனால் ஒரு வெள்ளைக்காரன் தனக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு சுப்பிரமணியமென்றோ, கணபதிப்பிள்ளை யென்றோ பெயர் வைக்க மாட்டான். ஏனென்றால் அவனுக்கு தன் இனம் தொடர்பில், மொழி தொடர்பில் உயர்வான மதிப்பீடுகள் உள்ளன. ஆனால் எம் தமிழர்களுக்கு தம் இனம் மீது மிகக் குறைவான மதிப்பும் மதிப்பீடுமே உள்ளன. புலம்பெயர்ந்த நாடுகளிலும் எமது தமிழ்ப் பிள்ளைகள் வெள்ளைக்காரரை திருமணம் செய்யும் நிலைமை அதிகரித்தே வருகின்றது. இதற்கு பெரும்பாலும் இரண்டு பிரதான காரணங்கள் இருக்கலாம். அவை புலம் பெயர்ந்து வாழ்கின்ற எமது பிள்ளைகள் தமிழர் என்ற இன அடையாளங்களை இழந்து வெள்ளைக்கார வாழ்க்கை முறைக்கு மாறிவிட்டமை. மற்றையது பெற்றோர் தமது பிள்ளைகளின் வாழ்க்கைத் தெரிவு தொடர்பில் செல்வாக் குச் செலுத்த முடியாமல் இருக்கின்றமை எமது தமிழ்ப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஒரு போதும் பிழையான வாழ்க்கைத் துணையை தெரிவு செய்ய எண்ணமாட்டார்.

தமிழ்ப் பெண்கள் வெள்ளைக்காரர் களை திருமணம் செய்வதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் பிரதானமானது திருமணத்தின் பின் தான், விரும்பியபடி எதையும் எங்கேயும் எப்படியும் செய்யலாம் என்ற ஒரு கட்டற்ற மனநிலையாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்று குடும்பக் கட்டுப்பாட்டோடு வாழ்கின்ற வாழ்க்கை முறையே தமிழர்கள் மத்தியில் இருக்கின் றது. ஆனால் குடும்பமே இல்லாமல் சேர்ந்து வாழுகின்ற (LIVING TOGETHER) வாழ்க்கை முறையே வெள்ளைக்காரர்கள் அதிகம் பின்பற்றி வருகின்றனர். இதனை இலகுவாக சொல்லுவதானால் "விரும்பினால் சேர்ந்து வாழுவோம் இல்லையேல் பிரிந்து செல்வோம்" என்ற எளிதான மனநிலையே அவர்களிடம் காணப்படுகின்றது. இவ்வாறான வாழ்க்கை முறையுள்ள வெள்ளைக்காரன் ஒருவரை எமது தமிழ்ப்பிள்ளைகள் திருமணம் செய்து அதனால் சிறு கருத்து வேறுபட்டு குடும்பம் பிரிய நேரிட்டால் அந்தத் தமிழ்ப்பிள்ளை எமது சமூகத்தில் எதிர்கொள்ள இருக்கும் நெருக்கடி பாரதூரமானது.

வெள்ளைக்காரனைத் திருமணம் செய்யும் எமது தமிழ்ப் பெண்களின் பெற்றோருக்கும் அவர்களது மருமக்க ளுக்குமிடையிலான உறவு, உரையாடல் அந்நியப்பட்டதாகவே மாறிவிடுகின்றது. இவ்வாறான திருமணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகள் தமது அடையாள முரண் நிலைகளை எதிர்காலத்தில் எதிர்கொள்ளலாம்.

வெள்ளைக்கார மோகம் கொண்டு திருமண பந்தத்தில் இணைவது எமது இனத்திற்கு பாரதூரமான எதிர்விளைவுகளையே உருவாக்கும். இதைவிடுத்து எம் இனங்காத்து, மொழிகாத்து, நாம் செயற்பட்டாலே எமது இனத்தின் இருப்பை அடுத்த சந்ததிக்கும் எடுத்துச் செல்லலாம்.





சிறுகதை

# மாவீரர் நாள்

ரேவதி

இப்பத்தான் பத்துமணிக்கு பள்ளிக் கூடம் விட்டது. மழைக்கால நனைஞ்சு கொண்டு வீட்ட வந்தனான். வெள்ளைச் சட்டையக் கூட இன்னும் மாத்தேல்ல வாசலுக்க கத்துறா கணேஷ் அம்மம்மா

"எணை குஞ்சு! சரிதாக்காவப் பாக்கப்போக வேணுமெல்லே! மாலை கட்ட வேணும். கௌரி மாமி வீட்ட நித்திய கலியாணியும், தேயில குறோட் டனும் ஆஞ்சு கொண்டு, ஓடி வாணை என்ர ராசாத்தியல்லே.."

"சரி ஆஞ்சு தந்தா அம்மாவக் கேட்டு, என்னையும் கூட்டிக் கொண்டு போவீங்களோ?"

"கொம்மா விட்டா, கூட்டிக் கொண்டு போறன். நீ முதல் பூவாஞ்சு கொண்டு ஓடி வா"

மகளை பார்க்கிற அவசரத்தில் என்னை விரட்டிக் கொண்டிருக்கிறாள் கணேஷ் பெஞ்சாதி.

கடைசி மகள் சரிதா, ஐந்து வருடம் முன்னால் உயர் தரம் படித்துக் கொண்டிருந்த போது, பாடசாலையில் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான ஆட்சேர்ப்புப் பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டு தன்னையும் போராளியாக இணைத்துக் கொண்டு விட்டாள்.

அவளும் நானும் ஒன்றாகத்தான் பாடசாலைக்குப் போவோம், என்னைப் பின்னால் அமர்த்தி, சைக்கிள் மிதித்த படி ஏதோ எல்லாம் உளறிக் கொண்டு போவாள்.

"என்னக்கா தனியக் கதைக்கிறீங்கள்"

"ம்ம்ம், கதைக்கேல்லையடி. இரவு படிச்சத திரும்பச் சொல்லிப் பார்க்கிறன். நீயும் என்னப் போல வளர்ந்த பிறகு பார், இப்பிடித் தான் அலம்புவாய்"

"நானொண்டும் உங்களப் போல தமிழ் படிக்கமாட்டன். நான் டொக்டருக்கெல்லே படிக்கப் போறன்"

"அப்பிடியே ஆ..."

"அதோட தமிழ் எனக்குப் பிடிக்காது சரியான கஷ்டம், ஐ, ஆல், கு, இன், அது, கண் எண்டு ஒரே குழப்பம்"

"அப்ப நீ ஏன் இப்ப தமிழ் கதைக்கிறாய் வேற ஏதாவது மொழியில கதையன்"

"எனக்கு வேற மொழி ஒண்டும் தெரியாதே"

"இங்க பார் தமிழ், எங்கட தாய்மொழி, ஒரு நாளும் தமிழ் பிடிக்காது எண்டு சொல்லக்கூடாது, நீ பின்னேரம் வா. நான் உனக்கு சொல்லித்தாறன்"

"சரி"

"என்ன கோவமோ?"

"இல்ல நீங்க?"

"இல்ல"

யாரோடும் விவாதித்தால் இறுதியில் கோவமா எனக் கேட்பது அப்போதைய வழக்கமாயிருந்தது. காலப் போக்கில் அது மருகி மறைந்தே போய் விட்டதென்பது வேறு கதை.

அன்றும் அப்படித் தான். இருவரும் பாடசாலைக்குப் போனோம். நண்பகல் நேரம் ஐந்தாம் பாடவேளையாக இருக்கக் கூடும் இரண்டு பிக்கப் வாகனத்தில் ஆண், பெண் போராளிகள் வந்திறங்கினார்கள். இறங்கியவர்களில், ஒரு கை இல்லாத அண்ணன், அதிபர் அறை நோக்கி நடந்தார். அவர்கள் பிரசாரத்துக்காக வந்திருக்கிறார் கள், என்பது எல்லோருக்குமே தெரியும். 'கடவுளே' என்று சொல்லிய படி ஆங்கில வாத்தியார் எங்கள் வகுப்பறையிலிருந்து நழுவிப் பதினொராம் வகுப்புக்குள் தாவி னார். அவரது ஒரே பெண் அகல்யா, அந்த வகுப்பில் தான் இருந்தாள். அனுமதிக்காக அதிபரிடம் போன ஒற்றைக் கை அண்ணா கிடைத்து விட்டது என்பது போல் சைகை காட்டினார். பின் எல்லோரும் ஒன்று கூடி ஏதோ பேசிவிட்டு மேடை இருக்கும் மண்டபம் நோக்கி நடந்தார்கள். மேல் வகுப்பு மாணவர்களும், அந்த மண்டபத் திற்குள் அழைக்கப்பட்டார்கள். சரிதா அக்காவின் வகுப்புக்காரரும் வரிசையாக வந்து கொண்டிருந்தார்கள், அவளைக் காணவில்லை.

பிரசாரத்துக்குப் பயந்து என்னை விட்டிட்டு வீட்ட ஓடிட்டாவோ?

மனதிற்குள் எண்ணியவாறு, பார்வையை விரித்தேன்.

"கூய்ய் நான் இங்க நிக்கிறன்"

"என்ன உந்தப் பக்கமா வாறீங்கள்? நான் நீங்க வீட்டை ஓடிட்டீங்கள் எண்டு நினைச்சன்"

"இல்ல. நான் ஆனந்தி மிஸ்ஸைக் கண்டிட்டு வந்தனான்.சரி நான் போட்டு வாறன்", என்று சொல்லி விட்டு பிரசார மண்டபம் நோக்கி விரைந்தாள்.

அப்போது பிரசாரம் செய்ய போராளிகள் பாடசாலைக்கு வருவது சாதாரண விடயமாக இருந்தது. இரண்டு மூன்று மணிநேரம் ஆக்ரோஷமாகப் பேசுவார்கள். களத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் பற்றிக்கூறும் போது மயிர்க்கூச் செறியும், கேட்பவர்களுக்கு.தலைவரின் தியாகம், நம்மை நம்பி அவர் ஆரம்பித்த போராட்டம், இப்போது வரை கிடைத்திருக்கும் வெற்றிகள், இன்னும் நாம் தோள் கொடுத்தால் கிடைக்கப் போகும் வெற்றிகள், எதிர்காலத்தில் மலரவிருக்கும் தமிழீழம் இவை தான் அங்கு பேசப்படும். பேச்சில் ஈர்க்கப்பட் டவர்கள் போராளியாக இணைந்து கொள்வார்கள்.

'பிரசாரம் முடிந்து விட்டது. இறுதியாக பேசிய அக்கா வியர்வையைக் கைக் குட்டையால் ஒற்றியபடி வெளியே வந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் இரண்டு போராளிகளும், பத்து பதினைந்து மாண வர்களும். ஏனைய மாணவர்கள் மண்டபத்தின் இன்னொரு வாசல் வழியாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

"என்னடி? அந்த அக்காக்களும் அண் ணாக்களும் இயக்கத்துக்கு வாறம் எண்டு சொல்லிட்டினம் போல" அருகில் இருந்த தோழி காதில் கிசு கிசுத்தாள். "வாறியே? அதில போய்ப்பாப்பம்" நான் கேட்டேன்.

"வா!" இருவரும் அவர்களை நோக்கி நடந்தோம். அவர்களில் சரிதா அக்காவும் ஒருத்தி. விக்கித்து அவளைப் பார்த்த படியே நின்றேன். அவளும் என்னைப் பார்த்தாள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கைக்குட்டையை காற்சட்டை பைக்குள் திணித்த படி

"எல்லாரும் ஏறுங்கோ" என்றாள், அந்தப் போராளி அக்கா, ஒவ்வொரு வராக ஏறிக்கொண்டி ருந்தார்கள். சரிதா அக்காவின் முறை. என்ன நினைத்தாளோ சரிதா அக்கா, சட்டென்று திரும்பி என்னை நோக்கி வந்தாள்.

"தங்கச்சி எங்க போறீர்?" என இன்னொரு போராளி அக்கா கேட்டதைப் பொருட்படுத்தாமல் "அக்கா! விருப்பப் பட்டு தான் இயக்கத்துக்கு போறன்.

கவலப்பட வேண்டாம் எண்டு, அம்மம்மாட்ட சொல்லு, வடிவாப்படி. அக்கா ட்ரெயினிங் முடிச்சு லீவில வரேக்க கதைக்கிறன். அழக்கூடாது, கவனம். சொல்லி விட்டு வாகனத்தை நோக்கி நடந்தாள். அவள் ஏறியது தான் தாமதம் புழுதியை உமிழ்ந்து விட்டு பறந்து விட்டது "பிக்கப்"

அம்மம்மா தலையிலடித்து அழுதாள், "துலைவாருக்கு என்ர பிள்ளையே கிடைச் சது. அய்யோ காய்ச்சல் வந்தாலே தாங்க மாட்டாளே என்ர பிள்ளை" ஒரு வாரம் ஒரே அழுகை. பின் மெல்ல மெல்ல அழுகை குறைந்து ராத்திரியில் மட்டும் அழுவாள். யாராவது போராளிகளை கண்டால்"

"சரிதா எண்டு இப்பத்தான் சேர்ந்தவா தெரியுமோ? புதுசா சேருறவைய எங்க வச்சிருப்பினம்? ட்ரெயினிங் எத்தின மாதம்?" கேள்விகளால் துளைத்து விடுவாள்.

ஆறு மாதம் கடந்துவிட்டது. அப்பா எனக்கு புதிதாக வாங்கித்தந்த சைக்கிள் சரிதா அக்கா பற்றி ஓரளவு மறக்க வைக்க முயன்றாலும், பாடப்புத்தகங்களிலும், அப்பியாசக் கொப்பிகளிலும், உறை போட்டு அழகாக அவள் எழுதித் தந்த எனது பெயர், படிக்கும் போது அவளை ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தது.

அன்றொரு திங்கட்கிழமை, பாடசாலை முடிந்து வீடு வந்தேன். உடை மாற்ற என் அறைக்குள் நுழைந்தது தர்ன் தாமதம்,

"ப்பா" என என்னை மிரட்ட அலறிய படி வந்தவளை ஏறிட்டேன் சரிதா அக்கா.

முன்னிலும் பார்க்கச் சற்று உயரமாக பருமனாக இருந்தாள். நீண்டு வளர்ந்தி ருந்த கூந்தலை ஒரு பெடியனைப் போல் ஒட்ட வெட்டியிருந்தாள். வரியுடையில் மிக அழகாக இருந்தாள். அவள் பிரிந்த போது வராத அழுகை இப்போது தான் பொத்துக் கொண்டு வந்தது எனக்கு.

"ஏன் போன்னீங்கள்?"

"நான் போனா தான் நீ டொக்டரா வரலாம்"

"ஏன்?"

"என்னப்போல இருக்கிற அக்காமார், அண்ணாமார் போனாத்தானே உன்னப் போல சின்னாக்கள் நிம்மதியா படிக்கலாம் இல்லாட்டி இங்க ஆமி வந்திடுவான். நீங்கள் படிக்க ஏலாது"

"உண்மையாவோ?"

"அண்ணையாணை அப்பிடித்தான்"

"அது என்ன அண்ணையாண?"

"அது அப்பிடித்தான்"

"அப்ப நானும் இனி சத்தியமா எண்டு சொல்ல மாட்டன்"

"அப்ப?"

"அண்ணையாணை எண்டு சொல்லுறன்"

"சரி" அழகாக சிரித்தாள். என்னோடு அமர்ந்து சாப்பிட்டாள்.

"சரிதாக்கா பின்னேரம் படிப்பகம் போவமே? நீங்கள் போன பிறகு நான் போய் இருந்து வாசிக்கிறேல்ல"

"சரி போவம். ஆனா நான் இப்ப சரிதாக்கா இல்ல தெரியுமோ?"

எனக்கு நெஞ்சை அடைத்தது. அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தேன். என் முழியை பார்த்து அவளுக்குச் சிரிப்பு முட்டிக் கொண்டு வந்ததென்று நினைக்கிறேன்

"நான் சரிதா தான், இப்ப என்ர பேர் எழில்"

புரிந்துவிட்டது. போராட்டத்தில் இணைந்தவர்களுக்கு பயிற்சியின் ஆரம்பத்திலேயே சொந்தப் பெயரை மாற்றிப் புதிதாக ஒரு பெயர் வைத்து விடுவார்கள். சரிதா அக்காவுக்கு அதை சரியாகவும் வைத்து விட்டார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# பின்லாந்தில் ஒளிந்திருக்கும் ரகசியம்

ஏஜேஜி



**உ**லகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது. அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில்?

பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது. கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் இலங்கைப் பிள்ளைகளைப் போல எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை.

எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வொரு அசைவில் இருந்தும் ஒவ்வொரு ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூட நம்பிக்கை. ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை.

## கலைகளுக்கு முதலிடம்

ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவுதான். அந்த நேரத்திலும் கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் பிற கலைகளுக்கும் உண்டு ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை இருக்கும். படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம். தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை. சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை. இவர்களுக்கு வீட்டுப் பாடம் தரப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப் பாடம் செய்து வரலாம். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல் நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார். ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம். அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது.

## தனியாருக்கு தடை

முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். கோடீஸ்வரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில்தான் படிக்க வேண்டும்.

அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி என்ற உத்தரவாதம் உள்ளது.

அதனால் தான் பின்லாந்தில் 99 சத விகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்று விடுகின்றனர்.



அதில் 94 சதவிகிதம் பேர் உயர் கல்விக்குச் செல்கின்றனர். ரியூஷன்என்ற அருவருப்பான கலாசாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை..

## வெற்றியின் ரகசியம் என்ன?

தேர்வுகளை அடிப்படை முறைகளாக கொள்ளாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர்.

இது எப்படி? என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்தப் புதிருக்கான விடையை, ஐ. நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது. உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

## கல்விச் சுற்றுலாவால் வருமானம்

பின்லாந்து கல்வி முறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர். நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சத விகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது. ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ் மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை.


அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், “பின்லாந்து கல்வி முறைதான் (Finnish Education system) உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. ஏனெனில் 'OCED' அமைப்பின் ஆய்வில் எல்லா உலக நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களைவிட சிறந்த கல்வி முறையும் இருக்க வாய்ப்பு உள்ளது” என்கிறார்கள். இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக் கொள்ளும் தற்பெருமையாளர்கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை.

## மதிக்கப்படும் ஆசிரியர்கள்

பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியராவதுதான் தன் வாழ்நாள் லட்சியம்.

அதே நேரம் அங்கு ஆசிரியராவது அத்தனை சுலபம் அல்ல! மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள், உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும்பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறுமாத காலம் ராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி.

பின்லாந்து கல்வியில் உலகில் முதன்மையாக இருப்பதற்கு இதைவிட வேறு என்ன காரணங்கள் வேண்டும்?



# தாயகக் கனவி


## மு

முதலாவது தளபதி



லெப்டினன்ட் சீலன் (ஆசிர்)
ஞானப்பிரகாசம் லூக்காஸ்
சார்ள்ஸ் அன்ரனி
புனித மரியாள் வீதி,
திருகோணமலை.
1960.12.11 - 1983.07.15

முதலாவது முஸ்லிம் மாவீரர்



லெப்டினன்ட் ஜோன்சன்
ஜுனைதீன்
ஓட்டமாவடி, மட்டக்களப்பு
1963.08.22 - 1985.11.30

முதலாவது கரும்புலி



கப்டன் மில்லர்
வல்லிபுரம் வசந்தன்
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
1966.01.01 - 1987.07.05

முதலாவ



லெப்டினன்
செல்வச்சந்
கம்பர்மலை,
பிறப்பு
1961-06-19

## முதற் கடற்கரும்புலிகள்



கப்டன் கொலின்ஸ்
பர்ணாந்து சில்வெஸ்டர்
நறுவிலிக்குளம், மன்னார்
1969.12.05 - 1990.07.10



மேஜர் காந்தரூபன்
யோகராசா கோணேஸ்வரன்
வல்வெட்டித்துறை
1971.09.10 - 1990.07.10




கப்டன் வினோத்
வேலுப்பிள்ளை திலகராசா
காட்டு வளவு, வல்வெட்டித்துறை
1970.08.19 - 1990.07.10



# ல் வீழ்ந்த
# முதல் வித்துக்கள்

## ாவது மாவீரர்



டினன்ட் சங்கர் (சுரேஸ்)
வச்சந்திரன் சத்தியநாதன்
லை, வல்வெட்டித்துறை.

| பு | வீரச்சாவு |
|---|---|
| 6-19 | 1982-11-27 |

## முதலாவது பெண் மாவீரர்



2ம் லெப். மாலதி
பேதுறுப்பிள்ளை சகாயசீலி
அடம்பன், மன்னார்.
1967.01.04 - 1987.10.10

## முதலாவது பெண் கடற்கரும்புலி



கப்டன் அங்கையற்கண்ணி
துரைசிங்கம் புஸ்பலதா
கொக்குவில் மேற்கு
1973.05.10 - 1994.08.16

## முதலாவது பெண் தரைக்கரும்புலி



மேஜர் யாழினி
சிவசுப்பிரமணியம் ராகினி
உரும்பிராய் தெற்கு
1975.05.02 - 1997.10.09

## முதல் வான் கரும்புலிகள்



லெப்.கேணல் ரூபன்
20.02.2009



லெப்.கேணல் சிரித்திரன்
20.02.2009

## முதலாவது அஹிம்சை மாவீரர்




தியாகி.லெப்.கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன்
ஊரெழு மேற்கு
1963.11.27 - 1987.09.26

## முதலாவது தமிழீழ தேசிய துணைப்படை மாவீரர்



ஜேசுதாசன்
ஏகாம்பரம் ஜேசுதாசன்
இராமநாதபுரம், வட்டக்கச்சி
1981.06.15 - 2001.06.16

த.அஜந்தகுமார்



# சோதிடம் ஒரு திடம்

அ)

**1997** எனக்கு அந்தத் தோட்ட வெளியின் காத்தும் அமைதியும் தடக்கிவிழச் செய்யும் வரம்புகளும் குளிர்ந்து காலைச் சிலிர்க்க வைக்கும் புற்களும் பரவசம், பரபரப்பு, பயம் என்று அலைவரிசைகளை மாற்றிக் கொண்டிருந்தன. தோட்டக்கரையோடு அந்த வைரவர் கோயில் இருந்தது. கனக்கச் சனம் நின்றார்கள். வெண் பஞ்சாய்ப் போன தலையுடன் கொஞ்சம் உயர்ந்த அந்த மனிசியை எல்லோரும் பய பக்தியோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவவின் கையில் அவ அளவு உயரமான தடியொன்று இருந்தது. அதை ஊன்றி ஊன்றி அவ ஒரு பயங்கர நடனமொன்றை ஆடினா. எல்லோரும் எழுபதைத் தாண் டிய அந்த மனிசியின் ஆட்டத்தை பக்தி யோடு வியந்துநின்றார்கள். பிறகு தடியை ஊன்றியபடி நடந்து கோயில் விறாந்தையில் இருந்தா. ஒரு வட்டமாய் எல்லோரும் அவவைச் சுத்தி இருந்தம். என்னைக் கூட்டிக்கொண்டு வந்த மணியக்காக்குப் பக்கத்தில் நான் இருந்தேன். வரிசை என்று ஒன்று இல்லை. அவ யாரை நோக்கித் தடியால ஓங்கித் தரையில அடிக் கிறாவோ அவை தங்கன்ர பிரச்சினையைச் சொல்ல வேண்டியதுதான். சிலரைப் பார்த்து அவ கோபப்பட்டா. எழும்பித் தடியை ஊன்றி ஒரு வெறித்த பார்வையும் பார்த்து ஏதோ சொல்லிக் கத்தினா. திரும்பிப் பார்த்தன். தோட்டம் எல்லாம் இருட்டாய்த் தெரிந்தது. பயத்தில கண்ண இருட்டிற மாதிரிக் கிடக்கு. எனக்குக் கொஞ்ச நாளா நெஞ்சுச் சளியால ஒரே இழுப்பு. படுக்கேலாது, நடக்கேலாது, நிமிர்ந்து கூட இருக்கேலாது. ஒரு இசை வாத்தியமாய் நான் ஆகியிருந்தேன். அதன் ஆக்கினையை வார்த்தைகளால் சொல்லி விட முடியாது. மணியக்காதான் "இவவிட் டப்போனா நல்லது. அவ திருநீறு போட்டு ஏதும் சொல்லுவா. அதக்கேட்டு நடந்தா நல்லது" எண்டு சொன்னா. அம்மா மணி யக்காவோட என்னை அனுப்பியிருந்தா. தடி என்னை நோக்கி வந்து விழுந்தது. வெண்தலையும் அந்தக்கண்களின் ஒளியும் கோயிலின் ஒளியும் உண்மையாகவே அம்மனாச்சி மாதிரி அவவைக் காட்டிச்சு. "ஆமணக்கம் எண்ணையுக்கை கதலிப் பழத்தை இரவு ஊறவைச்சு காலைமை சாப்பிட்டா இது மாறிப்போயிடும்" எண்டு அமைதியாச் சொல்லிப் போட்டு தடிவேறு திசையில் விழுந்தது. ஆமணக்கு எண்ட தும் பாரதி சொன்னதாக யாரோ சொன்ன "கணக்கு எனக்குப் பிணக்கு ஆமணக்கு" ஞாபகம் வந்தது. அம்மா ஆமணக்கு எண்ணையுக்கை கதலியை ஊறவைச்சு காலைமை எடுத்த போது அதைப் பாத்த உடனேயே எனக்கு குமட்டிக்கொண்டு வந்தது. அடுத்தநாள் மணியக்கான்ரை செந்தில் அண்ணா "என்னடா வாக்கில உனக்கு பதினெட்டுவயதில கலியாணம் எண்டு சொன்னவாம்" எண்டு கேட்க நான் சிரிக்க, வெட்டை முழுவதும், ஊர் முழுவ தும் என் பதினெட்டுவயதுக் கலியாணக் கதை பரவியது. பதினெட்டுவயதைத் தாண்டும் வரை அது நீடித்தது. பத்தொன் பது வயதானதும் எனக்குக் கூடக் கவலை வந்தது எண்டா நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்.

ஆ)

**1998, 1995** இடப்பெயர்வோடு வடமராட்சிக்கு வந்த ஒருவர், எங்கள் அம்மனடியில் வாக்குச் சொல்லத் தொடங்கினார். அங்கே இருந்த அம்ம னாச்சிக்கு அது பிடிக்கவில்லைப் போல் இருந்தது. தன்ரை கொட்டிலை விட்டு அவ வெளியில வாறதில்லை. அவ வாக்கைப் பாட்டாகத்தான் சொல்லுவா. சிலருக்கு விளங்கும் சிலர் விளங்கியது போலத் தலையாட்டுவினம். இப்ப புதிதாக வந்த அவர் ஒவ்வொரு புதனும் வெள்ளி யும் வாக்குச் சொல்லத் தொடங்கினார். அவர் வசனமாகத்தான் சொல்லுவார். ஆணா கிய அவரையும் எல்லோரும் அம்மன் என்றுதான் கும்பிட்டார்கள். எனக்கும் ஒரு பயபக்தி இருந்தது. இரண்டு கிழமைக்கு முன் கொடுத்த தேங்காய் திரும்பக் கொண்டுவரும் போது பூஞ்சணம் போல ஏதோ பிடித்திருக்கும். அதைக் கொண்டு வந்தவர்கள் முகம் பேயறைந்த தாய் மாறி இருக்கும். தேசிக்காய்களை வெட்டிக் காய்வெட்டிவிடுவார். அன்று வெள்ளிக்கிழமை. நான் அம்மம்மா என்று அன்போடு அழைக்கும் உறவில்லாத எங்கள் வீட்டோடு நெருக்கமான ஒருவருடன் அம்மனடிக்குப் போனேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினை யைச் சொல்லி அழுதுகொண்டிருந்தார்கள். அம்மனும் ஏதோ ஏதோ தீர்வுகள் சொல்லிக் கொண்டிருந்தா. அம்மம்மா தானும் ஒரு பிரச்சினை கேட்கப்போறன் எண்டா. என்னை "ஏதும் கேட்கப்போறியோ" எண்டா. நான் இல்லை என்று தலையை ஆட்டினேன். இவ வெளிநாட்டுக்குப் போறதைத்தான் கேட்பா எண்டு. நான் அங்கால நிண்ட வாழைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். அப்ப இந்த அம்மம்மா, அம்மனிட்ட "அம்மா என்ரை புதுச் செருப்பு நேற்றுத் தொலைஞ்சு போச்சு. ஆர் எடுத்திருப்பினம்" எண்டா. அம்மனும்" வீட்டுக்குவாற நாலுபேற்ற முதல் எழுத்தைச் சொல்லச் சொன்னா "க, இ, சி, பா" என்று அம்மம்மா சொல்ல அம்மன், 'க' என்று சொன்னா. எனக்கு படக்கெண்டு ஒரு மாதிரிப் போட்டுது. எனக்கு அவவைப்பாக்க ஒரு மாதிரிக் கிடந்தது. இரண்டு பேரும் வீட்ட நோக்கிப் போகேக்கை ஒண்டும் கதைக்கேல்ல. வீட்டுக் கேற்றைத்திறந்து போக ஒற்றைச் செருப்பு வேப்ப மரத்தடியில கிடந்தது. கறுப்பன்தான் (நாய்) விளையாட்டுக் காட்டி இருக்கிறார். 'க' என்பது என் அம்மா அல்ல என்று கறுப்பனே என்று சமாதானம் ஆகினோம். அதுக்குப் பிறகு சந்தோசமா அம்மம்மா தந்தா எள்ளுப்பா வைப் சாப்பிடத் தொடங்கினன்.

இ)

**2002** புரட்டாதி, அவவிடம் நிறையப் பேர் காவல் இருந்தார்கள். நானும் கிட்டுவும் இருந்தோம். சாத்திரம் கேட்க வந்த ஒவ்வொருவரின் பிரச்சினைகளும் அனுமனின் வால்போல் நீண்டு கொண்டே இருந்தது. எங்கள் முறை வந்தது. என் குறிப்பைக்கொடுத்தேன். "யாருடையது" என்று கேட்டா, நான் "அண்ணாவின்ரை" எண்டேன். பார்த்துக் கொஞ்சத்தால சொன்னா, "இவன் இந்த மார்கழிக்குள்ள இயக்கத்துக்குப் போடு வான்" எண்டு. எனக்கு ஒரு மாதிரிப் போட்டுது. வாய்வீரம் மட்டுமே உள்ள நானாவது இயக்கத்துக்குப் போறதாவது எண்டு எனக்குச் சிரிப்பு வாறமாதிரியும் இருந்தது. நான் சொன்னேன், "இவன் கம்பசுக்குப் போவானோ" எண்டு. "இல்ல நிச்சயம் போகமாட்டான். இயக்கத்துக் குத்தான் போவான்" என்று மேசையில் அடிச்சுச் சொன்னா. "இது அண்ணான்ரை இல்ல என்ரைதான். நான் இயக்கத்துக்குப் போகமாட்டன் கம்பசுக்குத்தான் போவன். உங்களட்டை வந்து சொல்லுறன் அப்ப பாருங்கோ" எண்டு ஒரு வீறில கதைச்சன். அவ சொன்னா "அதையும் பாப்பம்" எண்டு. அவவைச் சந்திச்ச பிறகுதான் விளையாடிக் கொண்டு திரிஞ்ச எனக்குள்ள ஒரு இராட்சதன் புகுந்தான். பிளான் பண்ணிப் படிக்கத் தொடங்கினன். ஆனா சாத்திரத்தை நினைச்சு ஓரத்துக்க ஒரு பயம் இருக்கத்தான் செய்தது. கம்பசுக்குக் கிடைச்சோன்ன அவவுக்குப் போய்க் கன்டோஸ் குடுக்கணும் மாதிரிக்கிடந்தது. ஆனாக் கொடுக்கேல்ல.

ஈ)

சோதிடம் ஒரு விஞ்ஞானம் என்றே கூறுகின்றார்கள். ஆனால் அதைச் சொல்ப வர்களில் பலர்தான் உண்மையாக இல்லை என்று விமர்சனமும் உண்டு. கிரகங்கள் பற்றிய கருத்துக்களில் உண்மைகள் இருக்கவே செய்கின்றன. சோதிடம் திடத்தையும் பயத்தையும் மனித மனங்க ளில் விதைத்து விடுகின்றன. அதைச் சாதகமாகப் பயன்படுத்தும் மன வல்லமை என்பதும் முக்கியமானது. பணமே வாங்காமல் அதை ஒரு சேவையாகச் செய்யும் சிலரும் இருக்கவே செய்கிறார் கள். ஆராய்ச்சியாகவே அதைச் செய்பவர் களும் இருக்கவே செய்கின்றார்கள். நடந் ததைச் சொல்பவர்கள் நடக்கப் போவதை துல்லியமாகச் சொல்ல முடியாது என்றும் கருத்துண்டு. இன்றைய வாழ்வில் சோதி டத்தின் பக்கம் போகாமல் எம் வாழ்வே இல்லை என்றுதானே இருக்கிறது.

# மரங்கொத்திக் கனவுகள்

நான் கடக்கவே
முடியாமல் நின்ற வீதிகளில்
ஒரு 'பபிள்கமை'
மென்று கொண்டே
வாகனங்களை மஞ்சள் கோடுகளில்
குடைசாய வைத்து
எனை மீட்ட யட்சிக்கு......
மரங்களில் துளையிட விரும்பாத
மரங்கொத்தியாய் இருந்த
என்னை - தன்
பசுமர நினைவுகள் மீது
கொத்தச் செய்த
ஆறாம் வகுப்பில்
நான் கண்ட ஓரளவு
அழகான பெண்ணிற்கு....
அகத்துள்ளிருந்து ஆதரித்து
புற நினைவுகளிலிருந்து விலகி
எங்கெங்கோ போன
குறுந்தொகைப் பெண்ணிற்கு.....
என் ஈகோவுக்கு முன்னால்
தன்னை நிரூபிக்க முயன்று
என்னிடம் தோற்று,
தன்னை வென்ற
கிராமத்துக் காரிக்கு.....
அல்லது
வேற்றுக் கிரகத்தில் மாருதிக்கார்
ஓட்டும் அவளுக்கு......
எனக்கே புரியாமல்
நானெழுதும் கவிதைகளை
எனக்கு மொழிபெயர்க்கும்
கொஞ்சம் தமிழ் படித்த,
கூடவே கிறுக்கும் பிடித்த
கவிதைக் காரிக்கு.....
நான் சொன்ன இவ்வளவு
வரிகளையும்
கவிதையெனச் சொல்லி,
மொழிபெயர்த்து
இன்னும் இனியும்
நான் வெற்றிபெறுவேன்
என்றெண்ணும் - அந்த
அந்தகாரக் குழலிக்கு.....
ஆறோ ஏழோ
எண்ணிக்கை தெரியவில்லை..
கவிதைக்காக மட்டும்
கடந்து போன பெண்கள்....
ஆனபோதும் இன்றும் நான்
ஒரு பெண்ணியவாதி தான்....!

இரட்ணேஸ்வரன் சுபாந்தன்.



# நாளைய வன்முறையாளர்களை இல்லாதாக்குதல்

நி.சுவேந்தினி
கிளிநொச்சி



இப்போதெல்லாம் இளைஞர்கள் முன்னைய காலங்கள் போல இல்லை. பிஞ்சிலேயே பழுத்து, போகக்கூடாத பாதைகளி லெல்லாம் பயணப்படத் தொடங்கிவிட்டனர். இதனாலேயே, இப்போது நம் நாட்டில் பல சீரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. பிள்ளைகள் பலர் தவறானவழிக் குச் செல்வதற்கான சமூகக் காரணிகளில் முக்கியமானவர்கள் பெற்றோரே. பெற்றோர் தமதுபிள்ளைக ளைத் தவறான முறையில் கையாளுதல் மற்றும் அவர்களைப் பாராமுகமாக விடுதல் போன்ற செயற்பாடுகளினால், அதிகமான பிள்ளைகள் வழிதவறிப் போகிறார்கள் எனப் புள்ளிவிபரங்கள் அறிக்கையிடுகின்றன.

பெற்றோரினால் வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் பிள்ளைகளின் அடிமனதில் பதிந்து விடும். அத்தோடு பிள்ளைகளைப் பாரா முகமாக விடுகின்றபோது அவர்கள் உளப்பாதிப்பிற்கும் ஆளாகின்றனர்.

பிள்ளைகளைத் தண்டித்தல், பாரா முகமாக விடல் என்பவற்றால், இன, மத, சமூகப் பொருளாதார வழிகளை ஊடறுத்து, பால், அகவை, கல்வித்தரம், போன்ற காரணிகளால் பகுத்துப் பார்க்க முடியாதவர்களாய், பல மட்டங்களிலிருந் தும் பிள்ளைகளைத் தவறான வழிக்குச் செல்லவழிவகுக்கிறது.

ஏன்? பெற்றோர் பிள்ளைகளை உள, மற்றும் உடல் ரீதியிலான தண்டனைக்கு உள்ளாக்குகின்றனர்?

பெற்றோர் இப்படிநடந்துகொள்ளக் காரணம் என்ன?

இது அவர்களின் மன அழுத்தத்தால், குடும்பச் சுமைகளால், உளவியல் தாக்கத்தினால் மேற்கொள்வதாகவே இருக்கும். குறிப்பாக இது அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் வாயிலாக வெளிப்படும்.

திருமணவிலக்கு, பொருள் வளக் குறைவு, மது அல்லதுபோதைப் பொரு ளுக்கு உள்ளாதல், சீரற்ற வதியும் இடம் போன்றவற்றை ஈடுசெய்ய முடியாமல் பல பெற்றோர் இடர்ப்படுகின்றனர். பொதுவான அல்லது சீரற்ற வருமானத் தைப் பெறும் குடும்பங்களிலேயே, இந்த நிலை அதிகமாகக் காணப்படுகிறது.





இதனைவிட, மறு திருமணம், ஆண் / பெண் நண்பர்களுடன் கூடிவாழ்தல், பட்டறிவற்ற பெற்றோர், பெற்றோருக்கிடையே திருமணச் சிக்கல் கள், மது மற்றும் போதைப் பொருட்ப் பாவனைக்கு அடிமையாதல், பெரிய குடும்பம், ஏழ்மை, தொழிலின்மை, பிள்ளையின் உடற் குறைபாடு போன்ற வற்றால் பெற்றவர்கள் மன அழுத்தம் கொண்டு பிள்ளைகளைத் தண்டிக்கின் றனர். அத்துடன் இப்பெற்றோர், தம் இள மைக் காலத்தில், தாம் முகங்கொடுத்த தவறான வழிநடத்தல்களை, பின்னர் அவர்கள் தனித்து ஒதுக்கப்படும் போதும் தம் பிள்ளைகளில் அதைத் தீர்த்துக் கொள்வது போல் நடக்கின்றனர்.

## குடும்ப வன்முறைகள்

ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு, ஒரு சுழற்சி முறையாகக் கொண்டு செல்லப்படுகிறது. இப்படியாக ஒதுக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது, சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு சிறுவன் அல்லது சிறுமி உடல் ரீதியாகவோ, பாலியல் ரீதியாகவோ தூண்டப்படுகின்ற போது, அல்லது துன்புறுத்தப்படுகின்ற போது அவர்கள் உளவியல் ரீதியான தாக்கத்தை அடை கின்றனர். அவ் ஆழ்மனப் பதிவுகளே, பிற்காலத்தில் அச் சிறுவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கிறது.

பிள்ளைகளைப் பாராமுகமாக விடுதல் என்பது,

"பிள்ளைகளுக்கு உணவூட்டலைத் தவிர்த்தல்"

"தகுந்த மேற்பார்வை இல்லாது வீட்டின் வெளியே விடுதல்"

"தீங்கு விளைவிக்கும் பொருட்களை பிள்ளைகளிற்கு வாங்கிக் கொடுத்தல்"

"பிள்ளைகளை உரிய காலத்தில் பள்ளிக்கு அனுப்பாமை"

"உளவியல் ரீதியிலான கல்வியில் விருப்புக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு உணர்வூட்டாமை காரணமாக பிள்ளைகளுக்கு மனச்சோர்வு ஏற்படுத்தப்படல்"

"நவநாகரீகம் என்ற போர்வைக்குள் நடக்கும் சீர்குலைவுகள்"

"உணர்வுகளைத் தூண்டும் கொலை, கொள்ளை, பாலியல் காட்சிகளைத் தொலைக்காட்சி மூலம் பார்க்க அனுமதித்தல்" என்பனவாகும்.

இத்தாக்கங்களினால் பிள்ளைகள், நம்பிக்கையற்ற தன்மையை அடைவர், கவலையை வெளிப்படுத்துவர், பிடிவாதம், கடுமையான போக்குக் காணப்படும், தொடர்ந்த உறக்கம், களைப்பு, உறங்குவ தில் இடர்படல், தற்துணிவுக் குறைவு, கிரகித்தல் குறைபாடு, வீடு செல்லமறுத்தல் போன்ற பலகுறைபாடுகள் தலைதூக்கும்.

பெற்றோரே! நாளை உங்கள் பிள்ளை கள் கூட இவ்வாறான காரணங்களால் வன்முறையாளர்களாக மாற இடமுண்டு.

எனவே பெற்றோராகிய நாம் பிள்ளை களைப் பிள்ளைகளாக வளர்ப்பதில் அக்கறை கொள்வோம். ஆழ்மனதில் நல்ல எண்ணங்களை விதைப்போம். அவ்வாறு செய்தால் பிள்ளைகள் வளரும் போது நல் எண்ணங்களும் அவர்களுடன் சேர்ந்தே வளரும். காலையில் கண் விழிக்கும் பிள்ளைக்கு, உங்கள் மலர்ந்த முகத்தைக் காட்டுங்கள். பிள்ளைகளோடு உரையாடுங்கள். பிள்ளைகளோடு விளை யாடுங்கள். பாடம் படிக்கும் போது அவர்களின் அருகிலிருங்கள். அன்பான வார்த்தைகளை அவர்களுடன் பகிருங்கள். சமூகத்தின் மீதான மதிப்பை அவர்களுக்கு உணர்த்துங்கள். பிள்ளை வளர்ப்பில் விழித்திருங்கள். வெற்றி உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் கிடைக்கும்.

# புலிகளின்...

(03ஆம் பக்க தொடர்ச்சி...)

இதற்கெல்லாம் வசதியாகச்சாலையில் கடற்புலிகள் பெரியதொரு தளத்தை உருவாக்கியிருந்தனர். இப்படிப் பல காரணங்களால் புலிகளின் தலைமை புதுக்குடியிருப்பில் தன்னை நிறுவிக் கொண்டது. 1996 க்குப் பிறகு புதுக்குடியிருப்பு, வன்னியின் பெரு நகரமாகியது. சனங்களும், கடைகளும், தொழில் மையங்களும், பத்திரிகை நிறுவனங்களும், பாடசாலைகளும், கோயில்களும் என்று வளரத் தொடங்க புதுக்குடியிருப்பின் காடுகள் அழிந்தன. யானைகளை அந்தப் பகுதியில் காணவே முடியவில்லை.



வன்னியைக் கைப்பற்றுவதற்கு சந்திரிகா அரசாங்கம் முன்னெடுத்திருந்த மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை ஜெயசிக்குறு. இதற்கு எதிரான பதில் நடவடிக்கையைப் புலிகள் புதுக்குடியிருப்பிலிருந்தே நெறிப்படுத்தினர். புலிகளின் மருத்துவ முகாம்கள், களஞ்சியங்கள், பயிற்சி மையங்கள், சந்திப்பிடங்கள், பாதுகாப்பிடங்கள், துறைசார் நிறுவனங்கள், ஈழநாதம், ஈழநாடு, வெளிச்சம், புலிகளின் குரல், ஆதாரம், நாற்று, சுதந்திரப்பறவைகள், விடுதலைப்புலிகள் என்ற ஊடகங்கள் எல்லாமே புதுக்குடியிருப்பில்தான் இயங்கின. படைப்பாளிகளும் துறைசார்ந்தவர்களும் கூடும் இடமாக புதுக்குடியிருப்பு இருந்தது."எழுகலை இலக்கியப்பேரவை" புதுக்குடியிருப்பில் உருவாகிய ஒன்று. "வெளிச்சம்" இதழ் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாகக் கலை, இலக்கியக் கருத்தரங்கை நடத்தியது. ஓவியர்கள் தயா, பயஸ், முல்லைக்கோணேஸ் ஆகியோரின் ஓவியக் காட்சிகள் தயார்ப்படுத்தப்பட்டன. இருந்தபோதும் அவை நடக்காமல் போயின. நிலாந்தனுடைய ஓவியக் காட்சி, ஏராளமான நூல் வெளியீடுகள் என விழாக்களும் கூட்டங்களும் சந்திப்புகளுமாகக்களைகட்டின அந்த நாட்கள். பல தரப்பினரோடும் பிரபாகரன் சந்திப்புகளை புதுக்குடியிருப்பில்தான் அதிமாக நடத்தினார். இப்படியெல்லாம் இருந்தாலும் விமானக்குண்டு வீச்சுகளுக்கும் குறைவில்லை. எந்தநாளும் புதுக்குடியிருப்பைச் சூழவுள்ள காட்டுப் பகுதிகளிலும் கடற்கரையோரங்களிலும் விமானங்கள் குண்டு வீசிக்கொண்டேயிருந்தன. இடையிடையே ஊர்மனைக்குள்ளும், குண்டு வீச்சுகள் நடப்பதுண்டு.

## விழ விழ எழுதல்

புதுக்குடியிருப்பில் 1990 களில் மூன்று பெரிய விமானக் குண்டு வீச்சுகள் நடந்தன. ஒன்று மாத்தளனில். ஒரு மாலை நேரம், மாத்தளன் களப்பினோரம் விழாவொன்றுக்காகச் சனங்கள் கூடியிருந்த வேளை, இந்தக் குண்டு வீச்சு நடந்தது. இதிலே 18 பேர் கொல்லப்பட்டனர். இன்னொரு குண்டு வீச்சு, மந்துவில் சந்தியில் நடந்தது. இதில் 22 பேர் பலியாகினர். இதைப்போல இன்னொரு பெரிய தாக்குதல் சுதந்திரபுரத்தில் நடந்தது. ஒரு காலை நேரம், சுதந்தரபுரத்தில் இருந்த அகதிக்குடியிருப்பில், குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின. சமநேரத்தில் ஆனையிறவிலிருந்தும் அம்பகாமத்திலிருந்தும் படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தியிருந்தனர். "இந்தளவு தொலைவிலிருந்து எறிகணைகள் வருமா?" என்று சனங்கள் கலங்கிப் போயிருந்தனர். அரை மணி நேரமாக எறிகணை வீச்சும் குண்டு வீச்சுமாக நடந்த அந்தத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 53 பேர் புலியாகினர். இதெல்லாம் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் நடந்தது. "சமாதானத்துக்கான யுத்தத்தில் இப்படியெல்லாம் நடப்பது சாதாரணமான விசயம்" என்று அரசாங்கம் தெரிவித்தது. என்றாலும் "விழ விழ எழுவோம்" என்ற மாதிரி, புதுக்குடியிருப்பு மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போனது.

புலிகளின் கப்பல்கள் புதுக்குடியிருப்பை அண்மித்த கடற்பிராந்தியத்துக்கே வந்தன. சாலை கடற்புலிகளின் பெரிய தளமாக இருந்தது. புதுக்குடியிருப்பிலிருந்து வடக்கே உள்ள இந்தத் தளத்தை இலக்கு வைத்து, இலங்கை விமானப் படை தொடர்ச்சியாகக் குண்டுகளை வீசிக் கொண்டேயிருந்தது. ஆனாலும் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. "ஜெயசிக்குறுவை" முறியடிக்கும் "ஓயாத அலைகள்" தாக்குதல் புதுக்குடியிருப்பிலிருந்தே திட்டமிடப்பட்டது. கிளிநொச்சி, ஆனையிறவு, இயக்கச்சி மீட்புச் சமர்களும், குடாரப்புத் தரையிறக்கமும், புதுக்குடியிருப்பின் திட்டமிடல்களே. கட்டுநாயக்க விமானத்தளத் தாக்குதல், கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் எல்லாமே புதுக்குடியிருப்பின் விளைச்சல்களே.

## உயர் பாதுகாப்பு வலயம்

2000 ஆண்டில், புலிகளின் உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு புதுக்குடியிருப்பு மாறியது. புலிகள் வலுச்சமனிலையில் முன்னின்றனர். விளைவாக 2002 இல் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கான ஆயத்தங்கள் நடந்தன. அதற்கு முன்பு 1998 இலும் பேச்சுகளுக்கான ஒரு முயற்சி நடந்தது. அந்தப் பேச்சுக்களை மல்லாவியில் நடத்தலாம் என்று திட்டமிட்டிருந்தார்கள். அது குழம்பிப்போனது. புதுக்குடியிருப்பிலிருந்த அன்ரன் பாலசிங்கமும் சாலைக்கடல் வழியாக சர்வதேசக் கடற்பரப்புக்கு நகர்ந்து லண்டன் போய்ச் சேர்ந்தார். 2002 பேச்சுவார்த்தைக்காக லண்டனிலிருந்த பாலசிங்கம் மாலைதீவு வழியாக வந்து இரணைமடுவில் இறங்கினார். அங்கே பாலசிங்கத்தை வரவேற்ற பிரபாகரன், புதுக்குடியிருப்புக்கே அவரை அழைத்து வந்தார். அங்கிருந்தே பேச்சுவார்த்தைகள் திட்டமிடப்பட்டன. கிளிநொச்சியில் பேச்சுகள் நடந்தாலும் புதுக்குடியிருப்பிலிருந்தே அவை தீர்மானிக்கப்பட்டன.

இவையெல்லாம் இருந்தாலும் இவற்றைப் புற்றி, பல்வேறு தரப்பினரும் உரையாடக்கூடிய ஒரு மையமாகவே. பாலகுமாரன் இருந்தார். அரசியல், சமூகவியல், கலை, இலக்கியம், பொருளாதாரம் போன்ற துறைகளில் இயங்குவோர் பாலகுமாரனுடன் தொடர்ச்சியாக உரையாடல்களை நடத்தி வந்தனர். இயக்கத்தின் அரங்குகளிலும் பொது மக்களின் அரங்குகளிலும், என பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பாலகுமாரனும் பங்கேற்று வந்திருந்தார்.

## தளபதிகள் வீழ்த்தப்பட்ட மண்

எல்லாமே 2008 வரைதான். வன்னியின் இறுதி யுத்தம் நடந்தபோது புதுக்குடியிருப்பு மயானமாகியது. புதுக்குடியிருப்பு மருத்துவமனை இருந்த இடமே தெரியாத அளவுக்குக் குண்டு வீச்சுகளால் தரைமட்டமாகியது. எல்லா இடங்களில் இருந்தும் வந்திருந்த மக்களை ஆதரித்த அந்த ஆறுதல் மையத்தில், ஒருவரைக்கூடப் பாதுகாக்க முடியாத நிலை உருவானது. புதுக்குடியிருப்பின் ஆதிக்குடிகளே எங்கே போவதென்று தெரியாமல் தடுமாறினார்கள். "பாதுகாப்பாக இருக்கட்டும்" என்று என்னுடைய புத்தகங்களை, புதுக்குடியிருப்பிலேயே கொண்டு போய் வைத்திருந்தேன். ஆனால், அங்கே எதுவுமே பாதுகாப்பில்லை என்றானது. இறுதி யுத்தம் புதுக்குடியிருப் பின் வழியே நகர்ந்தது. மிகப்பெரிய சண்டையும் புதுக்குடியிருப்பிலேயே நடந்தது. புலிகளின் மிக முக்கியமான தளபதிகள், கேணல் விதுஷா, கேணல் ஆதவன், கேணல் தீபன், கேணல் துர்க்கா, கேணல் மணிவண்ணன் எனப் பலர் பலியாகிய ஆனந்தபுரம் சமர் புலிகளுடைய வரலாற்றின் இறுதிச் சமரானது. புதுக்குடியிருப்பைக் கைப்பற்றிய படைகள் மாத்தளனுக்கு நகர்ந்து முள்ளிவாய்க்காலைக் கைப்பற்றின. இறுதியில் எல்லாம் முடிந்து விட்டன. இப்பொழுது மீண்டும் புதுக்குடியிருப்பு மீண்டு வருகிறது. சனங்கள் மீண்டும் தங்கள் நகரைக் கட்டியெழுப்பி வருகிறார்கள். மண்ணாகிய இடங்களை மாடங்களாக மாற்றுவது மனித இயல்பே.

ஆனால், வரலாற்றை வேறுவிதமாகத் தோற்றம் காட்டுவதற்கு மாத்தளனில் ஒரு வெற்றிச் சின்னத்தை அரசாங்கம் நிர்மாணித்திருக்கிறது. ஒரு காலம், போராடுவதற்காகப் பயன்படுத்திய ஆயுதங்களும், புலிகளின் புதிய ஆயுதக் கண்டுபிடிப்புகளும் அருகிலே காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. கடற்புலிகளின் நீச்சற் பயிற்சித்தடாகம், சுற்றுலாப் பயணிகளுக்கான காட்சிப் பொருளாக்கப்பட்டுள்ளது. ஆனால், மனித வரலாற்றில் எதுவும் நிலைப்பதில்லை. பிரபாகரனிருந்ததாக சொல்லப்பட்ட மிகப்பெரிய பதுங்குகுழியை, சில காலம் காட்சிப் படுத்திய படையினர் அதைத் தாங்களாகவே குண்டு வைத்துத் தகர்த்தனர். அப்படி மிஞ்சியவற்றையும் அவர்களே ஒரு நாள் இல்லாமலாக்கி விடக்கூடும். இப்படி வரலாறு இன்னும் விசித்திரமான காட்சிகளை உருவாக்கும்.

(04 ஆம் பக்க தொடர்ச்சி...)



## அகவை...

**52.** உண்ணாவிரதம் இருந்து மரணித்த தியாகி திலீபனின் நினைவு நாளான செப்ரெம்பர் 26 ஆம் நாளில், பிரபாகரன் உணவருந்துவது இல்லை. இதேபோன்று மாவீரர் நாளிலும் உணவைத் தவிர்த்து வந்தார்.

**53.** திலீபனின் மரணத்தின்போது பிரபாகரன் கண்ணீர் விட்டு அழுதிருந்தார். இதுவே அவர் கண்ணீர் விட்டு அழுத வெளிப்படையான சம்பவமாக அமைந்தது.

**54.** எதிரிகளிடம் சிக்கக்கூடாது என்பதற்காகப் போராளிகளுக்கு சயனைட் குப்பி அணியும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

**55.** பிரபாகரன் எப்போதும் தனது சயனைட் குப்பியை கழற்றியதில்லை. மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் எதிரிகளிடம் சிக்கிய போது தனது சயனைட்குப்பியை கழற்றி அவர்களுக்கு அன்ரன்பாலசிங்கம் மூலம் அனுப்பி வைத்திருந்தார்.

**56.** புலிகள் இயக்கத்தில் சிகரெட் பிடிக்கவும், மது அருந்தவும் அனுமதிக்கப்பட்ட ஒரே நபர் அன்ரன் பாலசிங்கம் மட்டுமே. ஆனால், தலைவருடன் இருக்கும் சமயத்தில் அவர் சிகரெட் பிடிப்பதில்லை.

**57.** சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சமயத்திலும், முக்கிய சமர் காலத்திலும் மீசையை எடுத்து விடுவது பிரபாகரனின் வழக்கம். அவரின் மீசை தொடர்பில் சுவாரசியமான விடயங்கள் உள்ளன.

**58.** குடாரப்பு தரையிறக்கத்தில் வோக்கியில் கட்டளையிடும் பிரிகேடியர் பால்ராஜின் படமே பிரபாகரனின் அறையை அலங்கரித்தது.

**59.** தலைவர் பிரபா, எம்.ஜி.ஆருக்கு வழங்கிய கைத்துப்பாக்கியை அவர் எப்போதும் தனது தலையணையின் அடியில் வைத்திருந்தார்.

**60.** தமிழீழ விடுதலைப் புலிகளின் போரிடும் அணிகளில் கரும்புலிகளை அவர் மிகவும் நேசித்தார். போரின் வெற்றியில் கரும்புலிகளின் பங்களிப்பை பெரும் பலமாகக் கருதினார்.

**61.** வன்னி இறுதிப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் எனக் கூறிய இலங்கை இராணுவமும் அரசாங்கமும் பிரபாகரன் போன்ற உடலைக் காட்டியது. எனினும் உலகெங்கும் வாழும் தமிழர்களும் வேறு பலரும் இதனை நம்பவில்லை.

**62.** வன்னி இறுதிப்போர் முடிந்து பல மாதங்களின் பின்னரும் வல்வெட்டித்துறையில் பிரபாகரன் பிறந்த வீடு முழுமையாக இருந்தது. வீட்டை பார்க்க வந்த சிங்கள மக்கள் பலர் அந்த வீட்டிலிருந்து ஒரு பிடி மண் எடுத்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து இராணுவம் வீட்டை இடித்துத் தள்ளியது.



# அலம்பல் ஆச்சி



செல்வி

நாங்கள் என்னதான் பல்லைக்காட்டிக் கொண்டு சிங்களவனிட்டை கைகோர்த்தாலும் இனம் எண்டுவரேக்கை, நீங்கள் நல்லிணக்க வாதியோ இனவாதியோ என்று பார்த்து வெட்டப் போறதில்லை. அவனுக்கு எல்லாரும் "தெமிழ பறையாதான்". எங்கடை பெடிபெட்டையளுக்கு மகேலாக்களையும், சங்ககாராக்களையும் மட்டுமே சிங்களவங்களாக தொலைக் காட்சிப்பெட்டி காட்டியிருக்கிது. அதனாலைதான் இப்பவும் கிரிக்கெட்டுக்குக் கொடிபிடிச்சுக் கொண்டு திரியினம். இன்னும் கொஞ்சப் பேருக்கு கம்பசிலை கூட்டாளிகளா இருக்கிறாங்கள் சிங்களவர். சிங்களவன்ரை நாட்டிலை அதுகள் தவிர்க்கேலாதுதான். அதுக்காக இனக்கலப்பு செய்யிற கூட்டாளித் தனத்தை பொறுத்துக் கொண்டு இருக்க ஏலுமே? இன்னும் கொஞ்சபெடிப் பிள்ளையளுக்கு மூஞ்சைக்காக சிரிக்கிற சிங்கள நல்லிணக்கவாதிகளை மட்டுமே சிங்களவர்களாகத் தெரியும். அதனாலை தான் அவைக்கு இவையும், இவையளுக்கு அவையும் மாறிமாறி வால் பிடிச்சுக்கொண்டு செக்குமாடுகள் போலைசுத்திக் கொண்டிருக்கிதுகள். இன்னும் சிலது இருக்கிதுகள். மண்டைக்குள்ளை ஒரு மண் கூட இல்லாததுகள். அதுகளுக்கு சிங்களவன்ரை ஆட்டம் எல்லாம் விளங்கினாலும் (விளங்கக்கூடிய அளவுக்கு படிச்சிருக்குங்கள் எண்டு நினைக்கிறன்) தாங்களும் கூட சேர்ந்து ஆடுதுகள். கிலிசுகெட்டதுகள். சிங்களவங்களின்ரை உண்மையான முகம் அதில்லை பிள்ளையள். அதுவெறும் புறமுகமாயை மட்டும் தான். கேள்விப் பட்டிருப்பியள் தானே. மட்டக்களப்பிலை பிக்கு ஒருத்தன் ஆடின சதிராட்டம்? சிங்களப் பேரினவாதமெண்டா இதுதாண்டா எண்டு தங்கடை மூஞ்சையளை கிழிச்சுக் காட்டியிருக்கிறான் பிக்கு. அவன்ரை சிங்களம் விளங்கிதோ இல்லையோ.. அவன் நிண்ட நிலையும் கதைச்ச முறையும் சொல்லி வேலையில்லை. எழுக தமிழிலை போட்ட கோசமெல்லாம் எந்த மூலைக்கு? இனம் எண்டது அவன்ரை இரத்தத்திலை ஊறிக்கிடக்கிது. இனவெறி எண்டா என்னெண்டு அவன் தான் எங்கடை நல்லிணக்கப் பாலங்களுக்கு வகுப்பெடுக்கோணும். அப்ப எண்டாலும் திருந்துங்களோ எண்டு பாப்பம். என்னதான் இருந்தாலும்.. பிக்குவுக்கு நன்றி சொல்லத்தான் வேணும். இன்னும் கொஞ்சக்காலம் செண்டுதெண்டா எங்கடையள் "அழிஞ்சது இனவழிப்புமில்லை ஒண்டுமில்லை. வேலிச் சண்டை பிடிக்கேக்கை சும்மா ஒருத்தர் இரண்டு ஆக்களுக்கு சிராய்ப்புக் காயமும், ஒரு இரண்டு மூண்டு ஆக்கள் செத்தும் போட்டினம். அது சும்மா ஊர்ச் சண்டைதான்" எண்டு தீர்ப்புவாற அளவுக்கு எங்களை கொண்டு வந்துவிட்டுடுவாங்களோ எண்டு பயமா இருந்திச்சுது. "அப்பிடியெல்லாம் கனவு காணாதேங்கோ. இது பௌத்த சிங்கள நாடுதான்" எண்டு உரக்கச்சொன்ன பிக்குவுக்கு நன்றிதான் சொல்லோணும். தன்ரை இனத்தை நேசிக்கிற ஒருத்தனாலை மற்ற இனங்களோடை கலக்க ஏலாது. அது பறுவத்திலை பரிநிர்வாணமடைஞ்ச பிக்குவெண்டாலும் சரி. அமாவாசையிலை பரிநிர்வாணமடைஞ்ச பிக்கு எண்டாலும் சரிதான்.

"அதெல்லாம் தனி மனிதரின்ரை கருத்து" எண்டு பிக்குவின்ரை கத்தலுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, இப்ப கொஞ்சப்பேர் வரிசையிலை வருவினை. அதுதனியொராளின்ரை கருத்தில்லை பிள்ளையள். இவன் சிங்கள பேரினவாதத் தின்ரை குறியீடு. இனத்துவேசத்தின்ரை பிரதிநிதியாதான் ஆள் களமாடியிருக்கிது. இதுதான் சிங்களவன்ரை உண்மையான முகம். எங்களைக் கண்டிட்டு "யாலுவ" எண்டு பல்லைக்காட்டிப் போட்டுபோற சிங்களவன் அல்ல அவை. அதெல்லாம் அவங்களின்ரை சாசனத்திலையே இல்லை. தமிழன் மகாவலிக்கு அங்காலை இருக்கிறான் எண்டதுக்காக குறாவிக்கொண்டு, படுக்கிற துட்டகைமுனுவின் எச்சங்கள் தான் அவங்கள். இப்பிடி அவங்கள் தங்கடை உண்மையான மூஞ்சையளை காட்டினாத்தான், எங்கடை ஆக்களும் பகல் கனவிலை இருந்து முழிச்சு பாப்பினம். சிங்களவன் தலைமாட்டுக்கை இருந்தாலும், நீட்டி நிமிந்து கொண்டு படுத் திருக்கிற ஆக்களுக்கு அப்ப எண்டாலும் ரோசம் வரட்டுமன். இந்த மாசம் உறங்க முடியாத மாதம்.

எங்கடை பிள்ளையள் கனக்க கனவுகளோடை எங்களுக்காகப் போராடி, இப்ப துயிலுறதுக்கு இடம் கூட இல்லாமல் அந்தரிச்சுக் கொண்டு திரியிதுகள். அவர்களின்ரை தியாகங்களுக்காக எண்டாலும், எங்கடை மண்ணிலை அவையளுக் காக விளக்கேத்துற அந்த நாளுக்காக உங்களோடை சேர்ந்து நானும் காத்துக் கொண்டிருக்கிறேன். அந்தத் தியாகத்தின்ரை நெருப்பிலை குளிர்காய்ஞ்சு கொண்டு திரியாமை, நாங்களும் தியாகத்துக்கு வெளிக்கிடுவம்.. அவையளின்ரை தாகத்தைத் தீர்க்கும் வரையாவது நாங்களும் இனப் பசியோடு இருப்போமா?

என்ரை வளவுக்குள்ளை எண்டாலும் என்ரை குஞ்சுகளுக்கு விளக்கேத்தோணும் நான். நீங்களும் ஏத்துவியள் தானே? வாறன் பிள்ளையள்.

# மாயாவின் டயரி



*இந்த உலகமே ஒரு பெரும் குற்றத்தின் ஒட்டு மொத்த சொரூபமாகத் தெரிகின்றது. இதில் எந்தக் குற்றத்தின் பேரில் நாம் அச்சம் கொள்வது? வரலாற்றின் இடுக்குகள் தோறும் வலிகளாலும் இச்சைகளாலும் பேராசைகளாலும் நிரம்பி போயிருக்கும் நம் கடந்த காலங்களை யதார்த்தக் கண்கொண்டு பார்க்க வேண்டியது அவசியம் ஆகின்றது. வானம் அனைவருக்கும் ஒன்றாகத்தான் இருக்கின்றது. இருப்பினும் பறத்தலின் எல்லைகளோ வேறுபட்டு நிற்கின்றன. அந்த வேறுபாட்டை உணர்ந்து பறக்கத் துடிக்கும் ஒவ்வொருவரின் இறக்கை களிலும், மலையளவு பாரம் திணிக்கப்படுகின்றது அல்லது அச்சங்களினால் இறக்கைகள் கத்தரிக்கப்படுகின்றன.*

*பெண் எப்போதெல்லாம் அளவுகடந்த துன்பத்தை அனுபவிக்கின்றாள் என்றால் அவளைப் பிறர் விமர்சிக்கின்றபோதே ஆகும். பெண் பிரபலங்கள் தொடக்கம் சாதாரண பெண்கள் வரை விமர்சனங்களால் நொருங்கிப் போகுமளவே, பெண் மனம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்த மனதில் குடும்பம், குழந்தைகள், தன் சார்ந்த சமூகத்தின் மீதான அக்கறையே அதிகம் உள்ளது. எவ்வளவுதான் முன்னேறிய நிலையில் இருந்தாலும், அவதூறுகளை தாங்கிக் கொள்ளும் மன நிலை என்பது பெண்களுக்கு மிகவும் குறைவாகவே உள்ளது. அப்படியே அந்த அவதூறுகளைத் தைரியமாகவே எதிர்கொண்டாலும், அவள் போன்ற இன்னொரு பெண்ணாலே தூற்றுதலுக்கு உட்படுத்தப்படுகின்றாள் என்பதுதான் மிகவும் கவலைக்கிடமான விடயம்.*

*உலகம் பரந்து, விரிந்து, தொடர்பாடல்கள் அனைத்தும் மிகவும் கைக்கருகில் கிடைத்துவிட்ட நிலையிலும், பாதுகாப்பென்பது அச்சுறுத்தலான நிலையிலேயே உள்ளது. என் முகப்புத்தகத்தில் ஒரு தங்கை இருந்தாள். திடீரென அவள் என்னுடைய புகைப்படத்தைத் தவறான வழியில் பயன்படுத்திப் போலி முகப்புத்தகக் கணக்கொன்றை ஆரம்பித்துள்ளன. விடயமறிந்து வீட்டில் தெரிந்து, எல்லோரும் என்னைத் திட்டிக் கொண்டு உள்ளனர். செத்துவிடலாம் போலுள்ளது" என்றாள். எமக்குத் தெரிந்த நண்பர்கள் அனைவரும், முகப்புத்தகத்தில் முறைப்பாடு செய்து, அந்தக் கணக்கை மறுநாளே இல்லாது செய்தோம். ஆனால் அந்தப் பெண்ணின் வீட்டினர் இது தொடர்பில் பொலிசில் முறைப்பாடு செய்ய வேண்டும் என்று புறப்பட்டனர்.*

*இலங்கையில் இணையக் குற்றங்களை (cyber crimes) கண்டறிந்து தண்டிக்கும் சட்டமொன்று உள்ளதா என்பது பலரும் அறியாத ஒரு விடயம். துரதிஷ்டவசமாக cyber space தொடர்பான வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் எதுவும் இலங்கையில் இல்லை. 2007 இன் 24 ஆம் இலக்க கணனிக் குற்றச்சாட்டும் இணையம் தொடர்பான குற்றங்களையே கவனத்திலெடுக்கின்ற அதேவேளை ஆபாசப் புகைப்படங்களை பரப்புதல், தொழில்நுட்பக் கருவிகள் ஊடாக இழைக்கப் படும் தொந்தரவுகளுக்கான குற்றங்களை இச்சட்டமானது கையாளவில்லை.*

*இப்படியான ஒரு சூழ்நிலையில் நாம் இணையத்தில் நடக்கின்ற இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக செய்கின்ற முறைப்பாடுகள் என்பவை பயனற்றவையே என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். சரி அவை பயனற்றவை எனில் இதற்கான உண்மையான தீர்வென்பது யாது? இணையத்தில் நிகழும் பாலியல் குற்றங்களுக்கான தண்டனைச் சட்டக் கோவையை இனி வருகின்ற காலங்களிலாவது சட்டம் படித்தவர்கள் உருவாக்க வேண்டும். அன்றாடம் இணையத்தின் வழி நிகழ்கின்ற நிழல் பாலியல் சேட்டைகளிற்கான அச்சுறுத்தலாக அந்தச்சட்டக் கோவை அமைய வேண்டும்.*

*சில மாதங்களுக்கு முன்பு விஸ்ணுப்பிரியா என்னும் பெண்ணின் மார்பிங் செய்த புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டதன் காரணமாக அதைத் தங்க முடியாது அவர் தன உயிரை மாய்த்துள்ளார். பெண் தன்னுடைய உடல் புகைப்படத்தில் களங்கப்படுத்தக் கூடாது என்பதை தன் கர்வமாகக் கொண்டுள்ளாள். அந்தக் கர்வமானது சிதைக்கப்படும்போது அவள் தன் வாழ்க்கையையே அழித்துக் கொள்ளும் அளவுக்கு துணிகின்றாள்.*

*புண்படும் நிலையில் பெண் இருக்கின்றாள். அந்த ரகசியத்தை ஆண்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். ஒரு பெண்ணை வீழ்த்த முடியாதவிடத்து, நடத்தையைக் கையிலெடுப்பதுவும், அவள் உடலை களங்கப்படுத்த விளைவது ஆகியன அனைத்தின் மூலமும் அவள் புண்பட்டு நொருங்கி விடுவாள் என்கின்ற நிலையில், மிகவும் லாவகமாக பெண் உடலானது பாதுகாப்பின் பேரில் திரையிடப்படுகின்றது. அச்சுறுத்தல்களின் பேரில் பெண் ஒரு அளவுக்கு மேல் இயங்க முடியாதவள் ஆகின்றாள். பெண் தன் உடல் பற்றிய சரியான புரிதலை என்று பெற்றுக் கொள்கின்றாளோ அன்றே உண்மையான பெண் விடுதலை துளிர்க்கும்.*

*புண்படும் நிலையில் இருப்பது எம் குற்றமே. நாம் அச்சமின்றி பறப்பதற்கான வழிகளை நாம்தான் போராடிக் கண்டடைதல் வேண்டும். மாயா ஏஞ்சலோசின் பின்வரும் வரிகளை நினைவு கொள்கின்றேன்.*

***"உங்கள் சொற்களால் என்னைச் சுடலாம்!***  
***உங்கள் கண்களால் என்னை வெட்டலாம்!***  
***உங்கள் வெறுப்பால் என்னைக் கொல்லலாம்!***  
***ஆனாலும் காற்றைப் போல நான் எழுந்து வருவேன்!***  
***வரலாற்றின், அவமானக் குடிசைகளிலிருந்து நான் எழுகின்றேன்.***  
***நான் எழுகின்றேன்!!!"***

(10 ஆம் பக்க தொடர்ச்சி...)

# மாவீரர்...

"வடிவான பேர். நீங்கள் வடிவெண்டு வச்சு விட்டவையோ?"

"ம்ம்ம் ...பரவாயில்ல உனக்கு இப்ப நல்லா தமிழ் வருது போல?"

"ஓம்! இந்த முறை எனக்குத் தான் தமிழுக்குக் கூட. தமிழ் எனக்குப் பிடிக்கும்"

"அப்ப தமிழ் வைத்தியம் படிக்க போறியோ?"

"போங்கோ" என்னை கிண்டல் செய்வது புரிந்து வெட்கினேன்.

நான்கு நாள் விடுமுறை கழிந்து பாசறைக்கு கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

"இனி எப்ப வருவீங்கள்?"

"உயிரோட இருந்தா வருவன்"

"ஏன் அப்பிடிச் சொல்லுறீங்கள்?"

"பிள்ள இந்த பயித்தம் பலகாரத்தயும் பருத்துர் வடையையும் எடுத்துவை" அம்மம்மா வர பேச்சு மாறியது. சரிதா அக்கா கிளம்பி விட்டாள்.

சரிதா அக்கா போராளியாகி மூன்று வருடம் ஆகிவிட்டது. நான் போராளி ஆகவில்லையே தவிர இப்போது போராட்டம் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அறிந்து வைத்திருக்கிறேன். சரிதா அக்கா வீட்டுக்கு வரும் போதெல்லாம் குப்பியும் தகடும் என் கழுத்துக்கு மாறும். ஆனாலும் சற்று நேரத்தில் பிடுங்கி விடுவாள். அவள் துப்பாக்கியை தூக்கி நடப்பது தான் மிகச் சிரமமான வேலை.

"உதை எப்பிடி தூக்கிக் கொண்டு சண்டையில ஓடுறனீங்கள்?"

"அதுக்கு தானே பயிற்சி எடுக்கிறம்"

"நானும் பயிற்சி எடுத்து உத விட பெரிய துவக்கு தூக்குவன் பாருங்கோ"

சட்டென்று திரும்பியவள் கண்களில் கோபம்.

"இனி உப்பிடி கதைக்காத. இபக்கத்துக்கு நீ வரத்தேவையில்ல. ஒழுங்கா படிக்கிற வழியப் பார் விளங்குதோ"

சரியென்று தலையாட்டினேன் எப்போதும் அவளை எதிர்த்துப் பேச வருவதில்லை எனக்கு.

அம்முறை விடுமுறை முடிந்து செல்லும் போது அழகிய பேனா ஒன்றுடன் "தப்பியவன்" எனும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட புத்தகம் ஒன்றையும் தந்துவிட்டுச் சென்றாள், "அன்புடன் சரிதா அக்கா" என்று முன்பக்கத்தில் எழுதியிருந்தாள். அதை மட்டும் படித்து விட்டு மூடி வைத்து விட்டேன்.

சரியாக ஒருமாதம் கடந்து ஒரு நாள் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன் அருகில் ஒரு மோட்டார் சைக்கிள் உரசிய படி நின்றது.

"தங்கச்சி இங்க கணேஷ் எண்டுறது?" இரண்டு பெண் போராளிகளில் ஒருத்தி கேட்டாள்.

"ஓம் எங்கட வீட்டுக்கு பக்கத்தில தான் வாங்கோ காட்டுறன்"

என்னை பின் தொடர்ந்தார்கள்.

"அந்தா அந்த வீடு தான்" அவர்கள் போய் சில நொடிகளில் "ஐயோ என்ர பிள்ள" கணேஷ் அம்மம்மா ஓங்கிய பூத சத்தம். ஓரளவு புரிந்து விட்டாலும் இருக்காது என்ற படி ஓடினேன். இப்போது இன்னும் சில போராளிகள் முற்றத்தில் சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். இரண்டு மணி நேரத்தில் சரிதா அக்காவும் வந்தாள். புலிக்கொடி போர்த்தியிருந்தார்கள்.

அம்மம்மா வித்துடல் வைத்திருந்த பெட்டியின் மேல் தலையை மடார் மடார் என மோதிக் கொண்டிருந்தாள். யாராலும் தேற்ற முடியாது என அறிந்திருந்ததால் அம்மா அவளை இறுகப் பற்றிய படி மோத விடாமல் பார்த்துக் கொண்டாள். மாலையில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பூரண ராணுவ மரியாதைகளோடு துயிலுமில்லம் நோக்கி புறப்பட்டாள். மேஜர் எழில் என அழைக்கப்படும் கணேஷநாதன் சரிதா என்கிற என் சரிதா அக்கா.

★ ★ ★

"அம்மம்மோய் இந்தாங்கோ பூ" "அச்சாப் பிள்ள இஞ்ச கொண்டாண"

"அம்மாவ கேட்டனீங்களே?"

"ஓமடி விடுறாவாம்"

"மழையெண்டு விட்டிட்டு போறேல்ல போன வருசம் மாதிரி..."

"சரி... சரி" மாலை கட்டும் அவசரத்தில் பதில் வந்தது.

"வீரர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள் என்ற வாசகத்தைப் பார்த்தபடியே மாவீரர் துயிலுமில்லத்துள் நுழைந்தேன். ஏறக்குறைய இரண்டாயிரம் கல்லறைகள் இருக்கக் கூடும் உறவுகள் கல்லறைகளுக்கு அருகே இருந்து விசும்பிக் கொண்டிருந்தார்கள். சரிதா அக்கா 'உ' பகுதியில் நூறாவது இலக்கமாய் துயின்று கொண்டிருந்தாள். அம்மம்மா அருகே சென்று கொண்டு வந்திருந்த மாலையை போட்டாள். பழம் வைத்து ஊதுபத்தி பற்ற வைத்தாள். இப்போது அவள் அழுவதில்லை. மௌனமாக சரிதா அக்காவை அணைத்தபடி பெயர் பலகையின் மேல் சாய்ந்திருந்தாள். தமிழீழ வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது தேசிய தலைவரின் மாவீரர் நாள் உரை. சரியாக நாற்பத்தைந்து நிமிடத்தில் உரை நிறைவடைய "மொழியாகி எங்கள்...." பாடல் ஒலிக்க மாவீரர்களுக்கான சுடர் ஏற்றப்படுகிறது.

'உ' பகுதியின் இறுதியிலும் இன்னும் சில பகுதிகளிலும் உறவினர் வராத சில மாவீரர்களின் கல்லறைகளுக்கு போராளிகளும் மாணவர்களும் விளக்கேற்றிக் கொண்டிருந்தார்கள். இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் இருந்து அவர்கள் போராட்டத்தில் இணைந்தவர்களாக இருக்கக் கூடும் .பாதை மூடி இருப்பதால் உறவுகள் வர முடியாத நிலை.

"அம்மம்மா தீப் பெட்டியத் தாங்கோ. அங்க ஒரு கல்லறைக்கு விளக்கேத்த வேணும். ஒருதரும் வரேல்லப் போல" தீப்பெட்டியை வாங்கிய படி கல்லறை நோக்கி விரைந்தேன். கடற்கரும்புலி கப்டன் ஈழமாறன், இராசேந்திரம் ஜெகன் என்றிருந்தது. விளக்கேற்றி விட்டு வந்து சரிதா அக்காவின் அருகில் அமர்ந்திருந்தேன். இறுதியாக அவள் தந்த தப்பியவன் புத்தகத்தை வாசித்து முடிக்கவில்லை நான் இன்னும்.

வீடு வந்தாயிற்று புத்தக அலுமாரியில் தப்பியவனைக் காணவில்லை. எங்க வச்சனான்? ஆஹ் பள்ளிக்கூடம் கொண்டு போனனான் படிக்கத் தொடங்க முதல் இறுதிப் பக்கத்தை புரட்டினேன். இப்படி இருந்தது.

"என்றும் அன்புடன்
கடற் கரும்புலி ஈழமாறன்
இராசேந்திரம் ஜெகன்" ★ ★ ★




# 'மைனர் மயிலன்'

உமா சந்தோஷ்

"விடு என்னை. தங்கமணி வீடு வரையும் போயிட்டு வரவேணும். ஏறடா நீ" மைனர் சயிக்கிளை எடுத்து லங்கையனை கரியரிலை ஏத்திக்கொண்டு பறந்தான். தங்கமணியை அவள் வீட்டு ஒழுங்கேக்கையே சந்திச்சு அரியகுட்டியரைத் துண்டு வெட்டிக்கொண்டு வாறதுக்குரிய ஒழுங்கைச் செய்யச் சொல்லி காசு ஐநூறைக் குடுத்து "எனக்கு வேறை பிரச்சனை இருக்கு, பிறகு சொல்லுறன்" எண்டு பறந்தான் மைனர்.

படலையைத் திறந்து வீட்டுக்குள்ள வரேக்கை மெனிக்கா வாசலிலை நிண்டாள். அவளின்ரை முகம் மழை மேகக் கறுப்பாக் கிடந்ததை கவனிச்சான் மைனர். "மைனர் ஒண்டுக்கும் பயப்பிடப் பிடாதை. உஷாரா இருக்கவேணும்" உள்ளுக்கை போன சாராயத்தின்ரை துணையோட தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டு வீட்டுக்கை போனான். மெனிக்கா பின்னாலை போனாள். 'மைனர் என்கூடக் கொஞ்சங் வாறான்" எண்டு மைனரைக் கூட்டிக் கொண்டு அறைக்குள்ளை போய் கதவைப் பூட்டினான் அவள். "சொறி மைனர்" எண்டு சொல்லிக் கொண்டு மைனற்றை காலிலை விழுந்தாள் மெனிக்கா. "நாங் காலேல வந்த அந்த பொலிஸைத்தாங் மரி பண்ணப் போறாங். நீங்க தான் ஹெல்ப் பண்ணணும்" பெரிய பிரளயம் ஒண்டை எதிர்பார்த்து நிண்ட மைனர், மெனிக்கான்ரை கதையைக் கேட்டுச் சொக்கிப் போனான். காலிலை விழுந்த மெனிக் காவைத் தொட்டுத் தூக்கி நிறுத்தினான் மைனர். "கவலைப்படாதையும் மெனிக்கா, மைனர் நான் இருக்கிறன்" படலேக்கை ஜீப் வந்து நிண்ட சத்தம் கேட்டுது. பொலிஸ்காரன் வீட்டைப் பாத்துக் கொண்டு வந்தான். "மீற் மிஸ்டர் மைனர்" பொலிஸ்காரன் மைனற்றை கையைப் பிடித்துக் குலுக்கினான். "போயிட்டு வாறான் மைனர்" மெனிக்காவை ஏத்திக் கொண்டு கே.கே. எஸ் பக்கமா ஜீப் பறந்திது.

"மச்சான் வெற்றியடா" எண்டு கூவிக் கொண்டு வீட்டுக்கை வந்தான் மைனர். "மச்சான், உள்ளுக்கை இருந்த ஒரு லேடி வந்து உன்னைத் தேடினவா" லங்கையன் சொல்ல "ஓமடா! மறந்துபோனன்" எண்டு சொல்லிக் கொண்டு ஸ்ரெல்லா இருந்த அறைப்பக்கம் போனான் மைனர். தலையணைக்கை முகத்தை வைச்சு அழுது கொண்டிருந்தாள் ஸ்ரெல்லா. முகம் அதைச்சுப் போய்க்கிடந்ததைக் கண்ட மைனர் அவளைத் தொடப் போனான். "கிட்ட வராதையுங்கோ" பேய் மாதிரிக் கத்தினாள் ஸ்ரெல்லா. பாக்கையும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள். "எனக்கொரு கார் பிடிச்சு விடுங்கோ. நான் போப்போறன். அப்பவும் தங்கமணி சொன்னவள். நான் நம்பேல்லை. அங்கிளிட்டைக் கேக்கேக்கை அவர் தான் சொன்னவர் மெனிக்காவை விட்டுட்டியள் எண்டு. நான் அங்கிளை நம்பிட்டன்" சந்திக்குப் போன லங்கையன் காரோடை வந்தான். "நீர் இப்ப கோபமா இருக்கிறீர். பின்னேரம் வந்து சந்திக்கிறன்" காருக்கு காசைக் குடுத்துவிட்டு ஸ்ரெல்லாவைப் பாத்தான். அவள் இவனைப் பாக்கேல்லை. கண் கலங்கினபடியே இருந்தாள் அவள். கார் யாழ்ப்பாண நகரை நோக்கிப் பறந்தது.

"அப்புவைக் கூட்டிக் கொண்டு தங்கமணி வருவாள். நீ இஞ்சையே இரு. நான் வெளியிலை ஒருக்காப் போட்டுவாறன்" சைக்கிளைத் தூக்கிக் கொண்டு லோயர் வீட்டை போனான் மைனர். "வாங்கோ மைனர். நடந்ததை எல்லாம் கேள்விப் பட்டனியள் தானே? உதவிக்கு உங்களைத்தான் கூப்பிடுவம் எண்டு முதலிலை நினைச்சன். பிறகுதான் உங்கடை சம்பந்தம் பற்றியும் கேள்விப் பட்டன். இப்ப எங்கடை மாமான்ரை மகனைத்தான் கூப்பிட்டிருக்கிறன். அவர்தான் என்னோடை தங்கப்போறார். அவரும் தனிக்கட்டை எண்டபடியால் எனக்கும் சுகம் தானே? இஞ்சை கொஞ்சக் காலம் நிண்டபடியால் என்ரை பிரச்சனையெல்லாம் மைனருக்கு விளங்கும் தானே? எங்களுக்குச் சமைக்க ஓராள் தேவை. அதுதான் கூப்பிட்டனான்" லோயற்றை மனுசி சொல்லி முடிக்கவும் "பாக்கிறன்" எண்டு சொல்லிப்போட்டு மடங்கி வந்தான் மைனர். லோயற்றை மனுசி பழைய மாதிரி ஏதாவது இசக்கப் பிசக்கா கதைக்கத்தான் கூப்பிடுகிறா எண்டு நினைச்ச மைனருக்குத் தலையிலை இடி விழுந்த மாதிரியிருந்திது.

எல்லாம் குழம்பி சிதம்பர சக்கரத்தைப் பேய் பாத்த மாதிரிக் கிடந்திது. வேகமா வீட்டை வந்தான். "ஏறடா சைக்கிளிலை" எண்டு லங்கையனை ஏத்தினான். தவறணைக்கு போய் நிண்டிது சைக்கிள். ஒண்டு, இரண்டு, மூண்டு... எண்டு எத்தினை உள்ளுக்கை போச்சுதெண்டு இரண்டுபேருக்கும் தெரியாது. சைக்கிளை நிமித்தி இரண்டுபேரையும் தவறணை ஆக்கள் ஏத்திவிட்டதும் தெரியாமல் வீட்டுக்கு ஓட்ட மெற்றிக்காச் சைக்கிள் வந்திது. வாற வழியெல்லாம் "மெனிக்காவும் ஏமாத்திப்போட்டாள்... ஸ்ரெல்லாவும் ஏமாத்திப் போட்டாள்... சப்போட்டா இருந்த லோயர் பெண்சாதியும் கை விட்டுட்டா..."

எண்டு மைனர் புசத்திக்கொண்டு வந்ததாச் சனம் சொல்லிச்சுது. அரிய குட்டியர் வீட்டுக்கு வந்த செய்தியும் தெரியாமல் முன் மண் கும்பிக்கை சத்தியெடுத்துக் கொண்டு கிடந்தவைக்கு, தங்கமணி வாளித் தண்ணியைக் கொண்டு வந்து ஊத்தினாப்போலைதான் கண் வெளிச்சிது. பாத்தால் நேரம் விடிய அஞ்சு மணி. பிள்ளையார் கோயில் மணி கேட்டுது. மைனர் துள்ளி எழும்பினான். கிணத்தடியிலை குளிக்கிற சத்தம் கேட்டுது. இரண்டு பேரையும் திடீரெண்டு காணேல்லை. செல்லச் சந்நிதிப் பக்கமா சைக்கிள்ளை மைனர் போனவன் எண்டு வல்லைச் வெளியிலை கண்டவை சொல்லிச்சினம்.

(சேட்டைகள் தொடரும்...)




















## சுவரில் கொய்தவை


**Sarvananthan Arumugam**
கசங்கியிருக்கிற உடுப்ப தெளிவாக்கினா #அயன்
தெளிவா இருக்கிற மனச கசக்கினா #நயன்
நாமளும் ஏதாச்சும் சொல்லுவம்

**Sabee Naz**
பஸ்ல கடைசி சீட்ல சைனா போன்ல பாடல்களை அலற அலற வைத்தபடி பயணம் செய்த மனிதர்களை கண்ட கடைசி தலைமுறை நாம்தான் !

**Sun Abi**
அடிக்கிற குளுருக்கு ராஜா சார் கூட சூடா பிளேன்டீயும் முட்டை போண்டாவும் சாப்பிடுற சுகம் இருக்கே #அட்டாட்டடடா ......

**Vivika Suresh**
வாழ்க்கை நிறைய கத்துக்கொடுக்கும் ·
#என்ன ஒவ்வொருமுறையும் செம்மயா அடிச்சு துவைச்சு காயப்போட்டு தான் கத்துக்கொடுக்குது





## இந்தவார மீம்ஸ் (Meme)





# பூதத்தீவுப் புதிர்கள் 24

செங்கை ஆழியான்



வறண்ட பாலைநிலத்தில் அமைந்திருந்த அந்தப் பாலைநிலப் பசுஞ்சோலை மிக அற்புதமாகவும் அழகாகவும் விளங்கியது. பேரீந்து மரங்கள் அங்குள்ள நீர்ச் சுனையைச் சுற்றி வளர்ந்திருந்தன. இயற்கையான நீர்ச் சுனைக்கு அருகில் நீச்சல் தடாகம் ஒன்று காணப்பட்டது. அதில் நீர் பளிங்கு போல நிரம்பியிருந்தது. 'டைமன்' வடிவில் அத்தடாகம் அமைக்கப்பட்டிருந்தது. 'டைமன்' வடிவத் தடாகத்தின் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு பேரீந்து மரம் பழக்குலைகளுடன் செழித்து வளர்ந்திருந்தது.

"தடாகத்தின் ஒவ்வொரு மூலையிலும், வளர்ந்திருந்திருக்கின்ற பேரீந்து மரங்களின் பழங்கள் வித்தியாசமான ருசியுடையவை. ஒரு மரத்துப் பழம் தேன் போல இனிக்கும். மற்றையது கரும்புபோன்றது. மற்றையது அமிர்தம் போலச் சுவைக்கும். நான்காவது மரம் பால் போன்ற சுவை" என்றது புதிர்ப்பூதம்.

அன்றிரவு புதிர்ப்பூதம் எல்லாருக்கும் சுவையான விருந்திட்டது.

சாப்பிடும்போது கோபுரந்தாங்கி கேட்டது.

"என்னடா அண்ணா, கடும் யோசனையில் இருந்தாய்?"

"என் நீச்சல் குளத்தை இரு மடங்கு பெரிதாக்க வேண்டும். அதன் நீளம் 60 மீற்றர். என் குடும்பத்துடன் குளிப்பதற்கு இத் தடாகம் போதவில்லை. எப்படி இருமடங்காக்குவது என்று யோசனை செய்து பார்க்கிறேன். மார்க்கந்தான் புரியவில்லை" என்றது புதிர்ப்பூதம்.

'ஹோ' வெனச்சிரித்தது கோபுரந்தாங்கி.

"இதற்கு ஏன் கடும் யோசனை? இருமடங்காகப் பெருப்பித்து விடுவதுதானே?"

"அத்தடாகத்தின் நான்கு மூலைகளிலும் இருக்கின்ற நான்கு பேரீந்து மரங்களையும் தறிக்காமல் எப்படிப் பெரிதாக்குவது? அதுவும் இருமடங்காக்குவது? நீளமும் அகலமும் அதிகரிக்கவும் கூடாது. எனது எண் சோதிடர் சொல்லியிருக்கிறார், நீள அகலம் அதிகரிக்கக்கூடாதென்று" என்ற புதிர்ப்பூதத்தைத் தம்பிப்பூதம் பரிதாபமாகப் பார்த்தது.

"அப்ப மிகுந்த கஸ்டம்தானடா அண்ணா, எதுக்கும் இந்தப் பிள்ளைகள் புத்திசாலிகளாகத் தெரிகிறார்கள். அவர்களிடம் விசயத்தை விடுவோம்" என்ற கோபுரந்தாங்கி வசந்தனைத் திரும்பிப் பார்த்தது.

"தடாகத்தின் மூலையிலுள்ள பேரீந்து மரங்கள் தறிக்கப்படக்கூடாது. அத்தடாகத்தின் நீள அகலம் அதிகரிக்கக்கூடாது. தடாகம் இப்பொழுதுள்ள பரப்பிலும் இருமடங்காக வேண்டும்? அவ்வளவு தானே..?" என்று வசந்தன் வினாவினான்.

'ஆமாம்' என்றது புதிர்ப்பூதம்

"சரி இரவிரவாக யோசித்து அதற்கு விடை தருகிறோம்" என்றான் வசந்தன்.

"சரியாக விடை தராவிடில் உங்களில் ஒருவரை இங்கு தடாக்கரையில் புதிர்க்கேள்வியொன்றுடன் இருத்திவிடுவேன்.. ஜாக்கிரதை" என்று உறுமியது புதிர்ப்பூதம்.

"அதெல்லாம் உங்கள் வேலைதானா?" என்று சீலன் கேட்டான்.

"வேடனை மட்டுந்தான் பாதையில் அப்படி நான் இருத்தினேன். மற்றதெல்லாம் யுக்திப்பூதத்தின் வேலை"

"யார் யுக்திப் பூதம்..?"

"என் அண்ணன்.." என்றபடி புதிர்ப்பூதம் சிரித்தது.

"உமக்குரிய சிக்கலை நாங்கள் தீர்த்தால் நீர் எங்களுடன் யுக்திப் பூதத்தைக் காண்பதற்கு வருவீரா? எங்களுக்கு உதவுவீரா?" என வசந்தன் திடமாகக் கேட்டான். புதிர்ப்பூதம் சற்றுச் சிந்தனை வயப்பட்டது.

"ஆமென்று சொல்லடா அண்ணா"

"சரி.. ஆனால் எனக்கு வரும் வழியில் பல சந்தேகங்கள் வரும். திடீர், திடீர் எனக் கேள்விகள் கேட்பேன். நீங்கள் யாராவது சரியாகப் பதில் சொல்லாவிட்டால் அவர்களை அவ்விடத்தில் இருத்திவிடுவேன், சிலையாக. சம்மதம் என்றால் சொல்லுங்கள்"

"சம்மதம்.." என்றான் வசந்தன்.

அவர்கள் அனைவரும் புதிர்ப்பூதத்தின் சிக்கலைத் தீர்ப்பதற்கான மார்க்கத்தை யோசித்தபடி நித்திரைக்குச் சென்றனர்.

வெட்டவெளியில் பேரீந்து மரங்களின் கீழ் நித்திரை கொள்வது, புதிய அனுபவமாக இருந்தது. வானத்தில் நிலவு பவனிவர, நட்சத்திரங்கள் கண்சிமிட்ட அவற்றினைப் பார்த்து வியந்தபடி அவர்கள் படுத்திருந்தனர். வானம் கூரையாக, அவர்களை அரைக்கோளமாக மூடியிருந்தது.

வசந்தனுக்கு அருகில் சீலன் படுத்திருந்தான்.

"என்ன புதிர்ப் பூதத்தின் சிக்கலைத் தீர்க்க வழியிருக்கிறதா?" என வசந்தன் சீலனிடம கேட்டான்.

"நான் அதை யோசிக்கவில்லை.." என்றான் சீலன்.

"பின்னர் எதை யோசித்தாய்?"

"குதிரைகளில் வந்த இளவரசர்கள் ஏன் வேகமாக ஓடினார்கள் அதை யோசித்துப் பார்த்தேன்"

"உனக்கு இன்னமும் விளங்கவில்லையா?" என்று வசந்தன் சிரித்தான்.

"இல்லை!"

"எவன் மெதுவாக அதாவது இரண்டாவதாக தலைநகரை அடைகின்றானோ அவனுக்கே முடி கிடைக்கும். எவனுடைய குதிரை இரண்டாவதாக இலக்கினை அடைகின்றதோ? அவனுக்கே சிம்மாசனம். எனவேதான் அவர்கள் நத்தை வேகத்தில் குதிரைகளை நடத்திவந்தார்கள். நான் அவர்களுக்கு அவர்களின் குதிரைகளை மாற்றிக்கொள்ளச் சொன்னேன்"

(புதிர்கள் தொடரும்)

## யார் காரணம்?

இரவு நேரம். மலையோரத்தில் அழகான குடிசை வீடு. அந்த வீட்டில் எண்ணெய் விளக்கு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கால் அந்த இடமே நல்ல வெளிச்சமாக இருந்தது.

அந்த விளக்கை சுற்றி விட்டில் பூச்சிகளும், சிறு சிறு வண்டுகளும் பறந்து கொண்டிருந்தன. விளக்கு பிரகாசாக எரிந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த பூனை, "விளக்கே! நீ சுடர் விட்டு எரிவதால் தான் இந்த இடமே வெளிச்சமாக இருக்கிறது. இதற்கு யார் காரணம்?" என்று கேட்க, விளக்குக்குப் பக்கத்தில் இருந்த தீப்பெட்டி, "நான் தான் காரணம். நான் தான் இந்த விளக்கைப் பற்ற வைத்தேன்" என்றது.

"இல்லை! இல்லை! விளக்கு எரிய நான் தான் காரணம், ஏனென்றால் நான் தான் விளக்கு எரிய எண்ணெய்யை இழுத்து மேலே கொடுக்கிறேன்" என்றது விளக்கு திரி.

இதை கவனித்த எண்ணெய் சொன்னது, "விளக்கு எரிய முக்கிய பொருளே எண்ணெய் தான். எனவே விளக்கு எரிய நான் தான் காரணம் என்றது"

"இவர்கள் எல்லோரையும் தாங்கி நிற்பது நான் தான். எனவே விளக்கு எரிய நான் தான். காரணம்" என்றது குடுவை.

எல்லோரும் விளக்கு எரிய "நான் தான் காரணம். நான் தான் காரணம்" என்று சொல்ல, பூனைக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இதையெல்லாம் மரத்தின் மீதிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஆந்தை சொன்னது,

"பூனையே நீ நாளைக்கு வா. தீப்பெட்டி, விளக்கு திரி, எண்ணெய், குடுவை இவைகளில் விளக்கு எரிய யார் காரணம்" என்று சொல்கிறேன் என்றது.

மறுநாள் காலை விளக்கு அணைக்கப் பட்டது. அந்த வீட்டுக்காரர் விளக்கைத் தனித் தனியாக கழற்றி துடைத்துக் காய வைத்தார்.

ஆந்தையும் பூனையும் வந்தன. தனி தனியாக இருந்த தீப்பெட்டி, விளக்கு திரி, எண்ணெய், குடுவை இவற்றை பார்த்து ஆந்தை, "உங்களில் யாரால் தனியாக விளக்கை எரிய வைக்க முடியுமோ. அவர்கள் முன்னால் வரலாம்" என்று சொல்ல அவை நான்கும் திரு திருவென முழித்தன.

"நீங்கள் நான்கு பேரும் ஒற்றுமையாக இருந்தால் தான் விளக்கு எரியும். உங்களில் ஒருவர் இல்லையென்றால் கூட விளக்கு எரியாது" என்றது ஆந்தை.



## குட்டீஸ் பரிசுப் போட்டி - 20

* தமிழீழ மாவீரர் தினம் எத்தனையாம் ஆண்டில் இருந்து நினைவுகூரப்படுகின்றது?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி, 107, இராசவீதி, கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

குட்டீஸ் பரிசுப்போட்டி - 20

**முடிவுத்திகதி : 09.12.2016**

குட்டீஸ் பரிசுப் போட்டி - 18 முடிவுகள்

**விடை: டொனால்ட் ட்ரம்ப்**

1. ஸ்ரீஸ்கந்தராஜா லக்ஷன், தரம் - 09 யாழ்.மத்திய கல்லூரி

2. பானுராஜா யதுஷா இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.







# குப்பி விளக்கும் ஜாம் விளக்கும்

குப்பி விளக்குகள், மின்சாரமில்லாக் காலத்தின் நினைவுகள் பலதைப் புதைத்து வைத்திருக்கும் மரபுச் சின்னங்களாக இருக்கின்றன. மண்ணெணணெய், தேங்காய் எண்ணையில் சிக்கனமாக பயன்படுத்தத் தக்க குப்பி விளக்குகள், போர்க்காலத்தில் நம்முடைய சந்ததி இரவை விலக்கவும், படிக்கவும் பயன்படுத்திய கதைகள் ஏராளம் இருக்கின்றன. குப்பி விளக்கினைப் போலவே, ஜாம் போத்தல் சிக்கன விளக்கு வடக்கு, கிழக்குதமிழர்களிடையே மிகவும் பிரசித்தமானது. மிகக்குறைந்த எண்ணெயில் மெல்லிய வெளிச்சத்தை தரக்கூடிய ஜாம் விளக்கு, வீட்டிலே செய்யப்படும், ஒரு கைவினைப் பொருளாக இருந்தது.

ஜாம் போத்தல், சைக்கிள் கம்பி, சைக்கிள் வால் டியூப், திரி, எண்ணெய் என்பன மட்டும் கொண்டு இவ்விளக்கை வீட்டிலேயே செய்ய முடியும். காற்றுக்கு லேசில் அணையாது, கொஞ்ச எண்ணெயில் நீண்ட நாள் எரியும். ஜாம் சிக்கன விளக்குகளிடம், எமது போர்க்கால சிக்கன வாழ்வு பற்றியதும், பட்டதுன்பம் பற்றியதுமான ஏராளம் கதைகள் உள்ளன.


## பனங்காய்ப் பணியாரம்



எம்முடைய மரபார்ந்த உணவுப் பழக்கங்களில் இடம் பிடிக்கும் ஒரு முக்கிய உணவாகப் பனங்காய்ப் பணியாரம் காணப்படுகின்றது.

பிழிந்தெடுத்த பனம்பழக் களியுடன், கோதுமை மாச் சேர்த்து கொதிக்கும் எண்ணெயில், பாக்களவு உருண்டையாக விழுதாக விட்டுப் பொரித்தெடுப்பது. மிக வாசமாகவும் சுவையாகவும் இருக்கும். சுமார் ஒரு வாரகாலம் எந்த விசேட பாதுகாப்புமின்றி சுவைத்துச் சாப்பிடக் கூடியது.

பனங்காய் முற்றிப் பழுத்து விழும் காலங்களில், பனங்காய் பணியாரம் எமது மக்களிடையே சுவையும், ஆரோக்கியமும் மிகுந்த சிற்றுண்டியாகப் பரிமாறப்பட்டு வருகின்றது. இன்று இளம் தலைமுறையினர் அதனைச் செய்யும் முறையை கூட அறியாமல், வெளிநாட்டு உணவுப் பழக்கங்களுக்கு அடிமையாகி நோயுற்ற சமுதாயமாக மாறிக் கொண்டிருக்கின்றனர்.



## சத்தகம்



தமிழர் கருவி மரபுகளுள் 'சத்தகம்' முக்கிய இடத்தை பெறும் கருவியாகும். கைக்கு அடக்கமான வெளிநாட்டுக் கத்திகளில் வருகைக்கு முதல், தமிழரின் சமையலறைகளிலும், சிறுவேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட சிறிய ரக கத்திகளை 'சத்தகம்' என்று அழைத்தனர். நல்ல உருக்கு இரும்பில் பாரமில்லாது, கைக்கு அடக்கமாகவும், கூர்மையாகவும் வளைந்த அமைப்பில், பாதுகாப்பான கையாள்கைக்கு உகந்ததாகச் சத்த;கங்கள் தமிழர் பட்டறைகளில் உருவாகின. வெளிநாட்டுக் கத்திகளைப் போல, எளிதில் உடையவோ, வளையவோ மாட்டாத நீண்ட பாவனையைக் கொண்ட சத்தகங்கள் இன்றும் பாரம்பரிய கருவிகள் விற்கும் கடைகளில் கிடைக்கின்றன. அழகாக மூலாம் பூசப்பட்டு இருக்கின்றன என்பதால், வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு மயங்கி எம்முடைய 'சத்தகம்' போன்ற தரமான கருவிகளை பயன்படுத்துவதனை மிகவும் குறைத்துவிட்டோம்.

## பனையோலை விசிறி



சாதாரணமாகக் காற்றை விசுக்கப் பயன்படுத்தக் கூடிய பொருட்களும், விசிறிகளே. பனையோலை விசிறிகள் இலங்கையில் பிரபலமாக இருந்தன. இப்பொழுது அவை அருகி வருகின்றன.


மின்சாரமுள்ள இடங்களில், பலவிதமான மின்விசிறிகள் பயன்படுகின்றன. ஆனால் சூழலுக்குப் பாதிப்பற்று, அழகுணர்ச்சியுடன் செய்யப்படும் பனையோலை விசிறிகள் எமது பண்பாட்டுச் சொத்தாகவும் கடந்த கால நினைவாகவும் உள்ளது.

பனை யோலையைப் பதப்படுத்தி வெட்டி, கட்டி அழகாக வடிவமைத்து பின்னல் வேலைப்பாடுகள் செய்து; சாயமிட்டுச் செய்யப்படும் பனையோலை விசிறிகள், இயற்கைக்கு கேடில்லாத அழகுடன் பயன்படும் கருவியாகும்.

இன்று ஏனைய பனை உற்பத்திப் பொருட்களைப்போல, இதன் பயன்பாட்டையும் குறைத்துவிட்டு, நோய் தரும் 'ஏசி' கலாசாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்.

நேர்காணல்
கணபதி சர்வானந்தா

# மரபுகளின் மடியில் உறங்கும் முதியவர்



பரம்பரை பரம்பரையாகப் பாவித்த பொருட்களைக் கழித்து எறிய மனமில்லாது பாதுகாத்து வைத்திருக்கின்ற ஒருவர், தெரிந்தும், தெரியாமலோ அல்லது அறிந்தும், அறியாமலோ ஆவணப்படுத்துதல் என்ற அரும்பணியைச் செய்துகொண்டிருக்கிறார். காரைநகர் களபூமியைச் சேர்ந்த பரம்பரை விவசாயி யான கந்தப்பு நடராஜா என்ற முதியவர் தான், தன் சொந்த முயற்சியாலும், விருப்பாலும் கடந்த 85 வருடங்களாக தனது தொழில் சார்ந்த பொருட்களையும், தங்களது குடும்பத்தவர்களும், குடும்ப உறவுகளும் உபயோகித்த பொருட்களையும் பத்திரமாகச் சேகரித்துப் பாதுகாத்து வருகின்றார். அவரைப் புதுவிதிக்காக நேர்காணச் சென்றோம். ஒவ்வொரு பொருளாகக் கொண்டு சென்று காண்பித்த நடராஜா, அவற்றைப் பற்றிய கதைகளை சொல்லும் போது ஒரு குழந்தை போல மாறினார். அவர் பகிர்ந்த விடயங்கள் இனி....

“பரம்பரை பரம்பரையா நாங்கள் கமம் தான் செய்யிறம். அப்புவுக்குப் பின்னாலை நான். அப்பு கந்தப்பு தான் இந்த வீட்டைக் கட்டினவர். அங்காலை கிடக்கிற வீடு கட்டி 100 வருசம் இருக்கும். இஞ்சாலை பிறகு அதோடை தொடுத்தது 50 வருசம் இருக்கும். தாய் மாமன் சங்கரப்பிள்ளை. அந்தக் காலத் திலை , கொழும்பு, ரய்ம்ஸ் ஒப் சிலோன் கம்பனியிலை ‘டிரக்டர்’. அண்ணை ஆறு முகத்தை அங்கை கூட்டிக் கொண்டு போய் படிப்பிச்சு எஸ்டேட் சுப்பிறின்டன் ஆக்கிப்போட்டார். அவற்றை மகளைத் தான் அண்ணை கட்டினவர். நானும் சயம்பு பள்ளிக்கூடத்திலைதான் படிக்கத் தொடங்கி, பிறகு 1940 இலை காரைநகர் இந்துக் கொலிச்சிலை எஸ். எஸ்.சி வரை இங்கிலீஸ் மீடியத்திலை படிச்ச னான். படிக்கேக்கையே கமம் செய்யத் தொடங்கீட்டன். என்னையும் அங்காலை கூட்டிக்கொண்டு போனவை. எஸ்டேட் டிலை வேலை பார்த்தனான். ஏனோ சரிப்பட்டு வரேல்லை. அம்மான்ரை சுகவீனத்தோடை இங்காலை வந்திட்டன் பிறகு இங்கேயே நிரந்தரக் கமக்காரன் ஆயிட்டன்”

“அக்கா இளவயதிலேயே மோசம் போனதாலை, அவவின்ரை பிள்ளையளை வளர்க்கிற பொறுப்பு என்னட்டை வர அத் தான்ரை சகோதரியையே கட்டினனான். எனக்கு இரண்டு பிள்ளையள். ஒரு ஆண், ஒரு பெண். 1986 றிலை இயக்கச் சண்டேக்கை என்ரை மகனைச் சுட்டுப் போட்டினம். அதோடை என்ரை வாழ்க் கையும் முடிஞ்ச மாதிரித்தான்” தலைப் பாகையாகக் கட்டிய துவாயை எடுத்து வாய்பொத்தி, அழத்தொடங்கினார் நடராஜா. சில நிமிடங்களுக்கு பின்னர் ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் உரையாடத் தொடங்கினார்.

“இது நாங்கள் சின்ன வயசிலை நடந்து பழகின தள்ளு வண்டி, மரத்தாலை செய் தது. எங்கடை குடும்பத்திலை எல்லாரும் மாறி,மாறி இதிலை தான் நடக்கப் பழகின னாங்கள்” என மூன்று சில்லுத்தள்ளு வண்டி ஒன்றைக் காண்பித்தார் அவர்.

கூடத்தின் அடுத்த பக்கத்தில் இன்னும் பல பொருட்கள் தூசி படிந்து கிடந்தன. ஒவ்வொன்றாகக் காட்டினார்.

“இது காம்புச்சத்தகம். இது அருவி வெட் டுற அரிவாள். இது மாட்டுக்குக் கட்டுற நுகச் சாமான்கள். இது நெல்லளக்கிற பறைகள். இது பரம்பரையாப் பாவிச்ச குத்து விளக்கும், சுவாமித்தட்டுச் சாமான் களும். இப்ப இது மாதிரிப் பித்தளை எங்க கிடக்கப் போகுது”

“இடையிலை,நான் ஒரு பிழை விட்டுட் டன். மகன் செத்தாப்பிறகு, கொஞ்ச நாளா எனக்கு மனஞ்சரியில்லாமல் இருந்தனான். இப்ப ரண்டு வருசத்துக்கு முன்னம், பழஞ் சாமான் வாங்கிற முஸ்லிம் ஆக்கள் வந்து கேட்டாப்போலை, மாடுகளுக் கெண்டு செய்து வைச்ச கொம்புக் குழாயையும், வேறை கொஞ்சப் பித்தளைச் சாமாங்க ளையும் எடுத்துக் குடுத்திட்டன். அவை சாமனுக்கெண்டு பெரிசா காசு தரேல்லை. அதுக்குப் பதிலா கொஞ்ச எவர் சில்வர் சாமான்களைத்தான் தந்தவை. பிறகு என்ரை பொருட்களைப் பற்றிக் கேள்விப் பட்டுப் பாக்க வந்தவைதான், “இதெல்லாம் பெறுமதியான சாமான்கள். ஆர் கேட்டா லும் குடாதையுங்கோ” எண்டு சொன் னவை. இப்ப ஆர் வந்து கேட்டாலும் ஒண்டும் குடுக்கிறதா இல்லை”

அவரது குழந்தைக் காலம் தொட்டு இன்று வரை காலத்தோடு கரைந்து போன பற்பல கதைகளைப் பேசியபடி மீண்டும் தலைவாசலுக்கு வந்து மரக்கட்டிலில் அமர்ந்தோம். அந்தக் கட்டில் கூட அவரதும், அந்தக் கிராமம் பற்றியதுமான பல கதைக ளைப் பேசி நிற்கின்றன. அவைகளையும், தலைவாசல் கதவினையும் பல்கலைக் கழக மாணவர்கள் படம் பிடித்துச் சென்ற தாக நடராசா சொன்னார். பின்னர் வெள் ளைத் துணியை விரித்து அதன்மீது சில் லறைக் காசைக் கொட்டினார். “இது பல காலமாச் சேர்த்த பித்தளை, வெள்ளிக் காசு கள். அப்பப்ப முசுப்பாத்தியாச் சேத்தது”

இதைவிட அவரிடம் பெரிய எழுத்துக் களிலான பழைய புத்தகங்களும் இருந்தன. அந்தக் காலத்தில் கோயில்களிலும், சுருட்டுக் கொட்டகையில் பொழுது போக் கிற்காகவும் வாசிக்கப்பட்ட புத்தகங்கள் அவை. பெரிய அச்சு எழுத்துக்களுடன், அதில் வரும் படங்கள் மரத்தில் ‘புளக்’ வெட்டப்பட்டு அச்சிடப்பட்டவை. அவை என்றும் அரிதானவை.













யாரிடம் அது போல அச்சிடப்பட்ட புத்தகங்கள் இல்லை. இடம்பெயர்வால் பலதை இழந்துவிட்டோம். அதில் பெரிய புராணம், திருச்செந்தூர் புராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம், ஈழத்துச் சிதம்பர புராணம் மற்றும் திருவா தவூரடிகள் புராணம் என்று பல புத்தகங் களும் அவர் சேகரிப்பில் அடங்குகின்றன.

“நான் போன கந்த சஷ்டிக்கும் திக்கரை முருகன் கோவிலிலை கந்தபுராணம் படிச்ச னான். இப்ப மட்டுமில்லை, எப்பவும் படிக்கிறனான்” என்றவரின் பேச்சு வேளாண்மையின் பக்கம் திரும்பியது.

வீட்டின் கொல்லைப்புறமுள்ள கொட் டிலுக்குள் எங்களை கூட்டிச் சென்றார். ஏறத்தாழ பத்துக் கலப்பைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர் விவசாயியாய் உருவான காலத்தில் பாவிக்கத் தொடங்கிய கலப்பையையும் தொட்டுக் காட்டினார்.

“இது அப்பு இருக்கேக்கை அடிப்பிச்சது. மற்றதுகள் உழவுக்குப்பத்தர் தெண்டு அடிப்பிச்சது. இதுகள் எல்லாம் ஐம்பது, அறுபது, எழுபது வருசத்துக்கு முற்பட்ட சாமான்கள். இப்ப மிசின் வந்ததாலை இதுக் கெல்லாம் வேலை இல்லாமல் போச்சு” என்ற வாறு தோளில் ஒரு கலப்பையைச் சுமந்து கொண்டு “இப்பிடித்தான் அப்பு முன்னாலைபோக, நானும் வேலைக்கார ரும் கலப்பையளையும், மாடுகளையும் கொண்டு பின்னாலை போவம்” என்று நடித் தும் காண்பித்தார். அவர் அந்தத் தருணத் தில், மனதால் ஏறத்தாழ ஐம்பது அறுபது வருடங்கள் பின்னோக்கிச் சென்றிருந்தார்.


அவர் தென்னோலைத் தட்டியினால் மறைத்த விறாந்தைக்குள் சென்றார். பின் தொடர்ந்தோம். அருவி வெட்டிய பின், நெல்லைத் தூற்றுவதற்காகக் களத்து மேட்டில், மேடை அமைப்பதற்காகச் செய்யப்பட்ட பொருத்து மேடை ஒன்றைக் காட்டினார். “இது அப்புவின்ரை காலத் திலை, ஆசாரியர்மாரிட்டைச் சொல்லிச் செய்விச்சது. சூடடிக்கேக்கைதான் கொண்டு போய் பூட்டி, நெல்லைத் தூத்திப் போட்டு உடனை கொண்டந்து கழட்டி அடிக்கினால், பிறகு அடுத்த போகத்துக் குத்தா தேவைப்படும். இப்ப இதை ஆரும் பாவிக்கிறேல்லை”

“அப்ப உள்ள கமத்துக்கும், இப்ப உள் ளதுக்கும் கன வித்தியாசம். அப்ப வேலை துவங்க முன்னம் நாங்கள் எல்லாரும் சேர்ந்து கூடி, நாள் பாப்பம். பிறகுதான் மாடு கொண்டுபோய் ஏர் பூட்டி, குப்பை கொட்டுறதோடை, கமவேலையைத் தொடங்குவம். தொடங்கினால் கமத்திலை பொங்கி வேள்வி வைச்சு அதுக்கெண்டு சடங்குகள் இருக்கு. வயலுக்க வரம்பு கட் டுறதே பெரிய விசயம். இப்ப ஆர் வரம்பு கட்டினம்? அந்த நாளிலை வயல்வேலை தொடங்கின நாள் தொடக்கம் நெல்லு வீட்டை கொண்டு வரும் வரைக்கும் நாள் பாத்துத்தான் எல்லா வேலையும். அப்ப கூலியும் ஆம்பிளையளுக்கு 10 கொத்து, பெண்டுகளுக்கு 5 கொத்து நெல்லுத்தான் குடுக்கிறது. மண்வெட்டி, கலப்பை மற்ற வயல் சாமான்களைச் செய்யிற ஆசாரிமார் களுக்கும் நெல்லுத்தான் குடுக்கிறது. எல்லாம் பண்டமாற்றுத்தான். ஆர் காசைக் கண்டது. இப்ப எல்லாத்துக்கும் காசு வேணும். இப்ப ஒரு நாள், ரண்டு நாளிலை வேலை முடிஞ்சுபோகுது. என்ன கேட்டாலும் இப்ப உள்ள ஆட்க ளிட்டை இருந்துவாற மறுமொழி “உங்களுக் கொண் டும் தெரியாது. பேசாமை இருங்கோ” எண்டுறதுதான். இப்ப நாங்கள் செய்தது மாதிரி பூமிக்கு வணக்கம் இல்லை. அது தான் எல்லாம் மாறிக்கிடக்கு”

மீளாநினைவுகளில் அவர் மூழ்கத் தொடங்கினார்.

03

# மக்கட் பெயர்



முனைவர்.ஜெ. அரங்கராஜ்

"கைவளை யாழி தொய்யகம் புனைதுகில்
மேகலை காஞ்சி வாகு வலயம்"
பரிபாடல்.7:46-47

பெருங்குளங்களை உண்டக்கி நாட்டை வளப்படுத்திய ஈழ மன்னனை கயவாகு (குளம் வழங்கியவன்) என அழைத்தனர். பிற்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஒரு பெயருக்குப் பல பொருள் கூறும் மரபால் கயவாகு எனும் பெயருக்கு வேறு பொருள்களையும் கூறுவராயினர். கயம், கயன் எனும் சொற்கள் யானையினையும் மீனினையும் குறிப்பதாகவும் அமையும். கயத்தில் உடையது கயன், கயம், கயத்தில் மலரும் பூக்கள் கயமலர் எனப்படும். கயமலர் நெய்தல் பூவுமாம். இதனை,

"கயமல ருண் கண்ணாய் காணாய்நின்
னையர்" சிலம்பு.12:17

"காயாநெய்தல் கனத்தல் பத்தி"
சிலம்பு.14:19

எனும் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறும் உரையாலும் அறியலாம்.

நெய்தல் மலர் போன்ற கரிய நிறத்தயுடையதால் யானை கயமுனி என அழைக்கப்படும். இதனை

"பொய்பொரு கயமுனி முயங்குகை
கடுப்ப" மலைபடு.107

எனும் அடிகளால் அறியலாம்.

யானைப்படையுடையவன் என கயவாகுவைக் குறிப்பிட்டு பிற்காலத்தில் பாலிமொழியில் மொழிமாற்றம் செய்யும் போது கஜபாகு என மாற்றிக் கொண்டனரெனலாம். உலகில் பழமையான தொல்குடிகள் மட்டுமே தங்களது பெயரோடு தங்களின் மொழியையும் இணைத்துக் கொள்ளும் மரபைக் கொண்டிருப்பர். அவ்வகையில் துணைக்கண்டத்தில் தமிழர்களும் நாகாப் பழங்குடிகளும் தங்களது பெயரோடு மொழியையும் இணைத்துக்கொள்ளும் மரபுடையவர். நாகலாந்தின் 'கோம்' மொழியையும் மொய்த மொழியையும் பேசக்கூடிய பழங்குடிகள் 'மேரிகோம்', 'இராஜேஷ்மொய்த' என்பனவாக தங்கள் பெயரோடு மொழியையும் இணைத்து வழங்குவர். தமிழர்களும் தமிழ்ச்செல்வி, தமிழ்மாறன், தமிழரசு, தமிழ்த்தாமரை, தமிழரையன் என்பனவாக வழங்கும் மரபுடையோர் மூலமொழி மரபில்லாதோர் இவ்வாறு வழங்கார்.கண்ணகி வழிபாட்டு மரபைக் கடைபிடித்த தமிழ்க் கயபாகுவை மெல்லச் சிங்கள வம்சாவளிக்குத் தள்ளி விட்டனர். தங்களது வரலாற்றைக் காப்பதில் ஆர்வம் செலுத்தாத தமிழர்களும் இதற்கு உடன்பட்டனர்.

பெயர்கள் பல்வேறு வடிவங்களில் அமையும். இவை அம்மக்களின் எண்ணங்கள் மொழியமைவு விளித்தல் தன்மை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டதாக விளங்கும்.

ஓரெழுத்துப் பெயர்கள் கோ, பா ஈரெழுத்துப் பெயர்கள் ஓரி, பாரி, ஆய், பாவை மூவெழுத்துப் பெயர்கள் - மிஞிலி, நங்கை, நம்பி, எழினி, அஞ்சி, ஆதன் நான் கெழுத்துப் பெயர்கள் - சாத்தன், அமுதன், சேந்தன், திதியன், தித்தன், கொற்றவை, குந்தவை ஐந்தெழுத்துப் பெயர்கள் - கரிகாலன், ஏறைக்கோன், கல்லாடன், பொய்கையார் ஆறெழுத்துப் பெயர்கள் - மூடிநாகனார், நெட்டிமையார், ஆதனுங்கன் ஏழெழுத்துப் பெயர்கள் - இளவெயினியார், இடைக்காடனார் எட்டெழுத்துப் பெயர்கள் - மாந்தரஞ்சேரல், கோக்கோதைமார்பன், இளஞ்சேட்சென்னி. ஒன்பதெழுத்துப் பெயர்கள் - கணைக்காலிரும்பொறை, பெருஞ்சித்தரனார். பத்தெழுத்துப் பெயர்கள் - கள்ளில் ஆத்திரையன், வெண்ணிக்குயத்தியார்.

பத்திற்கும் மேற்பட்ட எழுத்துகளை உடைய பெயர்கள் - பக்குடுக்கை நன்கணியார், வண்ணக்கண்ணுவன் அரையன் பாசுரன் அம்பலவன் என்பனவாக எழுத்துக்களின் எண்ணிக்கையில் அமையும். அத்தோடு ஒருசொல் பெயர்கள் அதியன், திதியன் இருசொற்பெயர்கள் திதியன் ஆதன், நெடுமான் அஞ்சி என்பனவாகப் பல சொற் பெயர்கள் வரை நீளும்.

இக்காலம் வரை தமிழர்கள் வைக்கும் பெயர் முறைகளைப் பின்வருவனவாகப் பகுத்துக்கொள்ளலாம். இவற்றில் பல விடுபட்டிருக்கவும் கூடும்.

கூட்டப்பெயர்கள், குடிப் பெயர்கள், சாதிப்பெயர்கள், இனப் பெயர்கள், தேயப்பெயர்கள், இறைப் பெயர்கள், முன்னோர்ப்பெயர்கள், தலைவரின் பெயர்கள், இலக்கியப்பெயர்கள், வட ஓசைப்பெயர்கள் (ஷ, ஸ, ஜ,ஜ்), செல்லப் பெயர்கள், புனைப்பெயர்கள், பட்டப்பெயர்கள், நிலப்பெயர்கள், தொழில் பெயர்கள், விளிப்பெயர்கள், குடும்பப்பெயர்கள், கொஞ்சுப்பெயர்கள், ஏசல் பெயர்கள், இயற்கையைப் பற்றிய பெயர்கள், நம்பிக்கைப் பெயர்கள், விருப்பப்பெயர்கள், வேறுபாட்டுப் பெயர்கள், நினைவுப்பெயர்கள், நடிகர்களின் பெயர்கள், நட்புப்பெயர்கள், அடையாளப்பெயர்கள், வரலாற்றுப் பெயர்கள், நயப்பெயர்கள், பொருள் விளங்கா பிறமொழிப் பெயர்கள் என்பன போன்று அமையும். இவற்றை விரிப்பின் இக்கட்டுரை பெருகும். ஆதலால் பிறிதொரு பகுதியில் விரிப்பினன்.

பெயர்களுக்கு முன்பும் பின்பும் பட்டமும் அடையும் சேர்க்கப்படுவது பண்டைக்காலம் தொட்டே பெரு வழக்காக இருந்து வருகின்றது. இக்காலத்திலும் அவ்வழமை தொடர்கின்றது. பட்டத்திற்கும் அடைக்கும் வேறுபாடுகள் உண்டு. எல்லாப் பட்டங்களும் அடைகளாகும். ஆனால் அனைத்து அடைகளும் பட்டங்களாகா. பெயரிற்கு முன், பின் வழங்கும் அனைத்தும் அடைகளாகும். அதன்படி பட்டங்கள் அடைகளின் ஒரு பிரிவாகும். பெயரடை என்பது அனைத்து வகைச் சிறப்பு, தாழ்வுகளைப் பெயரினை அணையச் சூட்டிக் கொள்ளப் படுவது. ஆனால் பட்டம் என்பது ஏற்புடையோரால் ஒருவரைச் சிறப்பித்து வழங்கப்படுவது. ஒருவருக்குரிய அடைமொழிப்பெயர்களைப் பிறிதொருவர் சூட்டிக்கொள்ளலாம். ஆனால் பட்டங்களை அப்படிச் சூட்டிக் கொள்ள வியலாது. பல்வகைப்பட்ட அடைமொழிகளைத் தமிழர்கள் சூட்டிக் கொண்டார்கள். அவை மக்கட்பெயரடைகள் எனப்பட்டன. அடைமொழிகள் ஊர், பண்பு, கொடை, குடி, குலம், செல்வம், பணி, புலமை போன்ற பல்வேறு கூறுபாடுகளை வெளிப்படுத்துவதாக அமையும். அடைகள் ஒரே பெயர் கொண்ட இருவரைப் பிரித்து அறிதலுக்கும் பயன்படும். நெடுந்தேர்ச் செழியன், சேர்ப்பன், பொருநன், பெரும என்பனவான அடைகள் அகப் பாடல்களில் பயிலும். ஒருவரது இயற்பெயர் மறைந்து அடைகளே இயற் பெயர்போல் வழங்குதலும் உண்டு. இடைக்குன்றூர்க் கிழார், சேக்கிழார், ஐயூர் முடவனார் என்பன போல் அமையும். உடற்குறைகள் அடைகளாக வருதலும் உண்டு. உறையூர் ஏணிச்சேரி முடிமோசியார் எனவும், செய்தொழில் அடையாக வருதலுக்குக் கூலவாணிகன் சித்தலைச் சாத்தனார் என்றும், ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியன், உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் முதலானவை கல்விப்புலமையால் கிடைத்த அடைமொழிகள். போர்வெற்றியால் கிடைத்த அடைகளும் உண்டு. செருப்பாழி எரிந்த இளஞ்சேட் சென்னி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பனவாக அவை அமையும். பிற்காலச் சோழர்களும் இவ்வடை மரபையொட்டியே கேரளாந்தகன், மதுராந்தகன், கங்கைக் கொண்டான், கடாரம் கொண்டான் போன்ற வெற்றியடைகளைத் தங்கள் பெயர்களோடு மெய்க்கீர்த்திகளில் இணைத்துக்கொண்டனர். மன்னர்கள் இறந்த இடத்தின் பெயர்களையும் அவர்களின் பெயர்களுக்கு அடைகளாக வழங்கினர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பதுவாக அமையும். வில்வலியாலும் வாள்வலியாலும் பெற்ற அடைகள் வல்வில்லோரி பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி என்பனவாக அமையும், கொடையால் சிறப்புற்றோர் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ்ச் சேரலாதன், கடையேழு வள்ளல்கள் என்பனவாக அடைகளைப் பெற்றனர்.

பட்டங்கள் பல்லவர்களின் ஆட்சிக் காலத்திலும் பிற்காலச் சோழர்களின் ஆட்சிக்காலத்திலும் பெருகின. மன்னனாக முடிசூட்டப்படுபவர் தமது இயற்பெயரை விட்டுப் புதிய பட்டப்பெயரை ஏற்கும் மரபும் உருவானது. இதன்வழியே இயற்பெயரான அருண்மொழியைத் துறந்து இராசராச சோழன் எனும் பட்டப் பெயரை ஏற்க வேண்டியதாயிறு. இராச சேகரி, பரகேசரி, கோப்பரகேசரி முதலான பட்டங்களைச் சோழர்கள் சூடலாயினர் சடையவர்மன், மாறவர்மன் முதலான பட்டங்களைப் பாண்டியர்களும் செராச சேகரன், பரராசசேகரன் எனும் பட்டங்களை யாழ்ப்பாணராச்சிய மன்னர்களும் சூட்டிக் கொண்டனர். இதன்வழித் தமிழுக்கு அயல்பட்டு நின்றனர்.

வீரராசேந்திர சோழனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சோழ சாளுக்கியத் திருமண உறவில் முதலாம் இராசேந்திர சோழன் மகள் அம்மங்காதேவிக்கும் சாளுக்கிய நரேந்திரனுக்கும் மகனான இரண்டாம் இராசேந்திரன் சோழ அரியணையைக் கைப்பற்றியவுடன் தன்னை சாளுக்கியக்குடிக்கும் சோழ குடிக்கும் பொதுவானவன் எனக்காட்டி உபயகுலோத்துங்கன் (உபய-இரு, குலோத்துங்கன்குடிகளைத் தாங்குபவன், இரு குடிகளையும் தாங்குபவன்) எனும் பட்டப்பெயரோடு ஆட்சிக்கு வந்தான். மன்னர்கள் மட்டுமல்லாது மக்களுக்கும் ஆட்சியாளர்களால் பட்டங்க்ள் வழங்கப்பட்டன.

மன்னர்களின் பெயராலும் பேரரசரின் பெயராலும் வழங்கப்படும் பட்டங்களே மிகவும் உயரிய பட்டங்களாகக் கருதப்பட்டன. இதனை

"பொன்னகருள் வேந்தன் பெயராற்
பொறியும் பெற்றான்

வின்மரிய தோள் விசய தத்தனுயிர்க்
கவசம்" சிந்தாமணி.1792

எனச் சிந்தாமணியில் காணலாம். பொறி எனும் சொல் பட்டம் எனப் பொருள்படும். இது அரசன் பெயரால் பெற்ற பட்டம் என நச்சினார்க்கினியர் கூறுவர்.

தஞ்சை பெரியகோயிலைக் கட்டிய 'குஞ்சரமல்லப் பெருந்தச்சன்' 'இராசராச குஞ்சரமல்லப் பெருந்தச்சன்' எனும் பட்டத்தை இராசராசசோழனிடம் பெற்றான். சேந்தன் பிள்ளை என்பவனது பணிக்காக 'இராசராச பல்லவராயன்' எனும் பட்டம் வழங்கப்பட்டது. சிவ தொண்டு செய்த அடியார்க்கு 'நக்கன்' எனும் பட்டமும் ஆடல், பாடல் கலைகளில் சிறந்த தேவராடியாருக்கு தலைக்கோலி பட்டங்களும் வழங்கப்பட்டன.

பெண்கள் தங்களது பெயரோடு ஊர்ப்பெயர்களைச் சேர்த்தலும் உண்டு. வெண்ணிக்குயத்தியார், மாறோகத்து நப்பசலையார் என்பனவாகவும், தந்தையின் பெயரைச் சேர்த்து பெருகோழி நாய்க்கன் மகள் நக்கண்ணையார் என்பதாகவும் அமையும். சிலப்பதிகாரத்தில் கண்ணகியை முதன்முதலில் அறிமுகம் செய்யும் அடிகளார் அவளது தந்தையின் பெயரைக் குறிப்பிட்டு அவரின் மகள் கண்ணகி என்றே அறிமுகம் செய்கின்றார்.

"போகநீள் புகழ்மன்னும் புகார்நக
ரதுதன்னில்

மாகவா னிகர்வண்கை மாநாய்கன்
குலக்கொம்பர்

ஈகைவான் கொடியன்னா ளீராறான்
டகவையாள்

அவளுந்தான்

............

மாதரார் தொழுதேத்த வயங்கிய
பெருங்குணத்துக்

காதலால் பெயர்மன்னுங் கண்ண
கியென் பாண்மன்னே" சிலம்பு.22-29

(தொடர்ச்சி அடுத்த வாரமும்...)



# குற்றமே தண்டனை

அவுஸ்ரேலிய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஹோபார்ட்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லாவை இனத்துவேச வார்த்தைகளால் திட்டிய ரசிகர் ஒருவருக்கு ஹோபார்ட் நீதிமன்றம் மூன்று வருடங்களுக்கு அவுஸ்ரேலியாவில் நடைபெறும் எந்தவொரு கிரிக்கெட் போட்டியையும் மைதானத்தில் சென்று பார்வையிடுவதற்குத் தடை விதித்துள்ளது.

மேற்படி போட்டியின் முதல்நாள் ஆட்டத்தின் போது 24 வயதுடைய ரசிகர் ஒருவர் அம்லாவை நோக்கி இனத்துவேச வார்த்தைகளால் திட்டியதை கிரிக்கெட் அவுஸ்ரேலியாவின் கவனத்துக்கு கொண்டு வந்தது தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை. இதற்குப் பின்னர் துரிதமாகச் செயற்பட்ட தஸ்மானியப் பொலிஸார் சிசிரிவி கேமராவின் உதவியுடன் சம்பந்தப்பட்ட ரசிகரைக் கைது செய்து ஹோபார்ட் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி தண்டனையும் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

"கிரிக்கெட்டில் இனத்துவேசம், நிறவெறி போன்றவற்றை ஊக்குவிக்கும் எந்தவொரு செயலையும் அனுமதிப்பதற்கு நாம் விரும்பவில்லை. அவ்வாறு ஏதாவது சம்பவம் ரசிகர்கள் மத்தியில் இடம்பெற்றது தெரிய வந்தால் அவர்கள் உடனடியாகப் பொலிஸாரால் மைதானத்தை விட்டு அப்புறப்படுத்தப்படுவர் என்று நாம் எற்கனவே எச்சரிக்கையையும் விடுத்துள்ளோம்" என்று கூறியுள்ளது கிரிக்கெட் அவுஸ்ரேலியா.

இது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில் "கடந்த காலங்களிலும் தென்னாபிரிக்க அணி அவுஸ்ரேலிய மண்ணில் இத்தகைய இனத்துவேசத் தாக்குதல்களுக்கு ஆளாகி இருந்தாலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நாம் விசனமடைந்திருக்கிறோம். ஆனால் இம்முறை இனத்துவேச விடயத்தில் கிரிக்கெட் அவுஸ்ரேலியா சட்டப்படி எடுத்த முயற்சிகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, அம்லாவின் மீது இனத்துவேசத் தாக்குதல்கள் நடப்பது இது முதன் முறை அல்ல. 2006 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தென்னாபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் தொலைக்காட்சி வர்ணனையில் ஈடுபட்ட அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் டீன் ஜோன்ஸ், அம்லாவை தீவிர வாதி என்று குறிப்பிட்டதனால் போட்டியை ஒளிபரப்பாக்கிய ரென்ஸ் போர்ட்ஸ் குழுமம் அவரை உடனடியாகவே வர்ணனையாளர் பதவியில் இருந்து நீக்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# புறக்கணிப்பு

ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் வீரர்கள் இனி ஊடகங்களுடன் பேச மாட்டார்கள் என்று அணியின் தலைவர் மெஸி அணியினருடன் சேர்ந்து ஊடகவியலாளர் மாநாட்டில் சில தினங்களுக்கு முன்னதாக அறிவித்துள்ளார். ரஸ்யாவில் 2018 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணத் தொடருக்கு ஆர்ஜென்ரீனா நேரடித் தகுதி பெறவேண்டுமானால் தென்னமெரிக்க நாடுகளுக்கிடையிலான குழுப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களுக்குள் வரவேண்டியது அவசியமாகும். ஆனாலும் தற்போது வரை 5ஆவது இடத்திலேயே உள்ளது. நான்காவது இடத்தில் இருக்கும் சிலியுடன் நடைபெறவுள்ள இன்னும் ஒரு போட்டி மட்டுமே மீதமுள்ளது. அதில் தோல்வி அடைந்து நான்கு இடங்களுக்குள் வரமுடியாத பட்சத்தில் பிளேஓவ் சுற்றுக்களில் மறுபடி விளையாடி தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஆர்ஜென்ரீனாவுக்கு ஏற்படும்.

இதனாலேயே ஆர்ஜென்ரீனாவின் தகுதிச்சுற்று ஆட்டங்களை ஊடகங்கள் விமர்சித்து வருகின்றன. இந்நிலையில் ஆர்ஜென்ரீனா வீரர் அலாவெஸ்லி போதைப்பொருள் உட்கொண்டதான குற்றச்சாட்டும் எழுந்துள்ளமை ஊடகங்களுக்கு அவலாக வாய்த்துவிட்டது. இதனையடுத்தே எங்கள் விளையாட்டை மட்டுமே பேச உங்களுக்கு உரிமை இருக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கை குறித்துப் பேசுவதற்கு உரிமை இல்லை என்று மெஸி தெரிவித்துள்ளார்.

ஆனாலும் மெஸியின் கூற்று ஒருவகையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது. இம்முறை நடைபெற்ற கோபா அமெரிக்கா இறுதிப்போட்டியில் சிலியிடம் தோல்வி அடைந்ததனால் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக மெஸி அறிவித்திருந்தார். இந்நிலைக்கு நாட்டுக்காக பெருந்தொடர்களில் ஒரு வெற்றிக்கிண்ணத்தைக் கூடப் பெற்றுக்கொடுக்க முடியாத மெஸியின் ஆதங்கம் ஒருபுறம் என்றால் மறுபுறம் ஊடகங்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் மெஸி ஆர்ஜென்ரீனாவை விட பார்சிலோனா கழகத்துக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதான குற்றச்சாட்டும் பார்சிலோனா அணிக்காக விளையாடும் சிறப்பான ஆட்டத்தை சொந்த நாட்டுக்காக விளையாடும் போட்டிகளில் வெளிப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டும், முதன்மையானதாக இருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் மெஸியின் தனிப்பட்ட வாழ்வை அல்லாமல் விளையாட்டுலக வாழ்வை மட்டும் விமர்சித்திருந்த நிலையிலேயே ஓய்வு முடிவை அவர் அறிவித்திருந்தார். அத்தோடு மறுபடி நாட்டுக்காக ஆடுவதில்லை என்பதில் மெஸி நீண்டநாட்களாக பிடிவாதமாகவே இருந்தார். இன்று ஊடகங்கள் எங்கள் விளையாட்டைப் பற்றி மட்டுமே விமர்சிக்க உரிமை உள்ளது என்று கூறுவது முரண்நகையாகவே உள்ளது.

வீரர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஊடகங்கள் அளவுக்கதிகமான தலையீட்டை மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. என்றாலும் விளையாட்டு வீரர்களை லட்சோபலட்ச ரசிகர்கள் தமது ஆதர்ஷ நாயகராகக் கொள்ளும் பொழுது வீரர்களும் தனி மனித ஒழுக்கத்தைப் பேணுவது தவிர்க்க முடியாதது.

தொகுப்பு: சி. விமலன்







இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 26.11.2016 அன்று
107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.